www.tamilarangam.net

# சமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வீடு என்ற அடிப்படை உரிமை சனநாயகம் இல்லையாம்!

அண்மையில் மாநாடு ஒன்றில் உரையாற்றிய பிடல் காச்ரோ ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க ஒரு வீடு என்பதை ஓர் அடிப்படை உரிமையாக சர்வ-தேசிய ரீதியில் அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரினார்.

இதையடுத்து அமெரிக்கா இதை நிராகரித்தது. இதன் அர்த்தம் ஒவ்வொரு மனிதனுக்கும் வீடு கொடுப்பது அவசியம் இல்லை என்பதையே பிரகடனம் செய்தனர். இது சார்ந்த சனநாயகம் தான் அமெரிக்கா தலைமையிலான உலக பாராளுமன்ற சனநாயகமாகவுள்ளது. அதாவது பணக்காரன்-ஏழை, பல வீடுள்ளவன் - வீடற்ற வீதியில் அலையும் பறதேசி மக்கள் வாழும் உலக வாழ்வுதான் சனநாயகமாம்!

ஒரு மனிதன் தான் தங்கிவாழ ஓர் இடததை மறுப்பது ஒரு மனித உரிமை மீறலாகும். ஓர் எலிக்குக் கூட ஒரு வளையுண்டு. ஆனால் மனிதனுக்கு அது இல்லை. மனிதாபிமான பிச்சையோ, வேறு எந்த பெயரிலுள்ள வகையான கோரிக்கையோ அல்ல இது. ஒரு மனிதனின் அடிப்படை உரிமையாகும். இதை மறுப்பவர்கள் மக்கள் விரோதிகளாவர். உலகையே துறையாடும் அமெரிக்கா தலைமையிலான விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரின் ஆடம்பரத்துக்காக ஒரு மனிதனின் வாழும் உரிமை மறுக்கப்படுகிறது.

வாசனர்களே! உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும் ஆரோக்கியமான வி-மர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

சந்தாவுக்கான அன்பளிப்பு:- ஐரோப்பிய நாடுகள் 6பிரதி 100 F 12பிரதிகள் 200 F
ஏனைய நாடுகள் 12பிரதிகள் 225 F



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏகாதிபத்திய நுகத்தடிக்குள் இலங்கை: தமிழீழமும் அதைநோக்கி!

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும், அதன்மீதான யுத்தமும் தொடரும் போக்குடன் இலங்கை, தமிழீழம் என இரு பிரதேசமும் ஏகாதிபத்தியத்திக் நுகத்தடிக்குள் வேகமாகச் செல்கின்றது. சிங்களப் பெருந்தேசிய இன வெறியை எதிர்த்து ஜனநாயகத்துக்கான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம், ஏகாதிபத்தியம் பற்றி கவலையின்றி அதனுடன் இணைந்துபோகத் தயாரான நிலை என்பது, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சரியான பக்கங்களை ஒழித்துக் கட்டியது.

அதாவது ஏகாதிபத்தியத்தின் விருப்பை, அதன் இயல்பை புரிந்துகொள்ள மறுத்த புலிகள் முதல் பல்வேறு குழுக்கள், ஏகாதிபத் தியத்தின் நோக்கை நிறைவு செய்தனர்.

இன்னுமொரு புறம் தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத் தியச் சதி என்றும், இன்னுமொரு பக்கம் தேசிய விடுதலைக்குப் போராடிய குழுக்கள் புலிகள் மக்கள் விரோதத்தைக் கூறியபடி பெரும் தேசியத்துடன் இணைந்து ஏகாதிபத் தியத்துக்குச் சேவை செய்தனர். அதாவது மொத்தத்தில் தமிழ் - சிங்களப் பிரிவுகள் தம்மீதான ஏகாதிபத்திய ஒடுக்குமுறையை உணர்ந்துகொள்ளவில்லை. அல்லது

ஆதரித்துப் போனார்கள். இன்று இலங்கையில் யுத்தப் பொலுளாதாரம் மொத்தத்தில் தமிழ் சிங்களப் பிரிவுகளை மேலும் ஏகாதிபத்தியத் திடம் அடகுவைக்கப்பட்டுள்ளது.

இன்று மூன்றாம் தர மத்தியஸ்தம் என்ற புலி, அரசு, மற்றும் எல்லாப்பிரிவினர்களின் கோரிக்கையும், மொத்த இலங்கை மக்களையும் மீளமுடியாத அடிமைத்தனத்துக் குள்ளும், நவகாலனித்துவ இறுகிய பிடிக்குள் மேலும் மேலும் நகர்த்திச் செல்லவும் உள்ளனர். இன்று இலங்கையில் அமெரிக்கா தனது ஒலிபரப்பை தொடங்கவுள்ளது. அது இலங்கைக் கடற்பரப்பில் இராணுவப்பயிற்சியைச் செய்கிறது. அமெரிக்கா இராணுவம் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பங்குகொண்டு உதவுகிறது. இலங்கை அரசானது எப்படி எதைச் செய்யவேண்டும் என அது அரசியல், சமூக, பொருளாதார எல்லாத் துறைகளிலும் திட்டமிட்டு இயக்குகிறது. இலங்கையின் தலைநகரம் இன்று வாசிங்டன் தான். அதாவது சந்திரிகா அரசு என்பது ஒரு பொய்மையே. ஏதை எப்படிச் செய்வது எனத் தீர்மானிக்க முடியாத

www.tamilarangam.net

இந்த அரசு எல்லாவற்றுக்கும் ஏகாதிபத்தியத்தையே எதிர்பார்த்து நிற்கிறது.

182 லட்சம் சனத்தொகையைக் கொண்ட இலங்கை இன்று உலகில் 50 சனத்தொகை அதிகம் கொண்ட நாடாகும். இதன் இராணுவபலம் உலகில் 34வது இடத்தில் உள்ளது. அதேநேரம் தேசிய உற்பத்தி வருடம் 1183 கோடி டெலர்களைக் கொண்டு 76வது இடத்தில் பின்தங்கி வறுமையில் உள்ளது. வருட வருமானம் தலா 650 டொலர்களைக் கொண்டு 168வது நாடாக உலகில் மிக மோசமான வறுமைக்குள் சிக்கியுள்ளது.

உலகின் தள வருமானம் அதிகூடிய யப்பான் நாட்டுடன் ஒப்பிடின் 60மடங்கு பின்தங்கி வறுமையில் உள்ளது. அதிகுறைந்த வருமானத்தையுடைய சைரிலை (Zaire) விட 5மடங்கு அதிகமாகும். ஊலகில் மிக வறுமை' 'க்குள் உள்ள இலங்கை இன்று யுத்தத்தை மேலும் மேலும் தீவிரமாகியுள்ளது. 1996 வரவு செலவல் 1/3 பற்றாக் குறையுடன், மொதத் வரவு செலவில் நாலில் ஒரு பங்கை (பற்றாக்குறையை விட) இராணுவத்துக்கு ஒதுக்கியுள்ளது. அதாவது பொருளாதாரம்மேலும்மேலும் சிரழிக்கும் வகையில், நாட்டை தேசியம் என்ற பெயரால் ஏகாதிபத்திய தேசியத்துக்கே அடகு வைக்கும் எல்லைக்குள் இட்டுச்செல்கின்றனர்.

1995 ல் மொத்தக் கடன் 790கோடி டொலராக அதிகரித்துள்ளது. அதேநேரம் 1995ல் பெற்ற அன்னிய நாட்டுக்கடன் 67 கோடி டொலர் ஆகும். பணவீக்கம் 7.7 வீதமாகும் அதாவது இலங்கை சர்வதேச நிதிப்பண்பாட்டு நிறுவனத்திடம் அடகுவைக்கப்படுகிறது. இன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது அதை யார் கோரினும் அது உலகை சர்வதேச நிதி மற்றும் பண்பாட்டு நிறுவனத்திடம் அடகுவைப்பதேயாகும் இதைப் புரிந்துகொள்ள மறுப்பின் அவர்கள் முட்டாள்கள் அல்ல. மாறாக ஏகாதிபத்திய விசுவாசிகளாகும்.

இன்று தேசிய விடுதலைப் போர் ஒரு ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பாக மாறவேண்டும். சிங்கள் முற்போக்கு வாதிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்ட தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டும். இந்த இரண்டு பிரிவுகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஐக்கியப்பட வேண்டும். இதைப்பற்றி கதையாத, எழுதாத எந்தவிதமான எழுத்துக்களும், செயல்களும் சொற்களும் அச்சொட்டாஏகாதிபத்திய தலையீட்டை வரவழைப்பதாகவே அமையும். சமுக அக்கறைக்குரிய வர்களே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இன்று இலங்கை செல்லும் வழி மேலும் மேலும் ஏகாதிபத்தியத்தின் நேரடிக் காலனியாக மாறிவிடுமா என்ற அளவுக்குள் செல்லுகின்றது. இதை தடுக்க நாம் கருத்து, செயல் ,நடைமுறையென அனைத்தையும் கையில் எடுக்க முன்வருவீர்களா?⦿

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால்
அது மாபெரும் சக்தியாக உருவாகும்

www.tamilarangam.net



# முல்லைத்தீவு முகாம் தகர்ப்பு புலிகளை ஒரு மரபு இராணுவமாக மாற்றிவிட்டதா?

விடுதலைப் புலிகள் அண்மையில் முல்லைத்தீவு முகாமை முற்று முழுதாகவே கைப்பற்றி இருந்தனர். இது விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். இத்தாக்குதல் தமிழ் மக்கள் மீதான இலகுவான இன அழிப்பை தற்காலிகமாக பின்தள்ளியதுடன், தென்னிலங்கை இனவாத இராணுவப் பிரச்சாரத்தையும் சிலகாலத்துக்கு பின்தள்ளியுள்ளது.

மறுபுறம் முல்லைத்தீவு முகாம் தகர்ப்பு திருகோணமலை திட்டமிட்ட குடியேற்றங்களை தற்காலிகமாக சிதைத்துடன், கிழக்குக்குச் செல்லும் பாதைகளை இலகுவாக்கியதுடன், கிழக்கில் மேலும் போரட்டத்தை கூர்மையடைய வைத்ததுடன், வடக்குக் கிழக்குப் பிரிப்பைச் செய்ய முனைந்த அரசின் தொடர்ச்சியான சதிவேலைகளை பகுதியளவு தகர்த்துள்ளது. இது ஒருபுறம் சாதகமாக தமிழ் மக்களுக்கு உள்ள அதேநேரம், விடுதலைப் புலிகளின் மக்கள் விரோதநிலை, மேலும் இத்தாக்குதலை வைத்து குறும்தேசிய இனவாதத்தை உயர்த்தவும், மாற்றுக் கருத்து நபர்கள் மீது தாக்குதலை மேலும் தீவிரமாக நடாத்தவும், எல்லைப்புற சிங்கள, முஸ்லீம் அப்பாவி மக்கள் மீது இலகுவான

தொடர்ச்சியான தாக்குதலை நடத்தவும் கதவு திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த சாதக பாதக அம்சங்களுடன்தான் இம்முகாம் தகர்ப்பு தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை (புலிகளை அல்ல) தேசிய விடுதலைப் போராட்டத்தில் வரவேற்க்கத்தக்க ஓர் அம்சமாகும். இத்தாக்குதலைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கொரிலா நிலையிலிருந்து மரபு இராணுவமாக மாறிவிட்டனர் என்ற பிரச்சாரம் எல்லாத் தரப்புப் பிரச்சார அமைப்புக்களும் செய்கின்றன.

உண்மையில் புலிகள் மரபு இராணுவமாக வளர்ந்துள்ளனரா? 1990களில் மாங்குளம் முகாம் தகர்த்தபோதும், பின் பூநகரி, ஆனையிறவு முகாம் தகர்ப்பின் போதும் புலிகளின் பிரச்சார அமைப்புகள் (பார்க்க:- 'தரிசனம்' விடுதலைப் புலிகள்) ஒரு மரபு இராணுவமாக மாறிவிட்டதாக பிரச்சாரம் செய்தனர். இதையொட்டி இராணுவ ஆய்வு செய்யும் சிவராம் (முன்னாள் PLOT கொலைகளுக்கு அரசியல் சாயம் கொடுத்தவர்) கூட புலிகளுடன் இணைந்து (பார்க்க:- 'சரிநிகர்') கூறிவந்தனர்.

நாம் விடுதலைப் புலிகளின் 7-8-96 களத்தில் இணைத்திருந்த ஒரு விசேட இணைப்பில் "முல்லைத்தீவு படைத்தள வரலாறும் , பெ: நும் சமர் 'ஓயாத அலைகள்" என்ற கட்டுரையைப் பார்ப்போம்.

www.tamilarangam.net

" மிகவும் நுட்பமான முறையில் தமிழ்த் தேசிய தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் திட்டமிட்டு வழிநடத்தப்பட்ட இத்தாக்குதல் அரசின் பல எதிர் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு புலிகளின் வியூகங்களை அமைத்திருந்தனர்......."

" தொலைத் தொடர்பு கோபுரத்திற்கு அருகிலிந்த ஆயுதக் களஞ்சியத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த நேரத்தில் இருந்து இராணுவத் தளபாடங்களை அகற்றும் வேலையை புலிகள் ஆரம்பித்து விட்டனர்......."

" பலகோடி பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் புலிகளுடன் இணைந்து அப்பகுதி மக்களும் மிகுந்த உற்சாகத்துடன் இரவிரவாக முகாமிலிருந்து அப்புறப்படும் பணியில் ஈடுபட்டனர். இதே சமயம் முகாமிலிருந்த கட்டிடங்களும், காவலரண்களும் புலிகளால் தகர்த்து நிர்மூலமாக்கப்பட்டன..." . இது களத்தில் செய்தி. அதேநேரம் எம் மண்ணிலும், இங்கு தொலைபேசி செய்தியிலும், கைப்பற்றிய ஆயுதங்களை அகற்றிய நிகழ்வில் மக்கள் ஈடுபட்ட நேரம் முழுமையாக ஆயுதத்தின் சில பகுதியை புலிகளிடம் சேர்க்கவில்லை எனவும் ஒரு சில மக்கள் எடுத்து மறைத்த ஆயுதங்களை அதை மீளக் கொண்டு வந்து தரும்படி அறிவித்தனர்.

மொத்தத்தில் இந்தச் செய்திகள் ஒன்றுக்கொன்று முரணான வகையில் உள்ளதுடன் முல்லைத்தீவு தாக்குதல் முற்றாக அழித்து ஒழிக்கும் கனவு, தாக்குதலுக்கு முன் புலிகளுக்கு இருந்திருக்கவில்லை. அதன் அடிப்படையில் திட்டமிடப்படவில்லை என்பது, கட்டிடங்களைத் தகர்த்ததன் மூலமும், ஆயுதங்களை மக்கள் அகற்றும் வகையில் ஈடுபடுத்தப்பட்டதிலிருந்தும் தெளிவாகுகின்றது. பூநகரி முகாம் தாக்குதலில் கூட இதே வகையில் ஈடுபட்டதும், பூநகரியில் முக்கியமான முழுமையான கேந்திர ராணுவ நிலைகள் புலிகளின் வசம் பூநகரியில் விழுந்த போதும் முன்கூட்டியே திட்டமிட்ட பின்வாங்கல் நடவடிக்கையே பூநகரியை முழுமையாக கைப்பற்றி கட்டுப்படுத்த முடியாததிற்கு காரணமாகும். முல்லைத்தீவுத் தாக்குதல் ஆயுத்தை குறியாக வைத்து நடத்தப்பட்ட ஒரு தாக்குதல். ஆயுத அகற்றல், கிட்டிடங்களை தகர்த்தல் என்ற எல்லைகள் ஒரு கொரிலாத் தாக்குதல் என்ற எல்லைக்குள் நின்ற ஒரு நடவடிக்கையே. மரபு இராணுவமாக புலிகள் வளர்ந்திருப்பின் யாழ் குடாநாட்டை விட்டு இவ்வளவு வேகமாக பின்வாங்கி இருக்க முடியாது. முல்லைத்தீவு போன்ற ஒரு பெரிய முகாம் தகர்க்கும் வல்லமை கொண்ட புலிகள் யாழ் குடாநாட்டை விட்டு வெளியேறியதை நியாயப்படுத்த முடியாது.

மாறாக ஒரு மரபு இராணுவம் என்பது தனது பலம், பலவீனத்தில் இருந்து முல்லைத்தீவு தாக்குதலை முன்கூட்டியே விட்டு வரும் வகையில் திட்டமிடுவது இல்லை. திட்டத்தில் ஏதும் தோல்வி ஏற்படின் இறுதி நேரத்தில் தான் கட்டிடத்தைத் தகர்ப்பார்கள். இங்கு விடுதலைப் புலிகள் மரபு நிலையில் இருந்தல்ல கொரிலா நிலையில் இருந்தே பிடித்த அடுத்த விநாடியே தகர்த்த நிகழ்வும், முன்கூட்டியே முல்லைத்தீவை தாக்கி முற்றாக அழித்துவிடும் அளவிற்கு திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தின் சொந்த பலவீனங்கள் சாதகமாகக் கண்ட புலி வீரர்களின் தொடர்ச்சியான தாக்குதல் உற்சாகமே

www.tamilarangam.net

முல்லைத்தீவு தாக்குதலில் முற்றாக அழித்தொழித்த மொத்த வெளிப்பாடுமாகும்.

ஒரு மரபு இராணுவம் கட்டியமைக்கும் வகையில் பத்து வருடங்களுக்கு மேலான நிர்வாகத்தையும் பரிவளங்களையும் கொண்ட யாழ் குடாநாட்டிலோ, அல்லது இன்று வன்னியிலோ புலிகள் ஈடுபட முடியாத வகையில் அவர்கள் சொந்த அரசியல் பலவீனங்களில் சிக்கிப் போய் வெளிவரமுடியாமல் உள்ளனர். 1990 மாங்குளம் தாக்குதலை மரபு தாக்குதல் என அன்று வர்ணித்த புலிகள் 1996ல் முல்லைத்தீவு தாக்குதலை மீள இன்றும் மரபுத் தாக்குதல் என வர்ணிக்கும் சொந்த அரசியல் சீரழிவின் இயலாமையை நாம் தெளிவாகக் காணமுடியும்.
முகாம் அழிப்புகள் மட்டும் ஒரு மரபு இராணுவாமாக மாறிவிட மாட்டாது. மாறாக மரபு இராணுவமாக மாறும் வகையில் போராட்டம் இயக்கப்பட்டிருக்க வேண்டும். அது புலிகளின் அரசியலில் ஒக்காலும் சாத்தியமில்லை.


ஒரு கொரிலா நடவடிக்கை கூட ஒரு முகமை நிர்மூலம் செய்யமுடியும். யாழ் குடாநாட்டிலிருந்த சில ஆயிரம் புலிகள் வன்னியை நோக்கிய நகர்வும், வன்னியில் இராணுவ எண்ணிக்கைக்கு சமமாகவோ, மேலாகவோ, குறைவாகவோ நின்று அதை அழிக்கும் பலம் புலிக்கு இருந்தது. இது புலிகளின் வலுவான ஒரு தொடர்ச்சியான தாக்குதல் வடிவமே ஒழிய, புலிகளின் இராணுவம் பண்புரீதியாக மாறிய நடவடிக்கையல்ல.மரபு ராணுவம் என நிறுவுவது கற்பனை செய்வது என்பது போலியான விடுவிக்கப்பட்ட யாழ் குடாநாடு போன்றோ, உலகில் 4வது தோற்ற இந்திய ராணுவம் போன்றோ ஒரு போலி மதிப்பீடுகள் இட்டுக்கட்டி எதிர்காலத்தில் முட்டாள்த்தனமான அழிவுடன் கூடிய ராணுவ இழப்புக்களையும், பாரிய மக்கள் அழிவையும், தேசிய விடுதலையின் பின்னடைவையும் பெற்றுத் தரும். அதை வெளியில் இருந்து புலியைப் புகழ்வது போல் நடித்து புலிகளின் சொந்த மதிப்பீட்டை காணவிடாது செய்ய சிலர் திட்டமிட்டு இயங்குகின்றனர். இதை நாம் மிகத்தெளிவாக இனம் கண்டு கொள்வதும், போராட்டத்தை சரியாக வழிநடத்தவும் உதவும்.



## இந்திய ஜனநாயகக் கூத்து!

சுதந்திரம்பெற்றுதில் இருந்து 1990 கள் வரை இந்திய மத்திய அரசு மாநில அரசுகளை கலைப்பது என்பது ஜனநாயகப் பண்பாக காட்டி வந்துள்ளது. இந்த வகையில் 86 முறை மக்களால் தேர்ந்ததை ஜனநாயகம் எனக் கூறும் இந்திய ஜனநாயக வாதிகளால் சட்ட விரோதமாக கலைக்கப்பட்டுள்ளது அதாவது வருடம் இரு முறை இரண்டு மாநில அரசுகளை மக்களின் தீர்ப்புகளை குழிதோண்டிப் புதைக்கும் வகையில் ஜனநா யக விரோதமாக செயற்பட்டு உள்ளனர் அதாவது இத்தேர் தலை யார் ஜனநாயகம் என்கிறார்களோ, இதை மக்கள் அரசு என்கிறார்களோ அவர் களே இதைக்கலைத்து தமது போலி மக்கள் அரசு முக மூடியையே இனம்காட்டுகிறார் கள் இந்த கூத்தாடிகள்.

www.tamilarangam.net



# தேசியம் புறநிலை சாராத அகநிலை சார்ந்தது, வர்க்கம் சாராத நடுநிலை கற்பனைப் பொருளாம்! - இது ஓர் உயிர்ப்பின் வாதம்

உயிர்ப்பு-6 வெளிவந்துள்ளது. இம்முறையும் சேறடிப்புத்தான். இம்முறை ஆசிரியர்தலையங்கங்கள், டிசம்பர் 1994 வெளியாகிய அ.மார்க்சின் 'தேசியம் ஒரு கற்பிதம்' என்ற பகுதிக்குள் உள்ளடங்கியுள்ளது. தேசம் என்பது ஒரு கற்பிதம் என்ற வரையறையில் தொடங்கி அ.மார்க்ஸ் அதில் குறிப்பிட்ட சிவத்தம்பியின் சைவ வேளாளர் சித்தாந்தமே தேசியம் என்ற எல்லையைத் தாண்டிவிடவில்லை.

அடுத்து இம்முறை இதழோ முஸ்லிம் தேசம்பற்றிய சிறப்பிதழாக வெளிவந்துள்ளதுடன், ஆசிரியர் தலையங்கத்தில் தேசியம் பற்றிய வலிந்தெடுத்த திணிக்கும் அரசியல் முடிவுக்கு எதிராகவே யதார்த்த உண்மைகளை 'முஸ்லிம் தேசம்' பற்றிய கட்டுரை அவர்களையும் மீறி கொண்டுவந்துள்ளது. அத்துடன் முஸ்லிம் தேசம் என்ற கட்டுரை சுயமுரண்பாட்டின் மொத்த வடிவமாகவே உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இம்முரண்பாடு தலைக்குத் தொப்பியைச் சரிக்கட்ட எடுத்த முயற்சியால் அவர்களின் தேசியம் என்ற மாாக்சிசவிரோதப் போக்கு வெகுவாக அம்பலமாகிவிட்டது. இனிநாம் கட்டுரையின் சில பகதிகளை சுருக்கமாக ஆராய்வோம்:-

உயிர்ப்பினர் குறிப்பிடுகின்றனர்:- "தேசியவாதம் தொடர்பாக நாம் முகம்கொடுக்கும் இன்னுமொரு முக்கிய பிரச்சினை, தேசியவாதம் முற்போக்கானதா? அல்லது பிற்போக்கானதா? என்ற பிரச்சினையாகும்..... மரபார்ந்த மார்க்சியத்தில் பொதுவில் சித்தாந்தம் பற்றி புரிதல் பேதியளவு எட்டப்பட வில்லை என்பதை விமர்ச்சிக்கும் அமைப்பியலாளர்கள் சிலர், சித்தாந்தம் என்பதை விரிவாக ஆராய முனைந்துள்ளனர். அவாகளின் கருத்துப்படி வெகுஜன சித்தாந்தங்கள் (Popular ideolagies) என்பதைப் பொதுவில் நடுநிலையானவையாகும் இவை வேறு எந்தச் சித்தாந்தத்துடன்

www.tamilarangam.net

இணைந்து (Aritculate பண்ணப்பட்டு) உள்ளனவோ அதனைப் பொறுத்து இந்த வெகுஜன சித்தாந்தங்களும் முற்போக்கு அல்லது பிற்போக்கு பாத்திரங்களை ஆற்றுகின்றது. மதம், தேசியவாதம் என்பன வெகுஜன சித்தாந்தங்களுக்கு சிறந்த உதார ணங்களாகும்.... இவ்வாறே தேசியவாதம் கூட அத்துடன் இணைந்துள்ள எனைய சித்தாங்களைப் பொறுத்தே பிற்போக்கு அல்லது முற்போக்கு பாத்திரங்களை ஆற்றுகின்றது. எனவே தேசியவாதம் தன்னளவில் முற்போக்கானதோ அல்லது பிற்போக்கானதோ அல்ல. மாறாக அதை முன் எடுத்துச் செல்லும் சமுக சக்திகளின் தன்மையைப் பொறுத்தே அந்தத் தேசியவாதத்தின் பண்பும் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதொரு தேசியவாதமானது பிற்போக்குப் பாத்திரம் ஆற்றுவது என்பதற்காக புரட்சியாளர்கள் அந்த தேசிய இயக்கங்களையே ஒட்டுமொத்தமாக நிராகரித்து விடாமல் குறிப்பிட்ட தேசியவாதத்துடன் இணைந்துள்ள பிற்போக்கு சித்தாந்தங்களை அகற்றி....." என தமது வர்க்கமற்ற தேசிய எல்லையில் இருந்து தமது மார்க்சியவிரோதக் கருத்தியலைத் தொடர்கின்றனர்.

முதல் எமது வரியிலேயே அவாகளின் அரசியற் பம்மாத்தை தேலுரிக்க முடியும். அதாவது அவர்கள் கூறுவதுபோல் பிற்போக்கு தேசியவாதத்துடன் இணைந்து அதன் பிற்போக்கை அகற்றும் பணியில் முற்போக்கை கையாள ஜெர்மனிய கிட்லரின் தேசியத்துடன், தென்னாபிரிக்க வெள்ளை-இன நிறத்தேசியத்துடன், அமெரிக்க வெள்ளையின நிறத்தேசியத்துடன், சிறிலங்கா சிங்கள இனவெறித் தேசியத்துடன், ஐரோப்பிய நிறவெறி நாசிச தேசியத்துடன், இந்திய பாரதிய ஜனதாவின் இந்துத் தேசியத்துடனும் இணைந்து அதன் பிற்போக்கு அம்சங்களைக் களைந்து முற்போக்காக் கோரும் அதாவது உயிர்ப்பின் வர்க்கமற்ற தெய்வீக அரசியல்தான் என்ன? விளக்குவீர்களா?

பொதுவில் ஒடுக்கும் எல்லாத் தேசியமும் எப்பொழுதுமே பிற்போக்கானது. இது என்னவென்றால் ஸ்ராலினின் கூறுகளையும், அதன் அரசியல் போக்கின் சரியான அரசியல் மதிப்பீடுகளையும் மறுக்கும் போக்கில் உயிர்ப்பின் சிங்கள இனவாதத் தேசியத்துடன் இணைந்து அதை முற்போக்காக மாற்றக் கோருகின்றனர். வேறொன்றுமில்லை. அதாவது, சிங்கள முற்போக்குவாதிகளை சிங்கள இனவாதத் தேசியத்தில் இணைந்து அதன் முற்போக்கான தேசிய பாதையை அடைந்து முத்திபெற கோருகின்றனர். அதுசரி இருக்குது எனக் கூறும் சிங்கள முற்போக்குத் தேசியத்தை இக்கட்டுரையில் ஒரு வரியில் தன்னும் அடையாளப்படுத்த முடியாத உயிர்ப்பின் அரசியல் வங்குரோத்துக்கு முதலில் முற்போக்குப் பாத்திரத்தைக் கொடுக்க ஆளெயில்லை, இதுக்கிடையில் மீள மீள ஒரே வார்த்தையைக் கூறிக் கரடிவிடும் இவர்கள் அதில் எந்தத் தெளிவையும் காட்டமுடியாத பேதமை ஏன்?

அதுசரி, வெகுஜன சித்தாந்தம் நடுநிலையானது என வேறு றீல் விடுகின்றனர். மக்கள் எந்தச் சித்தாந்தமும் இன்றி உலவும் சதைப்பிண்டங்கள் என்கின்றனர். அழகாக ஆணித்தரமாக உலகைக் கொள்ளையடிப்பவர்களுக்காக இப்படி சேவை செய்வதன் மூலம், மாக்சிசத்தின் சரியாக கூறுகளை மறுதலிக்கின்றனர். இது ஒரு கருத்துமுதல்வாத நியாயப்படுத்தலாகும். சிந்தனை என்பது பொருளிலிருந்து

www.tamilarangam.net

தோன்ற முடியுமே ஒழிய சிந்தனையிலிருந்து ஒரு பொழுதுமே பொருள் தோன்ற முடியாது. (உதாரணமாக) தேசியம் என்ற சிந்தனை யாதார்த்த மக்கள் கூட்டத்தின் இருப்பிலிருந்து (இதுதான் இதன் பொருள்) தோன்றுகின்றது. மாறாக தேசியத்திலிருந்து மக்கள் கூட்டத்திற்கு சிந்தனை தோன்றுவதில்லை. ஆகவே தேசியம் குறித்த வெகுஜன சிந்தனை எப்போதும் நடுநிலையாக இருப்பதில்லை. மாறாக மக்கள் கூட்டத்தின் வாழ்நிலையின் பிரதிபலிப்பாகவே வெளிப்படுகின்றது. இது எந்த வாழ்நிலை சார்ந்த கருத்துப்போக்கு அம்மக்களின் சிந்தனையாக இருக்கின்றதோ அதன்போக்கில் பிரதிபலிக்கின்றது. உலகம் ஏகாதிபத்திய உலக ஒழுங்கில் உள்ளவரை, பாட்டாளி முதல் அனைத்து பிரிவு மக்களும் முதலாளித்துவ வாழ்நிலையின் அதன் சிந்தனைப் போக்கில் சிந்திக்கின்றனர், செயற்படுகின்றனர்.

எனவே வெளிப்படும் சிந்தனைப் போக்கு அதன் இருப்புக்கான அடிப்படை வழிகளில் எப்போதும் பிரதிபலிக்கின்றது. இதன்மீதான ஒரேயோர் எதிர்நிலைச் சிந்தனைப்போக்கு பாட்டாளிவர்க்க சிந்தனையாகும். இது தவிர்ந்த அனைத்துச் சிந்தனைப்போக்கும் இந்த உலக ஒழுங்குள் உட்பட்ட பல சீர்திருத்தம் கொண்ட பிரிவுகளேயாகும்.

பொதுமக்கள் சித்தாந்தம் என்பது தனியாக இந்த உலக ஒழுங்குக்கு வெளியே கிடையவே கிடையாது. அப்படி இருக்குமெனக் கூறுவது அசல் கருத்துமுதல்வாதக் கற்பனையேயாகும். பொதுமக்கள் எப்போதும் வெவ்வேறு தளத்தில் இவ்வுலக சிந்தனைப்போக்கை கொண்டு செயற்படுகின்றனர். பொதுமக்கள் சித்தாந்தம் நடுநிலையானது எனக் கூறுவதன் மூலம் வெளியிலிருந்துவரும் சித்தாந்தவாதிகள் புறநிலையாக வானத்திலிருந்து விழுபவர்களாக இனம்காட்ட முனைகின்றனர். முன்னேறிய சித்தாந்தவாதிகளைப் பொறுத்தவரை அவர்கள் அம்மக்களுக்குள் இருந்துதான் உருவாகுகின்றனர். அதன்போக்கில் நியாயப்படுத்துபவர்களும், அதை தெளிவாக முறித்துக்கொண்டு வெளிப்படுபவர்கள்தான் முன்னேறிய சித்தாந்தாவாதிகள். இவர்களின் உருவாக்கம் என்பது மக்களின் சிந்தனைத் தளத்தில் இருந்துதானே ஒழிய வெளியிலிருந்து அல்ல.

மக்கள் எப்போதும் ஒரு சித்தாந்த எல்லைக்குள் கட்டுப்பட்டு உள்ளனர். உலகம் உழைப்பை, அதன் போக்கில் உற்பத்திச் சாதனத்தையும் சார்ந்துள்ள வரை அது இரண்டுபட்டு உள்ளவரை மக்கள் அதன்போக்கில் இரண்டுபட்டுள்ளனர். அதனால் சிந்தனையும் இரண்டாக பிளவுபட்டே உள்ளது. (உதாரணமான) ஒருவன் இன்னொருவனின் கழுத்தைப்பிடித்து நெரித்துக்கொள்கின்ற இடத்தில் மக்கள் கூட்டம் அதில் ஒருவன் சார்ந்து நிச்சயமாக இயங்கவேண்டும். அதைத்தடுத்தல் என்பது கொலைகாரனுக்கு எதிரானதாக இருக்கும். பேசாமல் நடுநிலை என்று சொல்லின், நியாயம் கிடையாது - அது கொல்பவனுக்கு துணையானது. ஒரு மனிதனின் சித்தாந்தம் இந்த நடவடிக்கை ஒருபக்கம் சார்ந்து செயற்படுகிறதே ஒழிய நடுநிலை என்று கூறுவது, உயிர்ப்பின் இந்த உலக ஒழுங்கு சார்ந்த அரசியல் நியாயமாகும். ஒரு பெண்ணை ஓர் ஆண் கற்பழிக்கும் போது அவ்விடத்தில் நான் நடுநிலையெனின், அல்லது அதில் மக்கள் சித்தாந்தம் நடுநிலையானது எனின் இங்கு கற்பழிப்பு ஆணாதிக்கம் சார்பில்

நடுநிலையால் நியாயப்படுத்தப் படுகின்றது.

நடுநிலைபற்றிய புலம்பலை எடுப்பின் இது மேற்கு ஜனநாயகவாதிகள் மேற்கு அரசுகளை பாதுகாப்பவர்கள் கூறுவது போல் பாசிசத்துக்கும் கமியூனிசத் துக்கும் இடையில் ஜனநாயகவாதிகள் (டெமக்கிரட்) உள்ளனர் என்பதை மறைமுகமாக நிறுவுவதே உயிர்ப்பின் நோக்கம். அ.தாவது பாசிஸ்ட், கம்யூனிஸ்டுக்கிடையில் டெமக்கிரட் உள்ளனர். இதுதான் சிறந்த ஓர் நடுநிலை. இதுதான் மக்களின் நடுநிலைச் சித்தாந்தம் என்பதை நிறுவுவதன் மூலம் உலகின் இன்றைய ஒழுங்கில் உள்ள அரசு அமைப்பு நடுநிலையாக உள்ளது எனக் காட்டுவதே உயிர்ப்பு, அ.மார்க்ஸ் போன்றோரின் அவாவாகும்.

ஆண்மையில் இந்தியாவில் வெளியாகிய 'இருட்டில் மனிதர்கள்', 'கோவேறு கழுதை', 'கழிசடை' என்ற மூன்று தலித்திய நாவல்களில் வரும் பாத்திரங்களின் இயல்பான வாழ்வு நடுநிலை என யாரும் கூறின் இருக்கும் சாதியமைப்பையும், சுரண்ட லையும் பாதுகாக்கும் கைங்கரியமே ஆகும். இங்கு இப்பாத்திரங்களின் சாதியமைப்பை தானாக ஏற்றுக் கொள்ளும் யதார்த்தம், காலம் காலமாக அவன்மீது இட்டுக்கட்டி அதேயே ஒரு ஒழுக்கப்பண்பாடாக மாற்றும் நிலை எப்போது நடுநிலை சார்ந்த சித்தாந்தமல்ல. மாறாகச் சுரண்டலுக்கு உள்ளாக்கும் வகையில் அவன்மீது அடிமைச் சின்னம் அறையப்பட்டதே ஆகும்.

உயிர்ப்பு மீள மீள ஒரே வரிமூலம் கதைவிடுவார்கள். எனவே நாம் மேலும் சில நடைமுறைகளை ஆராய்வோம். முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப் பட்டபோது தமிழ்பேசும் மக்கள் சித்தாந்தமின்றி நடுநிலையாக நின்றனர் என்பது உயிர்ப்பின் அரசியல் முடிவாக எடுக்கவேண்டும். ஆனால் யதார்த்தத்தில் மக்கள் அதை ஒன்றில் எதிர்க்கின்றனர். மற்றவர்கள் கண்டும் காணாமல் போவதன் மூலம் ஆதரிக்கின்றனர். எம்மண்ணில் அராஜகத்துக்கு எதிராக எழுந்த போராட்டத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் குறிப்பிடத் தக்கது. இதில் ஈரோசும், யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் தாம் நடுநிலையென அறிவித்தது. இதைக் கோட்பாட்டளவில் கூறியவர் சிவத்தம்பி. பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அராஜகப் பேர்வழிகளுக்கும் இடையில் நடுநிலை என்றால் அது அதன் அராஜக சார்பை, அதன் துணைபோதலை மறுப்பதேயாகும்.

இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது அதை எதிர்க்காத இந்தியா இந்துமக்கள் நடுநிலை சித்தாந்தத்தைக் கொண்டிருந்தாகள் என்பது உயிர்ப்பின் கோட்பாட்டு முடிவு. இது ஒரு மோசடி! மாறாக இந்தியா மக்கள் இதை எதிர்க்காத நிலையென்பது அதன் இடிப்புக்கு ஆதரவானதேயாகும். இப்படி உயிாப்பின் வர்க்கமற்ற, முற்போக்கு பிற்போக்கற்ற நடுநிலைக் கோட்பாடு மேலும் மேலும் அகலமாக நிர்வாணப்படுத்த முடியும். இது போதும்.

அவர்கள் முன்வைத்த ஓர் உதாரணத்தை எடுத்துவைத்து ஆராய்வோம்.
"கிறிஸ்தவ மதமானது புரட்சியாளர்க ளிடம் விடுதலை இறையியலாகவும் (Liberation theology) பிற்போக்கா ளரிடத்தில் பழைமைவாதத்திற்கு முண்டு கொடுப்பதாகவும்...." உள்ளது எனக் கதைவிடுகிறார்கள். அதாவது கிறிஸ்தவ மதம் நடுநிலையானது, இரண்டு பக்கமும் பயன்படுத்தப்

www.tamilarangam.net

படுகின்றது எனக் கூறுவதன் மூலம் காதுக்குப் பூச்சுத்துகின்றனர். நடுநிலையானது எனின் அது புரட்சியைச் செய்யுமெனின் நீங்கள் அத்தத்துவத்தைக் கொண்டே புரட்சி செய்ய முடியும். ஏனெனில் நடுநிலை எப்போதும் காலத்தைக் கடந்த எப்பொழுதுமே நடுநிலையானது. ஆனால் அதை உயிர்ப்பு ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். ஏனெனில் அம்பலப்பட்டால் மார்க்சிசத்தை சேறடிக்க முடியாதல்லவா?

கிறிஸ்தவ இறையியல் என்பது அதன் அடிப்படை சித்தாந்தத்தில் சில பகுதி ஒடுக்குமுறையை விமர்சிக்கின்றது. இந்த விமர்சனம் என்பது அங்கிருந்த மக்களின் எழுச்சியின் வடிவாக உருவானதே கிறிஸ்தவ சித்தாந்தம். இந்த சித்தாந்தம் என்பது சுரண்டல் ஒழுங்கக்கு உட்பட்ட ஒரு சீர்திருத்தல் மட்டுமேயாகும். இச்சித்தாந்தங்கள் சாதாரண மக்கள் முதல் அடக்கியாள்பவன் வரை நியாயப்படுத்தக் கூடிய பல கூறுகளை தன்னகத்தே உள்ளடக்கியிருந்தது. இதில் மக்கள், மதவாதிகள், மன்னர்கள் தமக்குச் சார்பானதையே உயர்த்திப் பிடிததனரே ஒழிய அது நடுநிலையாக இருந்ததில்லை. அது இருக்கும் சமூகத்தினை பேண செய்யும் சீர்திருத்தங்கள், மக்களை ஏமாற்றி அடக்கிவைக்கும் நடவடிக்கையாகும். உதாரணமாக இதே கிறிஸ்தவ சித்தாந்தம் பெண்கள் மீது முழுமையாக அடக்குமுறையைக் கொண்டிருந்தது. இதை சாதாரண மக்கள் முதல் கொண்டு மன்னர்வரையும் ஏற்றிருந்தனர். இதுபோன்ற பொதுத்தன்மையில் தான் அச் சித்தாந்தம் உருவாகுகின்றது. இது நேரெதிரான இருமக்கள் பிரிவையும் முரண்பாட்டுடன் இணைத்துவைத்துள்ளது. இங்கு தத்துவம் நடுநிலையாக இருந்ததில்லை.

உதாரணமாக இன்றுள்ள ஏகாதிபத்திய உலக ஒழுங்கை எடுத்துக்கொள்ளின் சாதாரண மக்கள் முதல் உலக ஆளும் ஏகாதிபத்திய பீடங்கள் வரை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த சித்தாந்தம் உள்ளது. முரண்பாடுகள் எப்போதும் சில அர்ப்பதீர்வுகள் மூலம் சமாளிக்கப்படும் போது பெரும்பாலான மக்கள் இதை அனுசரித்து நியாயப்படுத்தி நிற்கின்றனர். இங்கு மக்கள் நடுநிலை சித்தாந்தவாதியாக கற்பனையில் இருப்பதில்லை. மக்கள் தாம் விடுதலையாக இருப்பதாக எண்ணவைப்பதன் மூலம் உலகம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதை மறுக்கும் உயிர்ப்பு பொதுமக்கள் நடுநிலையாளர்கள் என்ற சித்தாந்தத்துக்குள் உள்ளனர் எனக் கூறி இந்த உலக ஏகாதிபத்திய ஒழுங்கை மறைமுகமாக ஆதரித்து நிற்கின்றனர்.

அடுத்து ஒருதேசமமும், அதன் மீதான சுயநிர்ணயம் குறித்த ஸ்ராலினின் ஆய்வுகளை இவர்கள் கேலிசெய்கின்றனர். ஸ்ராலின் ஒரு தேசமாக அது சுயநிர்ணயத்துடன் இருக்கவேண்டின் மொழி, பிரதேசம், பொருளாதாரம், கலாசாரம் என்பன இருக்கவேண்டுமென வரையறுத்தார். இந்த ஆய்வு மிகச்சரியானது மட்டுமன்றி, அது மட்டுமே ஒரு தேசத்தின் அடிப்படை அம்சமாகும். இதை மறுக்கும் உயிாப்பு "தேசம் குறித்த ஸ்ராலின் முன்மொழிந்த வரையறைகள் நவீன சமூகங்களின் வரலாற்றில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. பல சமூகங்களின் தேசிய உரிமைகள் பறிக்கப்படவும், தேச இருப்புக்கள் சிதைக்கப்படவும், தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்படவும், ஸ்ராலினின் வரையறைகள் காரணமாயின.....

www.tamilarangam.net

ஸ்ராலின் வரையறுத்த பிரதேசம், மொழி, பொருளாதாரம், கலாசரம் என்பவற்றை பூரணத்துவப்படுத்தாத சமுகங்கள் மட்டுமின்றி, மதம், நிறம், பூர்வீகம், இனம் (Race) பொதுவான வரலாற்று அனுபவம்.... போன்ற புதிய கூறுகளின் அடிப்படையில் தம்மை ஒன்றிணைத்த சமூகங்கள் தேசங்களாக உருவாகியுள்ளன." எனக் கூறும் உயிர்ப்பு ஸ்ராலினின் வரையறையை மீறி உருவான சமுகம் ஒன்றைத்தன்னும் (100 பக்கக் கட்டுரையில்) காட்டமுடியவில்லை. ஸ்ராலினின் வரையறைக்கு உட்பட்ட, உட்படாத மக்கள் கூட்டம்மீது நடாத்தப்பட்ட உலக வன்முறைகளை எல்லாம் கூட்டியள்ளி வந்து ஸ்ராலின் மீது கொட்டி இட்டுக்கட்டி குற்றம்சாட்டும் மாாக்சிச விரோதிகளின் உண்மை நலன் சுரண்டும் வர்கங்களைப் பாதுகாப்பதே!

அதுசரி, ஸ்ராலின் வரையறையை விமர்சிக்கும் இந்த நடுநிலை சித்தாந்த புதிர்களின் கோட்பாட்டை ஆராய்வோம்:- ஸ்ராலின் வரையறையான மொழி, பிரதேசம், பொருளாதாரம், கலாசாரம் என்ற இந்த நான்கும் இன்றி எந்த ஒரு தேசமும் உருவாக முடியாது. ஒரு மொழியின்றியோ, ஒரு பிரதேசமின்றியோ, ஒரு பொருளாதாரம் இன்றியோ, ஒரு கலாசாரம் இன்றியோ ஒரு தேசம் உருவாகமுடியும் என்று கூறுபவர்கள் உண்மையில் மக்களுக்கு கரடிவிடுகின்றனர். நவீன உலம் என மீள மீள கூறும் இவர்களின் உலகில் ஒரு நாட்டைத்தன்னும் அப்படிக் காட்டமுடியாது. இதில் ஏதாவதொன்று இன்றி ஒரு நாடு உயிர்வாழ்தல் அல்ல உருவாகவே முடியாது. முடியும் முடிந்தது எனின் இவர்களின் தேசியம் பற்றிய 102 பக்கக் கட்டுரையில் ஒரு நாட்டைக்கூட காட்டமுடியவில்லை என்பதை வாசகர்கள் தெளிவாகக் கவனிக்க வேண்டும்.

இவர்கள் வைக்கும் புதிய கூறுகளான மதம், நிறம், பூர்வீகம், இனம், மற்றும் விட்டுவிட்ட சாதியம் போன்ற எது இல்லை என்றாலும் ஸ்ராலினின் நான்கு அடிப்படையும் கட்டாயமாக இருக்கவேண்டும். மதம், நிறம், இனம், பூர்வீகம், சாதியம்... போன்றன எல்லாம் இருந்தும் மொழி, பிரதேசம், பொருளாதாரம், கலாசாரம் என்ற நான்கில் ஏதாவது ஒன்று இல்லை என்றாலும் ஒரு தேசம் உருவாக முடியாது. இது நடைமுறையுடன் கூடிய சமுகவிஞ்ஞான முடிவாகும்.

மார்க்சிய விரோத ஸ்ராலின் எதிர்ப்பு முடிவை முதலில் எடுக்கும் உயிர்ப்பு பின் தனது தத்துவத்துக்கு விளக்கம் காட்ட ஏதேதோ சொல்ல முனைகின்றனர். ஆனால் அது விஞ்ஞான உண்மைகளை மறுதலிக்கின்றது. ஸ்ராலின் வரையறை எது ஒன்று இன்றியும் ஒரு தேசம் உருவாக முடியும் எனக் கூறின், உண்மையில் அதன் பிரிந்து செல்லும் சுயநிர்ணயம் இல்லை என்பதைக் கூறாமல் கூறி அம்மக்களை ஏமாற்றுவதாகும். ஏமாற்றுவது மட்டுமன்றி அத்தேசியம் வளர்த்தெடுக்கப்படவேண்டிய தேவையை மறுப்பதன் மூலம் அந்தப் பிரிவு மக்களின் வளர்ச்சியை திட்டமிட்டு தடுப்பதாகும். இது செங்கொடியை ஆட்டியபடி செங் கொடிக்கு எதிராக இயங்குவது போலாகும்.

இந்த நான்கு கூறுகளில் ஏதாவது ஒன்று இல்லையெனினும், அல்லது அவைகளின் வளர்ச்சி பெற வேண்டியிருப்பின் அவைகளை தேசமென வரையறுப்பது அவர்களின் பெயரால் அவர்கள் மீது ஒரு சேறடிப்பாகும். தேசம் என்பது வாழ்நிலையில் மட்டும் கொண்டு வரையறுப்பதாகும். இவர்கள் குறிப்பிடும்

www.tamilarangam.net

மதம், நிறம், பூர்வீகம், இனம்... எது இருப்பினும் அவர்கள் ஸ்ராலின் குறிப்பிட்ட நான்கில் ஒன்று இல்லையெனினும், அல்லது பகுதியளவு இருப்பினும் ஒரு தேசமாக உருவாக முடியாது. உருவாக முடியுமென்று கற்பனையில் நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஒரு கருத்து உருவமாக மட்டுமே இருக்கும். மதம், நிறம், இனம், பூர்வீகம்..... ஏதாவத ஒன்று ஒரு தேச உருவாக்கத்தின்போது முதன்மைபெறின் அது ஸ்ராலினின் நான்கு அடிப்படைகளின் மீது மட்டுமே கருக்கொள்கிறது. தேசம் உருவாக வேண்டின் அத்தேசியத்திற்கு எதிராக இன்னுமொரு தேசிய ஒடுக்குமுறை உள்ளபோது மட்டுமே இந்த ஏகாதிபத்திய ஒழுங்குக்குள் சாத்தியமானது.

இந்த ஒடுக்குமுறை என்பது ஆளும் வர்க்கம் தனது சுரண்டலை தகவமைத்துக் கொள்ளும் வகையில் இனம், பூர்வீகம், மதம், நிறம், சாதீயம், மொழி, கலாச்சாரம், பிரதேசம், பொருளாதாரம் என எதையாவது ஒன்றை முதன்மையாக முன்தள்ள முடியும். அது எதுவாக இருந்தாலும் எப்பொழுதும் அதன் பிரிவு நலன் வர்க்கம் சார்ந்ததே! அது அந்த மக்களின் வசதியான கண்ணி எது என்பதைத் தேர்ந்தெடுக்கும் சுரண்டும் பிரிவுகள் அதைக்கொண்டே தேசியமுரண்பாட்டை முன்தள்ளு கின்றன. இதனால் பாதிக்கப்படும் மற்றைய பிரிவு அந்நலன் இழப்பை ஈடுகட்ட எதிர்த்தேசியத்தை முன்தள்ளுகின்றது. இதை உதாரணங்களாளப் பாாப்பின்

☯ இலங்கையில் இன்றுள்ள தேசிய இனமுரண்பாட்டுக்கான அடிப்படை என்ன? பிரிட்டீஸ் ஆட்சியாளர் பிரித்தாளும் கொள்கையில் தொடங்கிய இனமுரண்பாடு, சிங்கள மக்களின் பிரிட்டீஸ்சுக்கு எதிரான நீண்ட ஆரம்ப போராட்டங்களால் வித்திடப்பட்டது. நிர்வாக அலகுக்கு தேவையான பிரிவுகளை உருவாக்குவதில் பிரிட்டீஸ் அமைப்பு தமிழ் பிரிவுகளை சார்ந்திருந்தது. இப்பிரிவு இலங்கையில் ஆளும் ஓர் இனமாக நிர்வாகத் துறைகளில் அமர்ந்துகொண்டது. பிரிட்டீஸ் ஆட்சியில் கொள்ளை களையும், சுரண்டல்களையும் செய்து கொடுக்கும் பிரிவாக உருவான தமிழ் பிரிவுகள் மீது, சிங்கள மக்களின் இயல்பான போர்குணாம்சம் வெளிப் பட்டது. தமிழ் பிரிவுகள் தமக்குக் கிடைத்த இந்த சலுகைகளைப் பயன் படுத்தி சிங்களக் கிராமப்புறங்களைச் சூறையாடினர். இங்கு இதற்கு எதிராக சரியான அடையாளப்படுத்தல் மட்டுமே சுதந்திரத்திற்கானதும், வர்க்க அடிப்படையிலான ஒரு தேசிய போராட்டமாக மலந்திருக்கும்.

மாறாக சிங்கள இனத்துக்குள் இருந்த அதேவேலைகளையே செய்ய தமிழருடன் போட்டிபோட்ட பிரிவுகள் அதைத் தமிழ் விரேத போக்காக அம்மக்களின் இயல்பாக இருந்த அதே போக்கில் வளர்த்தெடுத்தனர் இந்த தமிழ், சிங்கள ஆளும் பிரிவுக்கு இடையில் சுரண்டுவதில் இருந்த போட்டி என்பது படிப்படியாக சிங்கப்பிரிவு கைப்பற்றிக் கொண்டதில் இருந்து, அதை இழந்த பிரிவு போராட்டங்களைத் தொடுக்கிறது. இது வளர்ச்சியும் போது ஒரு தேசத்தின் இருப்புக்கே அது அச்சுறுத்தலாக அமைகிறது. இது எல்லாத்துறைகளில் விரிவுபடுகிறது. எனவே இங்கு தேசியம் என்பது ஒரு சுரண்டும் நலன்சார்ந்து அதன் இருப்பின் மீது கட்டியமைக்கப் படுகின்றது.

☯ அடுத்து இந்தியாவில் பாரதஜனதாவின் மதத் தேசியத்தை

www.tamilarangam.net

ஆராய்வோம். பார்ப்பான ஆதிக்கத்துடன் சுரண்டல் சமுகம்மீது தொடர்ச்சியாக அதன் இருத்தலுக்கு அச்சுறுத்தல் எழுப்பப்பட்டு வருகிறது. பின்தங்கிய பிரிவுகளின் எழுச்சிகள், முன்பு எல்லாமே பார்பான் என்று இருந்தநிலை இன்று பங்கிடப்படுகிறது. இந்நிலையில் பார்ப்பானுக்கு தனது நிலையை தக்கவைக்கவும், மேலும் தனக்கு சதகமான வகையில் மாற்றியமைக்கவும் தேவைப்படுவது ஒரு தேசியம். அந்தத் தேசியம் இந்துத்தேசியம் ஆகும்.

இது முஸ்லிம்களுக்கு எதிரான இந்துத் தேசியமாக இனம்காட்டப்படுவதன் மூலம் தனது சுரண்டலை மறைக்கவும், இதன் மூலம் தனது ஆட்சியை ஸ்தாபிப்பதன் மூலம் தனது சுரண்டும் நலன்களைக் காப்பாற்றவும் முடியும். இங்கு இந்தியாவின் இந்துத் தேசிய உணர்வு தன்னிச்சையாக, வர்க்கசார்பின்றி பிறப்பதுமில்லை. மாறாக இது ஒரு நடுநிலையாகவும் செயற்படுவதுமில்லை மாறாக அம்மக்களிடம் இருக்கக் கூடிய இந்து உணர்வுளை அதன் போக்கில் சுரண்டும் வர்க்கம் தனக்கு சாதகமாக மாற்றியமைக்கிறது. எனவே இங்கு தேசியம் என்பது சுரண்டும் வர்க்கம் சார்ந்த முதலாளித்துவ கோரிக்கையாக பரிணாமிக்கின்றது.

☯ ஐரோப்பிய நாசிய இன, நிற தேசியத்தை ஆராயின் அது இன்றுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தில் விரிவுபடுகிறது. ஒரு வெள்ளையினத்தவன் வேலை யின்றி இருக்க, ஒரு கருப்பு இனத்தவன் வேலைசெய்யும் போக்கு, வெள்ளை முதலாளியை விட யூத முதலாளிகள் அதிகம் சுரண்டுபவர்களாக இருந்தனர். இது இயல்பில் இந்த வெள்ளையின மக்களின் பல்வேறு பிரச்சனையில் பதிக்கப்படும் போது வெளிநாட்டவரே காரணமென அவன் முன் வருகிறது. இதைத் தனக்கு சாதகமாக்கும் ஐரோப்பிய வெள்ளையின ஆளும் முதலாளிகள் அவர்களின் போக்கை வளர்த்தெடுக்கும் பணியில் நாசிகளாகத் தம்மை இனம்காட்டுகின்றனர். இந்த நாசி தேசியம் அடிப்படையில் அந்த வெள்ளையின மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைக்கு சுரண்டும் வர்க்கமே காரணம் என்பதை மறைக்கும் வகையில் முன்னெடுக்கும் முதலாளித்துவ தேசியவாதமே ஆகும்.

நாம் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சனையில் அவர்கள் சுயநிர்ணயத்துக்கு உரியவர்கள் என்பதை முதன்முதலாக அங்கீகரித்தவர்கள். இது எந்தவகையில் என்றால் மொத்த முஸ்லீம் மக்கள் சார்பாக அல்ல. மாறாக கிழக்கில் வாழும் ஒரு குறித்த பிரதேசம், ஒருமொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றைக் கொண்ட முஸ்லிம் மக்களை மட்டும் உள்ளடக்கியேயாக அவர்களை நோக்கி வளர்த்தெடுக்கபடவேண்டிய வகையில் கிழக்குப் பகுதி தவிர்ந்த பகுதிகளில் உள்ளவர்கள் உள்ளனர். முஸ்லிம் தேசிய இனமாக முற்றாகப் பரிணாமித்து விட்டது என்ற உயிர்ப்பின் எடுகோள் எப்போதும் அத்தேசிய இனத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் ஒரு கடிவாளமாகும். முஸ்லிம் தேசிய இனம் தனது குறித்த கிழக்கு பகுதியை மையமாக வைத்து மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒரு தேசிய இனமாக உள்ளது. இது சுயநிர்ணயம் என்ற அச்சாணியில் ஒரு தேசமாகப் பரிணாமித்து வருகிறது.

அடுத்து உயிர்ப்பின் இன்னுமொரு மார்க்சிய விரோத தன்மையைப் பார்ப்போம்:-

www.tamilarangam.net

" நாம் தேசியவாதத்தை தனியான ஒரு கட்டமைப்பு என்கிறோம். இப்படியாக தேசியவாதத்தை நாம் பொருளாதாரத்திலிருந்து வேறுபட்ட கட்டமைப்பாக கருதினால், தேசம் என்பது வர்க்கம் என்பதிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை சரியாகக் குறித்துக் கொள்வது முக்கியமானதல்லவா? வர்க்கம், தேசம் என்பவற்றுக்கு இடையிலான மிகவும் அடிப்படையான வேறுபாடு வர்க்கம் என்பது புறநிலை சார்ந்தது, தேசம் என்பது அகநிலை சார்ந்தது என்பதாகும்" என உயிர்ப்பு தனியாகவும் அடையாளப்படுத்தியும் உள்ளனர்.

இந்த உயிர்ப்பின் வார்த்தைகளில் 'முக்கியமானதல்லவா?' எனக் குறிப்பிட்டவர்கள் தமது முஸ்லிம் மக்கள் கட்டுரையில் அதைக் கடைப்பிடிக்க முடிந்ததா? எனப் பார்ப்போம். அவர்களே முஸ்லிம் மக்களின் தேசிய இன உருவாக்கத்தின் வர்க்கப் பாத்திரத்தை மறுக்காத பக்கத்தை நாம் மீள எடுத்து வைப்பதன் மூலம் அவாகளின் கோட்பாடு எப்படி நசிந்து ஒண்டுக்கும் உதவாமல் பிய்ந்து போகிறது எனப் பார்ப்போம்.

" ஒரு புறம் தென்னிலங்கை முஸ்லிம்களின் ஒரு பிரிவினர் வர்த்தகத்தில் பெற்றிருந்த செல்வாக்குக் காரணமாக, அவர்கள் மீது சிங்கள வர்த்தகர்களும் சிங்கள இனவாதிகளும் இவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் விரோதம் கொண்டிருந்தனர். இவர்கள் தென்னிலங்கை முஸ்லிம் பிரிவினரின் வர்த்தக மேலான்மையை அகற்றி அங்கு தமது மோலான்மையை ஏற்படுத்த முயன்றனர்."

"...... இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கீசரை முதல்முதலாக எதிர்த்தவர்கள் தெற்கு முஸ்லிம்கள் தான்...... தெற்கு முஸ்லிம்களின் வர்த்தகத் தளங்களை போத்துக்கீசர் தமதுடமையாக்கியதோடு, முஸ்லிம்களின் சமுக கலாசார நடவடிக்கைகளையும் வர்த்தகத்தையும் சிதைப்பதற்காக பல்வேறு சட்டங்களையும், கூடுதல் வரிகளையும் விதித்தனர்."

"......'இலங்கை முஸ்லிம் மக்கள் தமிழர்களே' என்றும் எனவே அவர்களுக்கு தனியான சட்டசபை பிரதிநித்துவம் தேவையில்லை என்று சேர்.பொன். இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் வாதிட்டார்கள்."

" தெற்கு முஸ்லிம் தலைமை, இலங்கை முஸ்லிம் மக்களுக்குரிய சரியான சட்டசபை பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொண்ட காலப் பகுதியில், தெற்கு முஸ்லிம்கள் வர்த்தகத்துறையில் மீண்டும் முன்னேற்றமடையத் தொடங்கினர். "

"..... சிங்கள சமுகத்தில் புதிதாக வர்த்தக முதலாளித்துவப் பிரிவுகள் உருவாகிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அன்றைய அமைப்பில் வர்த்தக ரீதியாக மேலான்மை பெறுவதற்கு வர்த்தகத்தில் நீண்டகால பாரம்பரியத்தையும், செல்வாக்கையும் கொண்டிருந்த தெற்கு முஸ்லிம் வர்த்தகப் பிரிவினருடன் போட்டியிட வேண்டியிருந்தது..... இத்தகைய வர்த்தக போட்டியின் விளைவாக சிங்கள வர்த்தகர்கள் தெற்கு முஸ்லிம் மக்கள் மீது பகைமை கொள்ளத் தொடங்கினார்கள்..... சித்தாந்தத் தளத்தில் முஸ்லிம்களக்கு எதிரான தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினர்..... இவர்களின் எழுத்துக்களில் தெற்கு முஸ்லிம் வியாபாரிகள் தான் பிரதான 'அந்நியர்'களாக வெளிப்படுத்தப்பட்டனர். 'மண்ணின் மைந்தர்களான' சிங்கள மக்களின் அவலங்கள் அனைத்திற்கும் 'அந்நியர்களான' தெற்கு முஸ்லிம்

வியாபாரிகளே பிரதான காரணமென இவர்கள் எழுதினார்கள்."

"... .இத்தகைய யுத்தகால (1ம் உலகயுத்தம்) சீரழிவினால் இலங்கை மக்கள் (குறிப்பாக சிங்கள மக்கள்) அமைதியிழக்கத் தொடங்கினர். இத்தகைய அமைதியற்ற, கொந்தளிப்பான சூழ்நிலையை, சிங்கள வர்த்தகர்களும், அவர்களின் படித்த பிரிவினரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டனர். 'தந்திரமிக்க முஸ்லிம் வியாபாரிகள். அப்பாவி சிங்கள் மக்களை ஏமாற்றி சுரண்டுவதனால்தான் அவர்களின் வாழ்க்கை மோசமடைந்திருக்கிறது.' என இவர்கள்---"

"....இவ்வாறு தெற்கு முஸ்லிம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் அடக்கப்பட்டபோது, பொன்.இராமநாதன் சிறையிடப்பட்ட சிங்கள் மக்கள் சார்பாக, இங்கிலாந்து (u.k) சென்று மகாராணியிடம் வாதாடினார். ....இத் தமிழ்த்தலைவர்கள் தாம் அரசியலில் பிரதிநிதித்துவப் படுத்திய பிரிவினரின் நலன்களையும்; சமுக, பொருளாதார ஆதிக்கத்தையும் போணுவதற்காக தம்மை ஒத்த சிங்கள உயர்சாதியான 'கொவ்' பிரிவைச் சேர்ந்த சிங்கள அரசியல் தலைமையுடன் நெருக்கமான உறவுகளை பேணிவந்தார்கள்."

"....முஸ்லிம்களை தமது அதிகாரத்தின் கீழ் வைப்பதன் மூலமாக தமக்கும் தாம் பிரதிநிதித்துவப் படுத்திய பிரிவினருக்கும் கிடைக்கக் கூடிய நலன்களை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் அவ்வாறு வாதிட்டார்கள். முஸ்லிம் அரசியற் தலைமையாக செயற்படக் கூடிய சந்தர்ப்பம் இந்த தமிழ்த் தலைமையிடமிருந்து பறிக்கப்பட்டவுடன் அவர்கள் முஸ்லிம்களை 'பிறராகவும்' விரோதிகளாகவும் கருதிச் செயற்பட்டதை....."

இப்படியாக உயிர்ப்பின் வரிகளாகவே ஒன்றல்ல 20 மேற்பட்ட மேற்கோள்களை இவர்களின் கட்டுரையின் ஒழுங்கிலேயெ எடுத்துவைக்க முடியும். இங்கு தேசிய உருவாக்கம் என்பது அகநிலை சார்ந்ததல்ல, புறநிலையாக பங்காற்றுவதை இவர்களின் வரிகளே அம்பலமாக்குகிறது. முதலாளித்துவ சுரண்டும் வாக்கம் சார்ந்து தமது நலன்களை நிறுத்திக் கொள்ள முஸ்லிம், தமிழ், சிங்கள, மலையக தலைமைகள் ஒன்றுடன் ஒன்று காலத்துக்குக் காலம் இணைந்து செயற்பட்டுள்ளனர். இந்த இணைவுகள் மூலம் தமது வர்க்க நிலையைப் பேணுவதன் மூலம் தேசிய இனங்களை எதிர்நிலைக்கு நகர்த்தி மோதவிடுவதன் மூலம் குளிர் காய்ந்தனர். இந்த தேசிய இன மோதல் என்பது பண்பியல் ரீதியில் விரிவுபட்ட மாற்றங்கள், அத்தலைமையையே தூக்கி எறிவதுடன், போராட்டம் புதிய பரிணாமத்திற்கு நகர்கிறது. இந்த நகர்வு என்பது எப்பொழுதும் இருக்கும் சமுக அரசியல் பொருளாதாரப் போக்கிற்குடன் நகர்கிறது. இதற்கு முன்னேறிய பாட்டாளி வர்க்கத் தலைமை தலையீட்டை நகர்த்துவதன் மூலம் சரியான தேசியத்தை பிரதியிட முடியும். ஆனால் இது நடுநிலையில் இருந்து அல்ல. எதிர்நிலையில் உள்ளவர்களை மறு எல்லைக்கு அழைத்துவருவதில் தான் சார்ந்துள்ளது.

உயிர்ப்பின் வர்க்கமற்ற கரடிவிடும் கதைகளை அவர்களின் தொடர்ச்சியான கட்டுரையே புட்டுப் புட்டு வைக்கிறது. வரலாறும், அதன் இயங்கியலும் எப்போதும் ஒரு நடைமுறைப் பாடமாக விரிந்து கிடப்பதேயாகும். அதை மறுதலிப்பின் இக்கட்டுரையை எழுதவே முடியாது. உண்மையில் தேசிய உருவாக்கத்தில்

www.tamilarangam.net

பங்குபற்றிய எல்லாக் காரணிகளையும் தொகுப்பதில் சார்ந்துள்ளது. அக்காரணங்கள் என்னதான் தலை கீழாக நின்றாலும் சுரண்டும் வர்க்க நலனைச் சார்ந்து நிற்பதைத் தெளிவாக்காமல் விடாது.

அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய விமர்சனத்தில் அஸ்ரப் மீது ஒருதலைப் பட்சமாக தாக்குதலை குரோதவழியில் தொடங்குகின்றனர். முஸ்லிம் காங்கிரசை சிதைத்தது அஸ்ரப் என்ற தனிநபர் என கட்டுரையெங்கிலும் கூற முயல்கின்றனர். முஸ்லிம் காங்கிரசின் அரசியல் தான் என்ன? என ஓரிடத்தில் தன்னிலும் ஆராய முற்படவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் அரசியலும்-அதன் வர்க்கத்தன்மையும் தான் அதன் மொத்தத் துரோகத்துக்கும் மூல ஊற்று என்பதை கூறாமல் பூசி மெழுகுகின்றனர். இந்த 100 பக்கக் கட்டுரையில் ஓர் இடத்தில் தன்னும் தேசிய இயக்கங்களிள் அரசியல் என்ன? அதன் பங்கு என்ன? என ஆராய வேண்டியதை மிகத் திட்டமிட்ட முறையிலேயே மறைத்துள்ளனர். தேசிய இயக்கத்தின் அரசியலைத் தொடின் உயிர்ப்பின் அரசியல் நாறிப்போய்விடும் என்பது தெரிந்ததல்லவா? அதுதான் இந்த இருட்டடிப்பு. அஸ்ராப்பின் தனிப்பண்புகளே அதாவது "SLMC தனது சொந்த மக்களின் அரசியற் தேவைகளை நிறைவேற்றாமல் தவறியமைக்கு குறிப்பாக அதன் தலைவரின் அரசியல் பண்புகளும் இலக்குக்களுமே பிரதான காரணிகளாக அமைகிறது" என்ற உயிர்ப்பின் கண்டுபிடிப்பு நகைப்புக்குரியது. எனெனில் உயிர்ப்பின் அரசியல் எப்படி அவர்களின் எல்லாவற்றையும் தீர்மானித்து விடுகிறதோ அதேபோல SLMC யின் அரசியல்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. இன்று சிலர் புலிகளின் மக்கள் விரோத நிலைகளுக்கு பிரபாகரன் தான் காரணம் எனக் கூறுவதும், இன்னும் ஒரு பிரிவினர் இதற்கும் தலைவருக்கும் தொடர்பில்லை என்ற கூற்றுக்குமிடையில் உயிர்ப்பின் அரசியல் எவ்வளவு தரமிழந்து போகிறது என்பதை ஒப்பிட முடியும். புலியும் சரி, SLMC யும் சரி, ஏன் உயிர்ப்பும் சரி அதன் வர்க்க அரசியல் தான் அவற்றின் எல்லாவற்றையும் தீர்மானித்து விடுகிறது.

அடுத்து உயிர்ப்பின் புரட்சிகர போராட்ட அரசியல் காட்டிக் கொடுப்பை பார்ப்போம்;

" பொதுவில் தேர்தல்கள், ஒரு சமுகத்தின் அரசியல் உணர்வை ஓரளவு அளவிடக் கூடிய 'அரசியல் மானியாக' பயன்படுகின்றன என்பது உண்மையே. எனினும் தேர்தல் வெற்றிகளால் மட்டும் ஒரு சமுகம் தனது உரிமைகளை வென்று கொள்ள முடியாது. ஒரு சமுகம் தனது அரசியல் ஒற்றுமையையும், அபிலாசைகளையும் வெளிப்படுத்துகின்ற பிரச்சாரக் களமாக மட்டுமே தேர்தலைப் பயன்படுத்த முடியும். என்றதன் மூலம் உயிர்ப்பு பிரச்சாரத்துக்காக எனக் கூறி தேர்தலில் நிற்கப் போவதற்கு முன்கூட்டியே ஆலவட்டம் போடுகின்றனர். அதைவிட சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் முற்போக்குப் பிரிவை பிரச்சாரத்துக்காக தேர்தலில் நிற்க முடியும் என்கின்றனர்.

ஜனநாயகம் அற்ற ஒரு நாட்டில் தேர்தல் பிரச்சார நடைமுறைக்குள் உள்ளதே எனக் கூறுவது ஒரு மாபெரும் மோசடியாகும். இலங்கையின் கடந்தகால வரலாற்று அனுபவங்களையும், படிப்பினைகளையும் சும்மா மறந்து போகும்படி கூறும் உயிர்ப்பின் தூக்க மாத்திரைகளே இவைகள். மூன்றாம் உலக நாடுகள் மீது முதலாளித்துவ அரசுவடிவத்தைத் திணித்ததன் மூலம்

www.tamilarangam.net

அச்சமுகங்கள் பெயரளவில் ஜனநாயகம் கொண்ட நாடுகளாகவுள்ளது. அங்கு கருத்துச் சுதந்திரம் என்பது கிடையாது. இங்கு புரட்சிகர கருத்துச் சுதந்திரம் உயிர்வாழ்கிறது என்றால் அது சட்டவிரோதமாக மட்டுமேயாகும். இங்கு தேர்தல் ஒரு புரட்சிகர அமைப்பின் களமாக இருப்பது இல்லை.

இதுபோன்று உயிர்ப்பின் கட்டுரை முழுக்கவே அடுக்கடுக்காக புரட்சிகர அரசியலுக்கு எதிராக வடிவமைத்துள்ளனர். மலையக மக்கள் முன்னணியின் வழியை தொடர வேண்டுமென இடையில் முஸ்லிம் மக்களுக்கு ஆலோசனை கூறுகின்றனர். அவர்களின் துரோக அரசியல் பாதையில். அடுத்து கொரிலா இயக்கம் பற்றி புலிகளின் அண்மைய தோல்வி பற்றி அரசியல் மதிப்படுதலில் இருந்து விலகி ஓடுகின்றனர். இப்படி கட்டுரை முழுக்க விமர்சிக்க முடியும். இவ்விதழில் அதற்கு இடம் போதாது. உயிர்ப்பின் மொத்த அரசியல் அவலத்தையும் மேலுள்ள எமது விமர்சனமே அம்பலப்படுதத்த போதுமானது. உயிர்ப்பு முடிந்தால் விவாதிக்க முன்வாருங்கள். அது உங்கலால் ஒருக்காலுமே முடியாது என்பதை உங்கள் அரசியலிலிருந்து நாமும், வாசகரும் நன்கறிவோம்.◎


## வரலாற்றுத் துரோகம்

1917ம் ஆண்டு சோவியத் தொழிராளர் வர்க்கம் ஆட்சியைப் பிடித்ததைத் தொடர்ந்து, அனைத்துச் சொத்துக்களையும் தேசியமயமாக்கினர். அப்பொழுது காலகாலமாக மக்களைச் சுரண்டிக்கொழுத்த சோவியத் பணக்காரர்கள் உலகெங்கும் சிதறி ஓடினர். நமது சொத்துக்களுக்கான பேப்பர் ஆவனங்களை வைத்திருந்த இந்தப் பிரிவு நீண்டகாலமாகவே சோவியத் உழைக்கும் மக்களின் முதுகுகளில் சவாரிசெய்யக் காத்திருந்தனர்.

முதலாளித்துவத்தை ஜனநாயகமாகக் கொண்டு உழைக்கும் மக்களின் நாளாந்த உழைப்புப் பணத்தை முன்னைய முதலாளிக்குக் கொடுக்க ஜெல்சின் - பிரன்சு அரசு ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. இதன் மூலம் பிரன்சு அரசுக்குத்தர ஒத்துக்கொண்ட பணம் 200 கோடி பிராங்குகளாகும். இந்தப் பணத்தைவிட குறைவாகத் தேசிய வருமானத்தைக் கொண்டு, உலகில் 35 ஏழைநாடுகள் வறுமையில் உள்ளன. ஆனால் ஜெல்சின் கும்பல் பணத்தை ஒரு சில தனிநபர்களுக்குத் தாரைவார்க்கிறது. இதுதான் ஜனநாயகம் என வேறு பிதற்றுகின்றனர். இன்று உலக செல்வத்தினை உலக மக்களுக்குப் பிரிப்பின் கிடைப்பது 4554 டொலர்கள் மட்டுமே. ருசியாவை எடுப்பின் 1992ல் - 3400, 1993ல் - 3000, 1994ல் - 2650, 1995ல் 2600 தலா வருமானத்தைக் கொண்டிருந்தது. இதை முதலாளிகளுக்கு தாரைவார்க்கப்படும் அதேநேரம், உலக ஏகாதிபத்தியங்கள் சுருட்டிச்செல்கின்றன. ருசியத்தொழிலாளிகளின் கண்கள் சிவக்கத் தொடங்கிவிட்டது.◉



www.tamilarangam.net



# ஈழப்போராட்ட வரலாற்றில் மீளவும் ஒரு துரோக வரலாறு

அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் சரிநிகர் வரமுடியாத வகையில் பல்கலைக்கழக ஆசிரியர் குழு தடுத்து நிறுத்தியது. ஆசிரியரை மாற்றவும், செய்திகளை மாற்றவும் என எண்ணற்ற வேண்டுகோளுடன், பத்திரிகை ஆசிரியர் குழுமீது தமது அழுத்தத்தைப் பிரயோகித்தினர். இதன் தொடர்ச்சியில் ஆசிரியர், ஊழியர்கள் ஒரு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சமரசத்தின் பின் பத்திரிகை வெளிவந்ததுடன் ஒரு பாரிய மாற்றத்தைக் கொண்டிருந்தது.

முன்பு பத்திரிகை ஆசிரியர் ஓரிரண்டாக இருந்து திடீரென எட்டாக உயர்ந்ததுடன், இரு கருத்து நிலைகளையும் சமப்படுத்தும் வகையில் அங்கு 4 ஆக எட்டு ஆசிரியர்கள் போடப்பட்டிருந்தது. இதில் என்ன கருத்து முரண்பாடு என ஆராயின், தமிழ்ப் பேசும் மக்கள் மீதான சிங்கள இன ஒடுக்குமுறையை, சிங்கள இராணுவ அடி, உதை, படுகொலையை.... மற்றும் தமிழ்த் தேச சுயநிர்ணயத்தை உயர்த் துவது, எழுதுவது புலிசார்பு என முத்திரை குத்தும் பல்கலைக்கழக ஆசிரியர்குழு அதை எதிர்த்து பத்திரிகையை வழிநடத்தக் கோரினர். அதாவது இவைகளை அம்பலப்படுத்துவதை முன்னெடுப்பதை விடுத்து புலிகள் செய்வதை மட்டும் உயர்த்தும் படி கோருகின்றனர்.

ஓர் இனம் அழிவுநிலையில் இன்றுள்ளது. அதை அரசானது உச்சக்கட்ட நிலையில் ஒடுக்க, புலிகள் குறும் தேசிய நிலையில் நின்று அதை ஊக்குவிக்க பல்கலைக்கழக ஆசிரியர் குழு தேசிய இனம் அழியும் நிலையை மூடிமறைத்து அதை அழிக்க புலி பயங்கரவாதம் காட்டி ஊக்குவிக்கின்றனர். இந்நிலைமை என்பது கடந்த பலகுழுக்கள் நடந்த உடைந்த சிதறிப் போன போது பல உட்படு கொலைகளை சந்தித்து அதன் வழியில் இன்று மீளவும் பல்கலைக் கழக ஆசிரியர் குழு வெளியில் இருந்தபடி, சரிநிகருக்குள் சதிகளை நடத்த தமது இன்றைய அரசு, ஏகாதிபத்தியச் சார்பு என்ற பலமான நிலையில் நின்று திணிக்கின்றனர். இவர்களை எதிர்க்கும் பிரிவின் பலவீனமான, பாதுகாப்பற்ற, புலி முத்திரை குத்தப்பட்டு இனவாதத் தாக்குதலை எதிர்க்க முடியாத இன்றைய நிலையில் பல்கலைக் கழக ஆசிரியர் குழு அவர்களைக் கடந்து உயர் பாதுகாப்பு நிலைகளில் நின்று சரிநிகரைக் கைப்பற்றி தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராக திருப்பிவிட முனைகின்றனர்.

புதிய ஆசிரியர் குழு எதிர்காலத்தில் மேலும் மோதலுக்கு நகரும் என்பதை அதன் குழுத்தெரிவு எட்டாகும் போதே தெளிவாகிவிடுகின்றது. இந்தப் பச்சோந்திகளான பல்கலைக்கழக ஆசிரியர் குழக்களின் மனிதாபிமான, ஜனநாயக வேடத்தை நாம் சரியாக இனம்கண்டு கொள்வதும், எதிர்த்துப் போராடுவதும் இன்றைய வரலாற்றுத் தேவையாகவே எம்முன் உள்ளது.⦿

www.tamilarangam.net

# எகிப்தில் கூடிய பயங்கரவாதத் தலைவர்களின் பரங்கரவாத ஒழிப்புப் பற்றிய பிரகடனம்

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்த யூத இனவெறியர்கள் 2ம் உலகயுத்தின் பின் மிகமோசமான ஒரு காட்டாட்சியை நடத்திவந்தனர். ஜனநாயகம் பற்றி உரத்துக் கத்தும் ஏகாதிபத்தியங்கள் சாமரம் வீச, இஸ்ரேலிய இனவெறியர்கள் இந்த மண்ணின் உரிமையாளர்களை, அவர்களின் ஜனநாயக உரிமைகளை அடக்கியொடுக்கி சுடுகாடாகி படுகொலைகளின் மூலம் இராணுவ ஆட்சிகளை இந்த ஜனநாயகத்தின் பேரில் நடத்தினர். இதை எதிர்த்துப் போராடிய மண்ணின் மைந்தர்களான பாஸ்தீன வீரர்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி பயங்கரவாத காட்டாச்சி நடத்தினர். கொள்ளை, கொலை, கற்பழிப்பு...ஊடாகவே இஸ்ரேல் என்ற இந்த நாடு உருவானது.

இந்நிலையில் இன்று யுத்தத்தின் அவசியம் இல்லாது போனதால் அமெரிக்கா தலைமையில் ஒரு துரோக ஒப்பந்தம் பாலஸ்தீன மக்கள் மீது திணிக்கப்பட்டது. இத்துரோகத்திற்கு அராபத் தலைமை தாங்க சொந்த மண்ணை அடகு வைத்து விபச்சாரம் செய்வதுடன், கடந்த பல பத்துவருட போராட்டத்தியகங்களையும், உணர்வுகளையும் கொச்சைப்படுத்தி ஏகாதிபத்தியங்களுக்குச் சேவகம் செய்ய பாலஸ்தீன மக்களையும் அழைத்துள்ளது. இந்நிலையில் தான் பாலஸ்தீன மக்கள் அதை எதிர்த்து போராடப் புறப்பட்டுள்ளனர். இந்த வகையில் போராடும் 'அமாஸ்' என்ற அமைப்பு சொந்த மக்களைச் சார்ந்து அவர்களை போராட்டத்தில் இணைப்பதற்குப் பதில் தனிநபர் பயங்கரவாத வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீன மண்ணிலுள்ள யூதக் குடியிருப்புக்கள் மீது தொடர்ச்சியான மனித வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தினர்.



இதன் மூலம் பல அப்பாவிப் பொதுமக்களை கொன்றதன் மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை கறைபடிய வைத்தனர். இஸ்ரேலிய இனவெறி பாசிச அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ள 'அமாஸ்' தேர்ந்தெடுத்த வழி என்பது, பாலஸ்தீன மண்ணின் மைந்தர்களின் போராட்ட அடிப்படையை, எமதுமண் என்ற உரிமையை சர்வதேச சமூகம் முன் மறுதலிப்பதலிப்பதற்கு இட்டுச் சென்றுள்ளது. தொடர் குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து மேற்கு நாடுகள் எங்கும் ஆர்ப்பாட்டங்களும், மணிக்கணக்கான செய்தி ஊடகங்களின் ஒப்பாரி எனவும் தொடர்ந்தது. பிரான்ஸ் ஆளம்

www.tamilarangam.net

கட்சியும், எதிர்க் கட்சிகளும் கூட்டாகச்சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதேநேரம் இக்கட்சிகள் உள்நாட்டில் நடந்த தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபடவில்லை. இது மேற்கு நாடுகள் எங்கும் ஒரே மாதியாக நடந்தன. ஆம் மேற்கு நாடுகளில் உள்ள ஆட்சியாளர்களினதும், முதலாளிகளினதும் யூத ஆதிக்கத்தை பறைசாற்றியது. ஆளும்பீட யூத விசுவாசத்தை வெளிப்படுத்த மறுபக்கம் யூத எதிர்ப்பு எங்கும் விரிவுபட்டுள்ளது. அது நாசிகட்கு வழங்கப்பட்ட தங்கத்தட்டாக இந்நிகழ்ச்சிகள் உள்ளது.


இத்தொடர் குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து பயங்கரவாத ஒழிப்பு என்ற கூச்சலின் ஊடாக எகிப்தில் பலநாடுகளின் ஆளும் தலைவர்கள் கூடி, எதிர்காலத்தில் மக்கள் போராட்டத்தையே பயங்கரவாத பூச்சாண்டி காட்டி அடக்க ஒரு பிரச்சார மேடையாகப் பயன்படுத்தினர். ஆம், இதுபோன்ற ஒரு கற்பனையான பயங்கரவாத தோற்றத்தை பரப்ப 'அமாஸ்' போன்ற குழுக்களின் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அமைகின்றன. எகிப்தில் கூடிய பயங்கரவாதத் தலைவர்களின் ஜனநாயகம் பற்றிய பிதற்றலும், பயங்கரவாத ஒழிப்பையும், எமது துரோகத் தலைவர்களின் ஜனநாயகத்துடனும், துரோகத்துடனும் நாம் ஒப்பிட்டு இனம்கான முடியும்.

எதிர்காலத்தில் மக்களைச் சாராத, தனிநபர் பயங்கரவாதத் தாக்குதல்கள் கடுமையான பின் விளைவுகளை அப்போராட்டத்தில் நியாயங்கள் மீது நிகழவுள்ளது. இந்தவகையில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடாத்தும் 'அமாஸ்', புலிகள், அல்ஜீரியாக் குழக்கள்... எனப் பல குழுக்களின் நடவடிக்கைகள் அவர்களின் போராட்ட நடவடிக்கையின் பின்னுள்ள நியாயத்தையே குழிதோண்டி புதைத்துவிடும் அளவிற்கு இட்டுச் செல்லும்.

அப்பாவி மக்களைப் பாதிக்காத வகையில், அரசுயந்திரத்தின் மீதும் தாக்குதலை நடாத்துவதும், அதை மக்களை இணைத்துக்கொள்வதன் மூலம் வெகுஜனப் போராட்டமாக மாற்றுவதும் இதுபொன்ற தனிநபர் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் சுய விமர்சனத்துடன் கூடிய கடமையாகும்.◉

4ம் அகில மார்க்சிச விரோத அடிப்படையை அம்பலப்படுத்தி, ஸ்ராலினுக்கு எதிரான திரோஸ்கிய சதிகளை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தி 'சமர்' இன்-2வது வெளியீடாக வெளிவந்துள்ளது "நான்காம் அகில வாக்குமூலத்தில் இருந்து—"

பெறவி நம்புவோர் இன்றே சமருடன் தொடர்பு கொள்ளுங்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிற, இனவாதிகளான அமெரிக்க ஜனநாயகத்தின் உண்மை முகங்கள்



அண்மையில் சர்வதேச ஜ:ரர்கள் ஆணைக் குழு வெளியிட்ட அறிக்கையில் அமெரிக்காவின் ஜனநாயகவிரோத நிற இனவெள்ளை நாசிசத்தை இனம்காட்டி கண்டனம் தெரிவித்துள்ளனர். சர்வதேச ஒப்பந்தங்களை மட்டுமன்றி, சர்வதேச மனிதஉரிமை மீறல்களையும் மீறிவருவதாக அமெரிக்காமீது குற்றம்சாட்டியுள்ளனர். 260 பக்கங்களைக் கொண்ட இவ்வறிக்கையில் அமெரிக்காவிலுள்ள கறுப்புநிற மக்கள் மீது திட்டமிட்ட குற்றச்சாட்டுக் களையும், மரணதண்டனைகளையும் விசாரனையின்றி மனிதநாகரீகத்திற்கு எதிராக பொய்யாக சோடிக்கப்பட்டு நிகழ்த்தப்படுகின்றன என குற்றம் சாட்டி உள்ளனர்.

அமெரிக்காவில் மொத்த சனத் தொகையில் கறுப்பு இனத்தவர் தொகை வெறும் 6வீதம் மட்டுமேயாகும். ஆனால் 1976 முதல் 1995 வரையிலான காலத்தில் மரணதண்டனை விதிக்கப பட்டவரில் 40 வீதமானோர் கறுப்பின மக்களாவர். சிறைகளில் பொய்யாக குற்றவாளியாக்கப்பட்டு வைத்திருப்போர் 44வீதம் பேர் கறுப்பினத்தவராவர். இந்த ஜனநாயக அமெரிக்காதான் இன்று ஈரான், லிபியா, கியூபா பயங்கரவாத நாடுகள் என அறிவித்து உலகை அதன் சட்ட ஒழுங்குகளையும் சர்வாதி கரமாக ஜனநாயகத்தின் பெயரில் மீறுகின்றனர். அண்மையில் அமெரிக்கா கூட்டு ஒன்றியத்தில் ஆங்கிலம் மட்டுமே அரசுமொழியென வேறு அறிவித்துள்ளனர். அமெரிக்காவின் மக்கள் விரோத சர்வதேச மனிதவிரோத நடவடிக்கைகளை இனம் காணபதும், அதன் ஜனநாயக வேடம் பயங்கர வாதம் சார்ந்தது என்பதையும் புரிந்து கொள்ள வேறெதுவும் தேவையில்லை. அந்தளவுக்கு சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு அறிக்கை சரியாக வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.◉

## உண்டியல் செய்வோரும்,தேசிய பத்திரிகை வீரகேசரியும்



புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள எம்மவர்கள் தமது பணத்தை இலங்கை, இந்தியா......... போன்ற நாடுகளுக்குள் மாற்றிக் கொடுக்கும் இந்த உண்டியல் தொழில் ஒரு இலாபம் தரும் தொழிலாக இன்று உள்ளதுடன் கருப்புப் பணத்தை

www.tamilarangam.net

மாற்றிக் கொடுக்கும் வகையில் இலங்கை, இந்தியா..... ஊழல் கொள்ளை கரண்சியாகவும் மாற்றி விடுகின்றனர். எந்த சட்டவிரோதப் பணத்தையும் மாற்றிவிடும் இந்தத் தொழிலில் வீரகேசரி விபச்சாரம் செய்யப்போனது தான் ஆ ச்சரியமானது.

வெளிநாடு வரும் ஞாயிறு வீரகேரி வாரப் பத்திரிகையின் உள்ளே இன்றைய பணப் பெறுமதி என்னவென்று குறிப்பிட்டு வருவது வழக்கம். எம்மவர்கள் பணம் அனுப்பமுன் இதை ஒப்பிட்ட பின் உண்டியல் ரேற்றைக் கேட்டு அதைச் சரிபார்த்து தமது கடின உழைப்புப் பணத்தைக் கைமாற்றுவர். இந்த வீரகேசரி பணப்பெறமதி செய்தி உண்டியல் காரர்க்கு ஒரு பெரிய தலையிடியாக இருந்தது. தமது பெரிய கொள்ளைக்கும் வாராவாராம் இலங்கைப் பணப் பெறுமதிக்கு இசைவாக 0,20,30,40 பிராங் குறையக் கொடுக்க வேண்டி ஒரு நெருக்கடிக்குள் குறைந்த இலாபத்தை வீரகேசரி மூலம் பெறவேண்டி இருந்ததால் இந்த உண்டியல் பேர்வழிகள் வீரகேரியுடன் நடந்த பேரததின பின் வீரகேரி அப்பகுதியை போடுவதையே திட்டமிட்டு கைவிட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை, இந்தியப் பெறுமதியை திட்டமிட்டு மறைக்க உதவியதன் மூலம் உண்டியல் பேர்வழிகள் பச்சையாகவே கொள்ளையடிக்க வீரகேசரி துணைபோ யுள்ளனர். வாழ்க! கொள்ளையடிப்போர் சார்பான உங்கள் பேரங்களும் சம்திங்குகளும்.⦿

## குழந்தை உழைப்பும் ஏகாதிபத்திய தலைவர்களின் புலம்பல்களும்



அண்மையில் சுவீடன் தலைநகரில் நடைபெற்ற சர்வதேச குழந்தைகள் தொடர்பான மாநாட்டில், குழந்தை உழைப்பு, விபச்சாரம் பற்றி காரசாரமாக விவாதித்துக் கொண்டனர்

இந்த மாநாட்டுக்கு முன்பே கிளிங்டன் சிராக் என அனைத்து ஏகாதிபத்திய தலைவர்களும் குழந்தை உழைப்பு ஒழிப்பு, குழந்தை விபச்சார ஒழிப்புப்பற்றி மேடைக்கு மேடை குரல் கொடுத்தனர் இன்று இந்த குழந்தை உழைப்பு ஒழிப்புப்பற்றி இவர்களுக்கு எல்லாம் ஏன் திடீர் கரிசனை ஏற்பட்டது? இப்படிக் கேள்விகளை எழுப்பும்போது மட்டுமே இவர்களின் மிக மேசமான அப்பட்டமான மனிதவிரோத முகம் வெளிப்படும். இன்று உலகில் 30 கோடி சிறுவர்கள் அதாவது 15 வயதுக்கு உட்பட்டோர் தமக்கும், தமது குடும்பத்துக்காகவும் உழைக்கின்றனர். அதாவது இத்தொகையானது அண்ணளவாக உலக சனத்தொகையில் 5 வீதமாகும். இது உலகின் உழைக்கும் தொகையின் அண்ணளவில் 10 வீதமாகும். இந்த உழைக்கும் பிரிவு ஒரு நாளைக்கு 16 மணித்தியாளங்கள் உழைக்க அவர்கள் பெறும் கூலி மிகமிகக் குறைவானது. இன்று இலங்கையில் 5 லட்சம் சிறுவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

இன்று இலங்கையில் 5 சிறுவர் சிறுமிகளுக்கு ஒருத்தர் உழைப்பில் ஈடுபடுகின்றனர். அதாவது 10-14 வயதுக்கும் இடையிலுள்ள 19லட்சம் இலங்கைச் சிறுவர்களில் 2,50,000 பேர்

www.tamilarangam.net

வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதேநேரம் 2,00,000 சிறுவர்கள் அகதிகள் முகாமில் உள்ளனர். 20,000 குழந்தைகள் ஒப்பந்தவேலையில் உள்ளனர். 10,000 சிறுவர்கள் வீதியில் வாழுகின்றனர். இந்தவகையில் இலங்கை நிலைமை இன்று தொடர்ந்து மேசமாகிச் செல்கின்றது. முன்னைய இரும்புத்திரை சோவியத் யூனியனில் ஜனநாயகத்தை மீட்டுள்ளதாக ஜனநாயகத்தை ஏற்படுத்தியதாக ஜெல்சின் ஆட்சிக்காலத்தில் தலைநகர் மொஸ்கோவில் மட்டும் வீதியில் வசித்தபடி ஏதோ ஒரு பிழைப்பு நடத்துபவர்களாக இன்று 5 லட்சம் சிறுவர்கள் உள்ளனர். இது மேலும் மேலும் அதிகரித்துச் செல்லுகின்றது. இன்று மாஸ்கோவில் பாலியல் நோய் தொடர்பான ஆய்வில் 11-12 வயதுடைய 5பேருக்கு ஒருவர் இந்த நோய்க்கு உள்ளாகியுள்ளனர். அதாவது சிறுவரை வீதிக்கு விரட்டிய ஜனநாயக அரசும், அரசியலுமே ஜனநாயகமானது எனச் சொல்வோரில் பின்னுள்ளவை பொய்மை என்பதை புரிந்துகொள்ள முடியும்.

இன்று ஐரோப்பாவில் மொத்தக் குழந்தைகளில் 10 முதல் 15 சத விகிதம் அனாதையாகவும், பாலியல் வன்முறைக்கும் உள்ளாகுகின்றனர். போத்துக்கல் போன்ற ஐரோப்பிய நாட்டில் பெருமளவில் சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பிரான்ஸ், ஜெர்மனியில் 5ல் ஒரு சிறுவர்கள் போதைவஸ்து, மற்றும் பல்வேறு விதமான முறைகேட்டுக்கும், உழைப்புக்கும் இட்டுச்செல்லப்படுகின்றனர். அமெரிக்காவில் 20 சதவிகிதம் குழந்தைகள் அடுத்தநேர உணவிற்கு கையேந்துகின்றனர். 30 லட்சம் குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகுகின்றனர். இந்தியாவில் ஐந்தரைக் கோடி சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுகின்றனர். இந்தியாவின் கிராமங்களில் 43 வீதம் சிறுவர்களும் 63 சதவீதம் சிறுமிகளும் வறுமை காரமாக பாடசாலைகளுக்குப் போவதில்லை. பாடசாலைக்குச் செல்லும் 5 மாணவர்களுள் ஒருவர் படிப்பை முடிக்காது இடையில் கைவிடுகின்றனர். பாடசாலைசெல்லும் 8 சத வீதமான மாணவர்களுக்கு பள்ளிக்கூட வசதியோ, கரும்பலகையோ, கதிரை மேசைகளோ கிடையாது. உத்திரப்பிரதேச கம்பளி பின்னும் வாரணங்கிப் பிரதேசத்தில் 1.5லட்சம் சிறுவர் சிறுமிகள் கொத்தடிமைகளாக உள்ளனர். நாளொன்றுக்கு 20 மணிநேரம் உழைக்கும் இவர்கள் பொறும் சம்பளம் 2 இந்திய ரூபாய்களாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் கம்பளிகள் ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்து இந்திய அரசு திரட்டும் பணமோ 400கோடி இந்திய ரூபாய்களாகும். சேலம் மாவட்டத்தில் 5 பிரிவுகளில் 1250 குடும்பங்களை எடுத்து ஆய்வுசெய்தபோது 750 குடும்கங்களுக்கு ஒரேஒரு பெண்குழந்தை மட்டுமே இருக்கக் காணப்பட்டது. பெண்குழந்தைகள் கொல்லப்படுவது ஒரு சமுக நிகழ்வாக மாறியுள்ளது.

தாய்லாந்தில் 8 லட்சம் சிறுமிகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



(இது ஒரு படக்காட்சி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| நாடுகள் | வேலையில் ஈடுபடுத்தப்படுவோர் வீதம் (குழந்தைகள்) |
|---|---|
| Bhoutan | 55 வீதம் |
| மாலியில் | 54 |
| Burkina fasa | 51 |
| புரண்டி | 49 |
| போத்துக்கல் | 1.7 |
| அல்பானியா | 1.1 |
| இத்தாலியா | 0.3 |
| ருமெனியா, கங்கேரி | 0.1 |
| | |

அதாவது பல்வேறு நாடுகளில் பலவகையில் இது நிகழுகின்றது. பாக்கிஸ்தானில் 3.5 கோடி சிறுவர்களில் 70லட்சம் சிறுவர்கள் அதாவது 5க்கு ஒருவன் உழைக்கின்றான். இவர்களின் ஒருநாள் சம்பளம் 3 முதல் 10 ரூபாய்கள் ஆகும். அமெரிக்கக் கம்பனியில் 5 லட்சம் சிறுவர்கள் ஒருநாளுக்கு வெறும் ஒரு டொலருக்காக உழைக்கின்றார்கள். இன்று உலகில் 50 லட்சம் சிறுவர்கள் அகதிகள் முகாமில் உள்ளனர். கடந்த 10 வருடங்களில் யுத்தத்தில் சிக்கி 15 லட்சம் குழந்தைகள் இறந்துள்ளனர். 120 லட்சம் சிறுவர் சிறுமிகள் தமது தாய்தந்தையரை இழந்துள்ளனர்.

பிரேசிலில் 2 லட்சம் சிறுவர் சிறுமிகள் வீதியில் வாழுகின்றனர். இதில் 4பேர் தினமும் கொல்லப்படுகின்றனர் இது இன்று 40 வீதமாக அதிகரிக்கின்றது. வருடா வருடம் 76 லட்சம் குழந்தைகள் பிறந்தவுடன் அல்லது முதல் கிழமைக்குள் இறக்கின்றனர். இதில் 40 வீதம் உணவுப்பற்றாக்குறையால் நிகழ்கின்றது. பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000 க்கு ஆபிரிக்காவுக்கு 175 ம், இந்தியாவுக்கு 100 ம், முன்னேறிய நாடுகளுக்கு 15 ஆகவும் உள்ளது.

இதில் இருந்து புரிந்து கொள்ள முடியும் வறுமையையும் அது சார்ந்த உழைப்பையும். இந்த குழந்தை பிறப்பின் போது ஒவ்வொரு வருடமும் 5,85,000 பெண்கள் இறக்கின்றனர். இதில் 99 விகிதம் 3ம் உலக நாடுகள்ல் நிகழ்கின்றது இது ஆபிரிக்காவில் 13 க்கு ஒருவரும், ஆசியாவில் 69க்கு ஒருவரும், ஐரோப்பியாவில் 3200 க்கு ஒருவருமாக உள்ளது. இன்று குழந்தை பிறப்பு வளர்ப்பு, பின் குழந்தையின் வாழ்க்கை என எடுப்பின் 3ம் உலக நாடுகள் மிக மோசமான வறுமை நிலையில் உள்ளது அதாவது வறுமை என்ற நிலைக்குள் உள்ள எல்லா இடத்திலும் எல்லாப்பிரிவிலும் குழந்தைகள் இறப்பு, உழைப்பு, விபச்சாரம் —— என எல்லாம் கொடிகட்டிப்பறக்கிறது. இங்கு குழந்தை உழைப்பு விபச்சாரம் என எடுப்பின் மிக அண்மைக்காலமாக மேற்கு நாட்டுத் தலைவர்கள், எல்லா மீடியாக்களும் என தொடர்ந்து ஒப்பாரி வைக்கின்றனர். இது ஏன்? உண்மையில் அக் குழந்தைமீதான கரிசனையா? ஏனின் நிட்சயமாக இல்லை. மாறாக இன்று உலக மேல்நிலை அரசுகள் தம்கிடையில் மோதவேண்டிய அளவுக்கு உள்நாட்டு பொருனாதாரம் ஆட்டம் காணத்தொடங்கியுள்ளது. அதாவது 2ம் உலக யுத்தத்தின் பின் அமைதியான சந்தைப்போட்டி இனியும் சாத்தியம் இல்லை என்றளவுக்கு மேற்க்கு நாட்டு வல்லாதிக்கவாதிகள் புரிந்துகொண்டுள்ளனர்.


உலக சந்தையில் இதன் விற்பனையின் வீழ்ச்சி இந்த முன்னணி நாடுகள் சமுக நெருக்கடிகளை உருவாக்கிய வண்ணம் உள்ளது. இது மேலும் மேலும் தீவிரமடைகின்றது. இதிலிருந்துமீள, சந்தைப்பிடிப்பை

www.tamilarangam.net

உருவாக்க இராணுவ முன்தயாரிப்பு இன்று இவர்கள் முன்னுள்ள ஒரேஒரு தீர்வாகவுள்ளது. இருந்தபோதும் தாற்காலிகமாக அமைதியைக் காட்ட மற்றும் நடிக்க மேலும் மேலும் தமது பொருட்களை உலகில் குழந்தை உழைப்பு ஒரு தடையாகவுள்ளது.

ஈடுகட்டமுடியாது ஏகாதிபத்தியப் பொருட்கள் சந்தையில் தேங்குகின்றது.

தமது தேங்கிய பொருட்களை விற்பதன் மூலம் தனது உள்நாட்டு நெருக்கடியை தணிக்கும் வகையில் மூன்றாம்



அதாவது இன்று உலகில் உழைக்கத் தகுதியுள்ள பிரிவில் 10 வீதச் சிறுவர் உழைப்பின் மூலம் நிரவப்படுவதால், மிகக்கூடியநேர வேலை செய்து, மிகக் குறைந்த கூலியைப் பெறும் இந்த உழைப்புப் பிரிவு செய்யும் உற்பத்திப் பொருளின் விலை, இயந்திரங்களின் மூலம் செய்வதைக் காட்டிலும் மலிவானதாக இன்று உள்ளது. இதனால் இந்த மலிவுப் பொருளுடன் மேற்குநாட்டு கணநேர இயந்திர உற்பத்திப் போட்டியை

உலகநாடுகளின் குழந்தைகள் உழைப்பைத் தடைசெய்வது இந்நாட்டு அரசுகளின் விருப்பவிளையாட்டாக உள்ளது. இதன் மூலம் தமது பொருட்களை விற்பதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளின் தேசிய உற்பத்தியை முடக்கிவிட எழுந்ததே இந்த குழந்தை உழைப்புப் பிரச்சாரம். இந்தக் கபடத்தை நாம் புரிந்துகொள்ளத் தவறின் மேற்கு நாட்டு கபட ஜனநாயகத்தை அதன்

www.tamilarangam.net

போலியை இனம்காணத் தவறிவிடுவோம்.

இந்தவகையான குழந்தைகள் உழைப்பு ஒழிப்பு நிட்சயமாக எதிர்க்கப்பட வேண்டியதே. ஏனெனில் அவர்கள் எந்தச் சமுகத் தீர்வுமற்ற, அவர்களுக்கு மாற்றுத்தீர்வற்ற குழந்தைகள் உழைப்பு ஒழிப்பை அக் குழந்தைகளைப் பிச்சைக்காரராக மட்டுமின்றி உலகில் ஒரு பட்டினி மரணத்துக்குள் இட்டுச்செல்வதேயாகும். இன்று இந்தக் குழந்தைகள் தமது உழைப்பில் தன்னையும் தம் குடும்பத்தையும் பாதுகாத்து உயிர்வாழ்வதற்கு கிடைக்கும் அற்ப கஞ்சியைக் கூட தட்டிப்பறிக்கும் மேற்கு நாட்டுச் சதியின் ஒரு வடிவமே குழந்தைகள் உழைப்பு ஒழிப்பாகும்.

இன்று இக்குழந்தைகள் உழைக்க ஏன் அவசியமாகுகிறது. இதற்குக் காரணம் உலகில் மூன்றாம் உலக நாடுகளின் செல்வத்தையும், அதன் தேசிய உற்பத்தியையும் சூறையாடிச் செல்லும் மேல்நிலை வல்லரசுகள் பன்நாட்டுக் கம்பனிகள், நிதிநிறுவனங்கள் ஒருபுறம் இயங்க உள்நாட்டு ஆளும்பீடங்கள் இன்னொருபுறம் சூறையாட இந்த வல்லரசுகள் அதற்கு உதவ, இதனால் ஏற்படும் வறுமை குழந்தைகள் உழைப்பை அவசியமாக்குவதை தவிர்க்கமுடியாது ஆக்கிவிடுகிறது. குழந்தைகள் உழைப்பு தமது நலன்சார்ந்து ஏற்படுத்தியதே இந்த மேற்கு வல்லரசுகள்தான். பின் இன்று உயிருடன் குழந்தைகள் உழைப்பை ஒழிக்கக் கோரும் இவர்கள் அவர்களை கொன்றுவிடச் சதிசெய்கின்றனர்..

சிறுவர் சிறுமியர் விபச்சாரத்தைப் பொறுத்தவரையில் மேற்குநாட்டுப் பன்றிகளின் தொழுவமாக மூன்றாம் உலகநாட்டுச் [illegible] சிறுமிகள் சிறுவர்கள் மாற்றியது மேற்குநாட்டு இராணுவங்கள், பன்நாட்டுக் கம்பனிகள், அதற்குக் காரணமான உள்ளுர் அரசபீடத்தினர். இன்று இவைகளை ஒழிப்பதைப்பற்றிப் பேசி கண்ணீர் வடிப்புக்கள் ஏன்? மேற்குநாட்டுக் காமப்பன்றிகள் வருடம் ஒருமுறை மூன்றாம் உலகநாட்டுச் சிறுவர் சிறுமிகளைச் சுவைத்து வேட்டையாடியபின் சும்மா இருக்கமுடியாது தமது சொந்தநாட்டுச் சிறுவர் சிறுமிகளைக் கூட வேட்டையாடத் தொடங்கியதுதான் முக்கியமாணகாரமாகும். இங்கு 15% பிரஞ்சுச் சிறுமிகள் பலாத்காரத்துக்கு உள்ளாவதில் இருந்து இதைப் புரிந்துகொள்ள முடியும்.

இன்று இந்த சிறுமி விபச்சார ஒழிப்பு என்பது சொந்தநாட்டில் தடைசெய்யவும், மூன்றாம் உலக நாடுகளில் தடைசெய்யவேண்டிய அளவுக்கு எழுந்த நிலைமை மற்றும் இதற்கு எதிரானவர்களின் தொடர்ச்சியான நிர்ப்பந்தம் இப்படி முதலைக்கண்ணீர் வடிக்க வைத்துள்ளது. இதுபோன்று அண்மைக்காலமாக மூன்றாம் உலகத் தொழிலாளர் நலன்பற்றி, தொழிச்சங்க உரிமைபற்றியும் கூட மேற்குநாட்டு அரசுகள் புலம்புகின்றன. ஏனெனில் மூன்றாம் உலகநாட்டுத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும், கிடைக்க வைக்கப்படும் உரிமைகள் சலுகைகள் தேசிய உற்பத்தியின் விலையை அதிகரிக்க வைக்கும். இதன் மூலம் தேசிய உற்பத்தியுடன் போட்டியிட்டு தமது பொருட்களை விற்கவும் தேசிய உற்பத்தியை முடக்கவும் முடியுமென ஏகாதிபத்தியம் கனவு காண்கிறது.

இந்த மேற்குநாட்டுக் கண்ணீர் தமது சொந்தநலன் சார்ந்த மேலும் மூன்றாம் உலகநாடுகளை சூறையாடவும் செய்யும் ஒரு சதியின் மறைமுகப் பக்கங்களே. இதைநாம் புரிந்து கொள்வதே உண்மையான அறிவு மட்டுமின்றி, இதுவே சமூக அக்கறைக்கு உரிய முதற்படியாகும். ⦿

www.tamilarangam.net

# பிரான்சில் வளர்ந்து வரும் இனவாதமும், சர்வதேச மன்னிப்புசபையின் கண்டனமும்




அண்மையில் சர்வதேச மன்னிப்பு சபை பிரான்சில் இனவாதம் வளர்ந்து வருவதையும், அரசு இனவாதத்திற்கு துணை போவதையும் கண்டித்துள்ளது. லுபென் தலைமையிலான் நாசிக்கட்சி 30 லட்சம் வெளிநாட்டவரை உடன் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் எனக் கோரும் அதேநேரம், 25லட்சம் பிரஞ்சு பிரஜா உரிமை பெற்றவர்களைப் பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டும் எனவும் கூறி தீவிரமான பிரச்சாரத்தில் இறங்கியுள்ளது.

இவ் நாசிக்கட்சிக்கு மிக அருகில் தம் கொள்கையைக் கொண்டுள்ள இன்றைய சிராக் தலைமையிலான ஆளும் கட்சியின் வெளிநாட்டவருக்கு எதிரான கொள்கைகள் நாசிக்கட்சியின் ஆதரவு 25சத வீதமாக உயாத்தி யுள்ளது. அண்மைக் காலமாக வெளி நாட்டவருக்கு எதிராக அடுத்தடுத்து புதிய கடும் சட்டங்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. இங்குள்ள இடதுசாரிகள் எனக் கூறும் சோசலிசக் கட்சி, கமினிசக் கட்சி, ரொக்சியக் கட்சி என்பன எந்தவிதமான் எதிர்ப்புப் போராட்டத்தையும் நடத்தமுடியாத வகையில் சீரழிந்து செயலிழந்துபோய் உள்ளனர்.

இஸரேலிய யூதருக்கு ஆபத்து என்றவுடன் வரிந்துகட்டி வீதியில் இறங்கும் இந்தப் போலி இடதுசாரிகள் தொழிலாளிகளுக்கு ஆதரவாகவோ, இனவாதத்திற்கு எதிராகவோ வீதியில் இறங்கத் தயாரற்று ஓர் நிருவாதிகளாகச் சீரழிந்து செல்கின்றனர்.

# இந்திய போலி மார்க்சிச திரிபுவாதிகளின் ஐரோப்பிய விஜயங்கள்



அண்மைக்காலமாக ஐரோப்பாவுக்கு வருகைதரும் இந்தியப் போலிகளின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணமே உள்ளது. இந்தவகையில் அ.மார்க்ஸ், எஸ்.வி.ராஜதுரை எனப் பாரிய விளம் பரங்களுடன் இங்கு சுற்றுப் பிரயாணம் செய்வதுடன், மார்க்சியவிரோத கருத் தையும் பரப்பியும் செல்கின்றனர். இதற்குப் பிரதி உபகாரமாக இங்கிருந்து தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோப் பெட்டியென எலற்றோனிக் முதல் எல்லாவித பொருட்களையும், பணமுடிச்சுக்களையும் கைமாற்றாக எடுத்துச்செல்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரஞ்சுப்பொலிஸ் பயங்கரவாதமும், போராடும் உரிமை மறுக்கப்பட்ட கருப்பின மக்களும்.

யூலை, ஆகஸ்ட் மாதங்களில் பிரஞ்சு மண்ணில் நிற எதிர்ப்புப் போராட்டம் பரிணாமிக்கும் வகையில் கருப்பு இன மக்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தனர். இப்போராட் டத்தை வன்முறை மூலம் நசுக்கிய பிரஞ்சு அரசும், பொலிசும் 50ம் நாள் இப்போராட்ட வீரர்களைக் கைதுசெய்து சிறைகளில் தள்ளினர்.

இந்நாட்டில் வாழ உரிமை மறுக்கப்பட்ட 300க்கு மேற்பட்ட இம் மக்கள் போராட்டத்தின் பின் அனைத்து எதிர்க் கட்சிகளையும் (பாசிச நாசிக்கட்சியைத் தவிர) மற்றும் தொழிற் சங்கங்கள், மக்கள் உரிமைக்கு போராடும் அமைப்புக்களின் ஆதரவுடன் நடந்த இப்போராட்டம், அவர்களுக்கு ஆதரவான சில ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நடத்தியது.

இன்று பிராஞ்சில் 300பேர் அல்ல ஒருசில இலட்சம் பேர் வாழும் உரிமை மறுக்கப்பட்டு, பொலிசுக்குப் பயந்து ஒளிந்துவாழும் வாழ்வை வாழ்கின்றனர். பொலிசில் பிடிபடின் அவர்களை உடனடியாக நாடுகடத்தும் வகையில் ஜெர்மன், பிரான்ஸ் கூட்டு விமான சேவையை நடத்துவதுடன் பிடிபடும்எண்ணிக்கைக்கு ஏற்ப வாராவாரம் நாடுகடத்தப் படுகின்றனர்.

இன்று ஆட்சியிலுள்ள வலதுசாரி அரசின் முன்னைய பிரதமர் பலதூரின் மந்திரிசபையில் இருந்த பஸ்குவா கொண்டுவந்த வெளிநாட்டவருக்கு எதிரான 'பஸ்குவா சட்டம்' பல வெளி நாட்டவரை நாடுகடத்த உத்தரவாதம் செய்கிறது. இந்தவகையில் குடும்பத்தில் ஒருவருக்கு விசா இல்லை எனினும், குழந்தைகளுக்கு பிரஞ்சு பிரஜா உரிமை இருந்தாலும் பெற்றோர் நாடுகடத்தப்படுவர் என்ற சட்டம் குறைந்தது லட்சம் பேருக்கு வாழும் உரிமை மறுக்கின்றது.

இப்போராட்டத்தில் குழந்தைகள் பிரஞ்சு பிரஜா உரிமையுடன் இருக்க பெற்றோர் சாகும்வரை உண்ணாவிரம் இருந்தனர். இந்தவகையில் இச்சட்டம் நாசி பாசிசக் கட்சியில் ஆட்சிக்கு வருவதற்கு முன் முன்வைக்கும் சில படிமுறை வளர்ச்சியில் வெளிநாட்டவர்க்கு எதிரான தாக்குதலாகும். இன்று ஆட்சியிலுள்ள யூபே அரசிலுள்ள உள்துறை அமைச்சு இன்று விசா பெற்றுள்ள வெளிநாட்டவரின் 10 வருட வதிவிட விசாவை 2 வருடமாக மாற்ற சில சட்டதிட்டங்களை முன்னெடுக்க முனைந்துள்ளது. இருந்தபோதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னைய உள்துறை அமைச்சருக்கும் இன்றைய அமைச்சருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டால் இது அமுலுக்கு வரமுடியவில்லை.

இதைவிட மருத்துவ உதவி, குடும்ப உதவி, வேலை இல்லாமைக்கு கொடுக்கும் உதவியை ஒரு பிரஞ்சுக்காரன் பெறுவதிலும் பார்க்கக் குறைவாக கொடுக்க வேண்டுமென சில ஆலோசனைகள் முன்தள்ளப்பட்டன. ஒரு பாசிச நாசி ஆட்சியை கட்டமைக்கும் அதன் முதல் படிகளில; இன்றைய வலதுசாரி அமைப்பு தீவிரமாக முனைந்தபோதும், பிரஞ்சு மக்களின் விடாப்பிடியான போராட்டங்கள் அதை தடுத்து நிறுத்துகின்றன. இதற்கு அண்மையில் நடந்த சாகும் வரையிலான கருப்பின மக்களின் போராட்டத்துக்கான ஆதரவு தளத்தைப் பார்ப்பின்:-

இப்போராட்டம் பற்றிய உங்கள் நிலையென்ன? என்று 1005 எல்லாத்தரப்பு பிரஞ்சு மக்களிடம் கேட்டபோது:-

| | | |
|---|---|---|
| பங்குபற்றுவோர் | 189பேர் | 18வீதம் |
| ஆதரவு தெரிவி | 322பேர் | 32வீதம் |
| நடுநிலை வகிப் | 130பேர் | 13வீதம் |
| குறைந்த எதிர்ப் | 211பேர் | 21வீதம் |
| தீவிர எதிர்ப்பு | 90பேர் | 9வீதம் |
| பதில் தராதோர் | 70பேர் | 7வீதம் |

என்ற அளவுக்கு பிரஞ்சு மக்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். அதே நேரம் கருப்பு இன மக்கள் பற்றியும், அவர்களின் இருப்புப் பற்றியும் போதிய அறிவு அற்ற ஒரு சாதாரண நிலைகளில்தான் இது. ஒருபுறம் தொலைக்காட்சி முதல் எல்லாச் செய்தி ஊடகங்களும் இம் மக்கள் பற்றி எதிரான பொய்யான கருத்தைப் பிரச்சாரம் செய்தும் கூட அம்மக்களின் பின் ஒரு பெரும்பான்மை அணி திரண்டுள்ளது. வெளிநாட்டு மக்கள் பற்றி ஒரு சரியான உண்மையான கருத்துச் செல்லும் தளம் இருப்பின் இம்மக்களின் போராட்டத்தின் பின்னுள்ள ஆதரவுத்தளம் விரிந்ததாக இருக்கும்.

இது ஒருபுறம் இருக்க இந்தப் போராட்டத்தையோ, ஒரு தொழில் சங்கத்துப் போராட்டத்தையோ மக்களைப் போராட அணிதிரட்டுவதாகக் கூறிக்கொள்ளும் புலிகள் முதல், புரட்சிக் கம்யூனிஸ்டுக் கட்சி (ரொட்ஸ்ச்) வரை பங்கு கொள்ள அழைப்பதும் இல்லை. ஏன் ஒரு தமிழனைக் கூட காணமுடியாது.

மறுபுறம் இங்கு ஏதோ ஒரு விசா பெற்றுவிட்ட எம்மக்கள் கேட்கிறார்கள் பிரஞ்சு எவ்வளவு வெளிநாட்டவரை வரவேற்பது? இதை முடிவுகட்டி இருப்பவர்களை மட்டும் இருக்கவிட்டு மற்றவர்களை வரவிடாது மூடவேண்டும். விசா அற்றவர்களை வெளியேற்ற வேண்டும். எனக் கதைக்குமளவுக்கு சுயநலம் சார்ந்த, அதே நிற, இன பொருளாதார கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றனர்.

உலகில் நான்காவது நாடாகவுள்ள பிரஞ்சு பொருளாதாரம் உலகைச் சூறையாடிக் கொண்டுவருவதுடன், அதற்கு இசைவாக உலகிலுள்ள பின்தங்கிய நாடுகள்மீது ஜனநாயக விரோத சட்டங்களைத் திணித்தும், காலனியாகவும், நவ காலனியாகவும் மறுகாலனியாகவும் உருவாக்கி உலகை சூறையாடுகின்றனர்.


இந்நிலை உள்ளவரை அந்நாட்டு மக்கள் பொருளாதார அகதிகளாக உருவாகுவது தவிர்க்க முடியாது. அத்துடன் தனிமனித முன்னேற்றமும், சூறையாடலையும் பிரச்சாரம் செய்யும் இவர்கள் பின்தங்கிய நாட்டு மக்களின் தனிமனித முன்னேற்றத்தை நோக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொருளாதார புலம்பெயர்தல், சட்ட விரோதமாக பிரகடனம் செய்கின்றனர்.

உலகம் சமபங்கீட்டை அடையாதவரை இந்தப் புலம்பெயர்வு தடுக்க முடியாது. இதை எதிர்க்கும் வசதியான பாதுகாப்பான எந்தப் பிரிவும் நிற, இன, மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்ற பெயரால் ஒரு சுரண்டலை, நாசிச, ஏகாதிபத்திய கொள்கையின் சுவடுகளில்தான் உயிர்வாழ்கின்றனர்.




அண்மைய கருப்பு இனமக்களின் போராட்டம் பிரஞ்சு வரலாற்றில் பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தில் பதியப்படும். வெளிநாட்டு மக்களுக்கு எதிரான சில எதிர்த் தாக்குதலை தற்காலிகமாகத் தடுத்துள்ளது. இந்த நிறவெறியர்கள் எதிர்காலத்தில் வேகமாக ஒருமித்து தாக்குதலை நடத்த பதுங்கியிருக்க நிர்ப்பந்தித்துள்ளது. இந்தவருடம் பிரஞ்சு அரசு நாடுகடத்திய வெளிநாட்டவர் அட்டவணையை மேலும் பார்ப்போம்:- இவ் ஆட்கடத்தலில் முன்பு கைது செய்ய ஒரு யுத்தம் நடக்கும் பிரதேசம் போன்று இராணுவ சோதனையில் ஈடுபடுகின்றனர். இன்று இராணுவம் பரிஸ் எங்கும் எல்லாவிடத்திலும் சோதனை செய்வதும் கைது செய்வதும் சாதாரணநிகழ்வாக மாறியுள்ளது. இது எந்த ஜனநாயக நாட்டிலும் கிடையாது என்பது மிக முக்கியமானதாகும்.

| வெளியேற்றிய திகதி | எண்ணிக்கை | நாடு |
|---|---|---|
| 29 - ஜனவரி | 59 | துனிஸ்,மொ |
| 9 - பெப் | 46 | ருமேனியா |
| 29 - பெப் | 42 | சைரில் |
| 28 - மார்ச் | 52 | மாலி |
| 27 - ஏப்பி | 68 | சைரில்,மாலி |
| 15 - மே | 33 | ருமேனியா |
| 6 - ஜுன் | 24 | சைரில் |
| 26 - ஜுன் | 81 | மாலி,செனக |
| 3 - ஜுலை | 40 | சைரில்,துனி |
| 10 - ஜுலை | 75 | மாலி,மொரோ |
| 7 - ஒகஸ் | 78 | மாலி,மொரோ |
| 24 - ஒகஸ் | 57 | மாலிசெனகல் |
| 29 - ஒகஸ் | 46 | மாலி,செனகல் |
| 29 - ஒகஸ் | 32 | துனிஸ்,சைரில் |

இந்த வருடம் பிரான்சில் இருந்து வெளியேற்றப்பட்ட வெளிநாட்டவர் 7500 மேலாகும் (29 ஒகஸ் வரை)




பிரான்சிலுள்ள வெளிநாட்டவரை ஆராயின்:-

www.tamilarangam.net

1990 வெளிநாட்டவர் பிரான்சில்.

அமெரிக்கர் - 91,789
Oceanie - 2,704




புள்ளிவிபரத்தின் படி மொத்தமாக 1990ல் 41,95,952 வெளிநாட்டவர் பிரான்சில் இருந்தனர். இதில் 37,5 வீதம் பேரின் பெற்றோரும், பெற்றோரின் பெற்றோரும் பிரான்சில் வசித்து வருபவர்கள். 1990 இன் மொத்த புள்ளிவிபரத்தை மேலும் ஆராயின்:-

| நாடு | மொத்த விகிதம் | இங்குள்ளோர் |
|---|---|---|
| போத்துக்கல் | 14,4 வீதம் | 6,04,217 |
| அல்ஜீரியன் | 13,6 வீதம் | 5,70,649 |
| இத்தாலி | 12,5 வீதம் | 5,24,494 |
| மொரோக்கன் | 10,6 வீதம் | 4,44,770 |
| ஸ்பானியோல் | 9,8 வீதம் | 4,11,203 |

மற்றும் 65,4 தனியாகவும்;. 14,4 வீதம் பேர் குடும்பமாக வேலைசெய்ய வந்தனர். 12 வீதம் பேர் அரசியல் புகலிடம் பெறவந்தனர்.

1993ல் ஐரோப்பிய வெளிநாட்டவரில் 27,2 வீதம் பேர் வேலையின்றி உள்ளதுடன் பிரான்சில் 10,5 வீதம் வேலைவாய்ப்பு முரணானதாகவுள்ளது. 1990ல் 13 லட்சம் பேர் பிரான்ஸ் பிராஜா உரிமையை மொத்த வெளிநாட்டவர் பெற்றுள்ளனர். இதில் 11,542 பேர் தமது பெயர், தகப்பன் பெயர் பிரான்சின் பெயர் வரிசையில் மாற்றியிருந்தனர். 83 வீதமான இளையவர்கள் (1963 - 72 இடையில் பிறந்தோர்) வாக்களிக்கும் பட்டியலில் தமது பெயரை உள்ளடக்கியுள்ளனர்.

1992இல் அல்ஜீரியராகவுள்ள இளைஞர்களில் அரைவாசிப்பேரும், நாலில் ஒரு பங்கு அல்ஜீரியப் பெண்களும் தமது துணையை பிரஞ்சு சமூகத்தினுள் கொண்டிருந்தனர்.

<u>பிரஞ் வெளிநாட்டவர் தொகை</u>

| ஆண்டு | மொத்த மக்கள் தொகை | வெளிநாட்டவர் அனைவரும் | வெளிநாட்டவர் மொத்த சனத்தொகை(வீதம்) |
|---|---|---|---|
| 1911 | **3,91,92,000** | **11,10,000** | **2.8** |
| 1921 | **3,87,98,000** | **14,29,000** | **3.7** |
| 1926 | **4,02,28,000** | **22,88,000** | **5.6** |
| 1931 | **4,12,28,000** | **27,29,000** | **6.6** |
| 1936 | **4,11,83,000** | **23,26,000** | **5.6** |
| 1946 | **3,98,48,000** | **19,86,000** | **4.9** |
| 1954 | **4,27,81,000** | **22,93,000** | **5.3** |
| 1962 | **4,64,58,0** | **28,61,00** | **6.1** |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| | 00 | 0 | |
| 1968 | 4,97,58,0 00 | 32,81,00 0 | 6.6 |
| 1975 | 5,25,99,0 00 | 38,87,00 0 | 7.4 |
| 1982 | 5,42,96,0 00 | 40,37,00 0 | 7.4 |
| 1990 | 5,66,52,0 00 | 41,95,00 0 | 7.4 |

மொத்தத்தில் இங்கு குடியேறியுள்ள வெளிநாட்டவர்களின் பெரும்பான்மை ஐரோப்பிய சமூகத்தைச் சார்ந்தவர்கள் (உ-ம்) போர்த்துக்கல், ஸ்பானியோர், இத்தாலியைச் சேர்ந்தோர் மொத்த வெளிநாட்டவரில் 15 இலட்சத்து நாற்பதாயிரம் பேர் (36.7 வீதம்) ஆவர். மற்றும் பிரான்சின் முன்னைய கொலனியான அல்ஜீரிய, மொரோக்கியோவில் இருந்து 2ம் உலக யுத்தத்தின் அழிவுகளை கட்டிமுடிக்கக் கொண்டுவந்த இந்தப் பிரிவு பத்து இலட்சத்துப் பதினையாயிரம் பேர் (24.2 வீதம்) மற்றும் முன்னைய பிரான்சு காலனியான ஆபிரிக்கா ஒரு பெரும் பிரிவாக உள்ளது.

இங்குவந்த இச்சமூகம் இந்தச் சமூகத்துடன் ஒன்றுகலக்கும் போக்கு அதிகரித்துள்ளது. 2வது, 3வது தலைமுறை இதை கடைப்படிப்பதில் தீவிரமாவுள்ளது. திவிர மதவாதத்தைக் கொண்டதும், திவிர குடும்ப இறுக்கத்தையும் கோரும் அல்ஜீரியர்களில் குழந்தைகளில் ஆண்களில் அரைவாசிப் பேரும், பெண்களில் நாலில் ஒரு பகுதியினரும் தமது துணைகளை பிராஞ்சுக்காரராகக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில்தான் இனத்தூமை பேசும் பாசிச, மற்றும் வலதுசாரிகள் வெளிநாட்டவர் மீது கண்மூடித்தனமான தாக்குதலைத் தொடுத்து வருவதும், அண்மைய தாக்குதல் இதை மேலும் தெளிவாக்குகின்றது. 1975களின் பின் தீவிரமடைந்த இனவாதப் போக்கு வெளிநாட்டவர் எண்ணிக்கை மாறாதவகையில் வைத்து உள்ளது. இது 1975 - 1990க்கு இடையில் மொத்த மக்கள் தொகையில் 7.4 வீதமாக தொடராகப் பேணப்படுகின்றது. இந்த எண்ணிக்கை அண்மையில் வலதுசாரிகளின் ஆட்சியில் மேலும் குறைந்திருக்க (அதாவது 1996களில்) வாய்பு உண்டு. இன, நிற, மொழிவாதத்தை கடந்த உழைக்கும் மக்களை அடிப்படையாகக் கொண்ட மக்களின் விழிப்புணர்வே மக்களின் நலன்சார்ந்த ஒரு நிலையை அடையமுடியும்⦿

## பணக்கார நாடுகளில் வயிறு பெருத்துச் செல்ல, ஏழைநாடுகளின் வயிறோ சிறுத்துச் செல்கிறது

10-4-96 ல் ஐ.நா ஆய்வறிக்கை ஒன்றின் புள்ளி விபரத்தின்படி ஓர் ஏழைநாட்டில் வாழ்பவனின் வருமானத்தை விட பணக்கார நாடொன்றில் வாழ்பவனின் வருமானம் 18 மடங்கு அதிகமாகவுள்ளது. இது 1960களில் 13.3 மடங்காக மட்டுமே இருந்தது.

உலக செல்வத்தில் 80வீதத்தை அனுபவிக்கும் பணக்கார நாட்டைச் சேர்ந்த 20% பேர் உலக மாசு, பட்டினிக்கு என அனைத்துக்கும் காரணகர்தா ஆவர். உலக செல்வத்தில் 20வீதத்தை அனுபவிப்பவர் மொத்த உலக சனத்தொகையில் 80வீதமானோர் என்பத குறிப்பிடத்தக்கது. அதேநேரம் இதில் 20வீதம் பேர் படு ஏழைகளான இவர்கள் உலக செல்வத்தில் பெறுவது என்னவோ 1.5வீதங்கள் மட்டுமேயாகும்.

உலக செல்வம் சரிசமமாக எல்லோருக்கும் பங்கிடப்படாமல் உள்ளது. இதுவே உலக வறுமை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோய்நொடி...... எல்லாத்துக்கும் காரணமாகும். இதுவே உலக யுத்தத்திற்கும் காரணமாகும். 1969ல் உலக பொருளாதார வளத்தில் 4.9 வீதத்தைக் கொண்டிருந்த இந்த ஏழைநாடுகள் இன்று 3.6வீதத்தை மட்டுமே கொண்டுள்ளது. விரல்விட்டு எண்ணக்கூடிய பணக்கார நாடுகள் 96.4வீதத்தை கட்டுப்படுத்த டாங்கல் ஒப்பந்தம் துணைபோகிறது. மறுகாலனியாக உலகம் மாறிவரும் இன்றைய நாட்களில் தேவை ஒரு தேசிய புரட்சியாகும். அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையும், உலக செல்வத்தை சரிசமமாகப் பரிமாறும் ஒரு புரட்சி மட்டுமே உலகிலுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை முன் வைக்கும்.

# கிளிங்டனின் வெற்றி அமெரிக்காவினதோ, உலக மக்களினதோ வெற்றியல்ல!

மீண்டும் அமெரிக்கா ஜனாதிபதியாக, உலகை கொள்ளையடிக்கும் கூட்டத்துக்கு தலைவனாக கிளிங்டன் வெற்றிபெற்றுள்ளான். உலகில் எல்லாவித முதலாளித்துவ விமர்சகர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் உரத்த குரலில் ஜனநாயகத்தின் வெற்றி என பறைசாற்ற, நடுத்தர வர்க்கத்தின் பெரும் பகுதி அதை நம்பும் வகையில் பிரச்சார சாதனங்கள் மூளைச்சலைவை செய்கின்றன.

கிளிங்டனின் வெற்றி உண்மையில் யாருடைய வெற்றி என்று கேட்பின் அமெரிக்காவில் உள்ள ஒரு வீதப் பணக்காரரின் வெற்றி என்று கூறுவதே சரியாகப் பொருந்தும். அதாவது அமெரிக்காவிலுள்ள ஒரு வீதம் பேர் அதாவது 100 பேருக்கு ஒருவன் அமெரிக்க வருட தேசிய வருமானத்தில் 17 வீதத்தை அபகரிக்க, இந்த ஒரு வீதம் பேர் அமெரிக்க மொத்த தேசிய செல்வத்தில் 42 வீதத்தை வைத்திருக்கும் வரை இவ் வெற்றி அவர்களுடையதே!

இவ் வெற்றியை மேலும் ஆராயின் 1989 முதல் 1994 வரையிலான காலங்களில் முன்னணி நிறுவனத் தலைவர்களின் தொகை 92 வீதத்தால் அதிகரித்துள்ளது. இவர்களுடைய வருமானத்தை ஆராயின் 1989 ல் ஒரு தொழிலாளியை விட நிறுவனத் தலைவர்கள் பெறும் சம்பளம் 41 மடங்கு அதிகமாகும். இது 1994 ல் 225 மடங்குகளாக எட்டாத் தொலைவுக்கு அதிகரித்துள்ளது.

இதை புள்ளிவிபரத்தில் ஆராயின் ஒரு மனிதனுக்கு இன்றுள்ள அதிகுறைந்த 4.5 டொலர் 1989ல் பெற்றிருப்பின் நிறுவனத் தலைவரோ ஒரு மணிக்கு பெறும் சம்பளம் 184.5 டொலர்களாகும். இது 1994ல் 1012.5 டொலர்களாக




உள்ளது. ஒரு நிறுவனத் தலைவரின் ஒரு மணி நேரச் சம்பளம் ஒரு தொழிலாளியின் ஒன்றரை மாத வருமானத்துக்கு அண்ணளவாகச்

www.tamilarangam.net

சமமாகும். கடந்த கிளிங்டனின் காலமும், இன்றைய வெற்றியும் யாருக்கு எனின் பணக்கார கும்பலுக்கே. 1989 -1994 வரையிலான காலத்திலே 20 வீதமானோர் வருட வருமானம் அதிகரிக்க 80 வீதமானோரின் வருட வருமானம் 629 டொலர் முதற்கொண்டு 2185 டொலர்கள் வரையில் இழந்துள்ளனர். ஆம் கிளிங்டனின் வெற்றி 20 வீதமானோர் வெற்றியாகும். அதிலும் ஒரு வீதம் பேரினது பெரும் வெற்றியாகும். இதை மேலும் ஆராயின் 1990 -1995க்கு இடையில் மிகப் பெரிய கம்பனிகளின் எண்ணிக்கை 75 வீதத்தால் அதிகரிக்க 39 வீதம் பேர் தமது வேலையை இழந்துள்ளனர்.

பணக்காரன் மேலும் மேலும் பணக்காரனாக ஏழையை மேலும் ஏழையாக்கும் புகழ்ச்சியில் தான் கிளிங்டனின் வெற்றியே கொண்டாடப்படுகின்றது. இதைவிடவும் 1973ல் இருந்து 15 வீதம் பேர் தமது வேலையை இழப்பவர்களாக மாறியுள்ளனர். இன்று 5.2 வீதமே வேலையில்லை என பல வருடங்களாக பழைய பல்லவியையே திரும்பத் திரும்பப் பாடும் அமெரிக்க அரசால் 20 வீதங்களாக அதிகரித்துள்ள வேலையின்மையின் புள்ளி விபரங்களை மறைப்பது கடினமாகவே உள்ளது. இன்று 2.5 வீத வளர்ச்சியைக் கொண்ட அமெரிக்காப் பொருளாதாரம் வருட வரவு செலவுக்கே திண்டாடவேண்டியுள்ளது.

அமெரிக்காவின் வருட வரவு செலவு பற்றாக்குறை 20,000 கோடி டொலர்களையும் தாண்டிவிட்டது. இன்று அதி குறைந்த சம்பளத்தை 4.5 டொலர்களால் அதிகரிக்க கிளிங்டன் வாக்குறுதி அளித்து தனது வெற்றியை சாதித்துள்ளார்.

அமெரிக்காவின் வறுமையைப் பொறுத்த வரையில் அரசு புள்ளி விபரத்தை ஆராய்வோமாயின்

| ஆண்டு | மொத்த சனத்தெகையின் வறுமை வீதம். |
|---|---|
| 1970 | 11.6 |
| 1980 | 13.7 |
| 1994 | 14.2 |

1993 ஜனவரி முதல் 1995 டிசம்பர் வரை அமெரிக்காவில் 80 லட்சம் பேர் வேலையை விட்டு விலக்கப்பட்டனர் என அரசு அறிக்கை கூறுகிறது. இந்தப் பிரிவில் 33.4 வீதம் பேர் மீளவும் ஒரு பகுதி நேர வேலையை தேடி உள்ளனர். அதே நேரம் 26.7 வீதம் பேர் முழுநேர வேலையைத் தேடினர். மிகுதியான 39.9 வீதம் பேர் வேலையின்றி தொடர்ந்தும் உள்ளனர்.

இன்று ஏற்பட்ட வரும் சமுக நெருக்கடியில் 63 வீதமான வேலைத் தளத்தில் தொழில் சங்கங்கள் உருவாகி உள்ளன. பல வேலைத் தளத்தில் தொழில் சங்கமே கிடையாது. அதாவது ஜனநாயம் என்ற பெயரில் அடக்கு முறையாளர்கள் தொழில் சங்கங்கள் உருவாகக் கூட தடையாக உள்ளனர். அமெரிக்காவில் உள்ள கருப்பு இன மக்கள் இரண்டாம் தர பிரஜையை, மிக மேசமான வறுமைக்குள் சிக்கி



உள்ளனர். சில பிரிவுகளில் கறுப்பு இனத் த வர்கள் வேலை செய்யக்

www.tamilarangam.net

கூடிய பிரிவில் 55 வீதம் பேர் வேலையின்றி உள்ளதுடன், 45 வீதம் பேர் கடுமையாக வேலையில் உள்ளனர்.

1950 களில் பல்கலைக் கழகத்தில் கருப்பு இனத்தவரின் எண்ணிக்கை 80,000 ல் இருந்து இன்று 13 லட்சமாக அதிகரித்துள்ளது. சமுகத்தில் பல பிரிவுகளில் கருப்பு இனத்தவர் போராடத் தொடங்கியதால் கடந்த 20 வருடங்களில் கருப்பு தொழிலாளரின் எண்ணிக்கை 10 வீதம் குறைந்துள்ளது. அதாவது முன்பு கருப்பர் என்றால் தொழிலாளி என்ற நிலை இனியும் சாத்தியமற்றது என்றளவுக்கு சமுகத்தில் போட்டிகள் அதிகரிக்கின்றது. இது சமுக நெருக்கடியை ஏற்படுத்துவதுடன் மேலும் தமக்கான உரிமை கிடைக்காத கருப்பு சமுகம் வன்முறையில் ஈடுபடுகின்றது. கருப்பு இனத்தவரின் வாழ்க்கைத் தரம் ஒரு பங்களா தேசத்தை விட 49 மடங்கு கீழாக வுள்ளது. அந்தளவு வெள்ளை யரின் நிற வெறி ஒடுக்குமுறைகுளாகப் படுகிறது.

ஜனநாயக மக்கள் அரசு அமைப்பு எனப் பீற்றும் காங்கிரசில் 1964 ல் கருப்பு இனத்தவரின் எண்ணிக்கை 5 ஆகும். அது 1994ல் வெறும் 40 மட்டுமே ஆகும். ஆனால் மொத்த எண்ணிக்கையோ 8,500 ஆகும். கருப்பு இனத்தவரின் வேலையின்மை 40 வீதமாக உள்ள அதே நேரம் 18 முதல் 29 வயதுடைய கருப்பு இனத்தவரில் 5 பேருக்கு ஒருவன் சிறையிலுள்ளான்.

24 வயதுக்கு உட்பட்ட கருப்பு இனத்தவரின் எண்ணிக்கை அமெரிக் காவில் இந்த வயதை ஒத்தவர்களில் 14 வீதமேயாகும். ஆனால் இந்தப் பிரிவு கருப்பு இனத்தவரில் 40 வீதம் பேர் சிறை மிதித்தவர்கள். கொலைக் கலாசாரமாக மாறியுள்ள அமெரிக் காவில் 14 - 25 வயதுடைய இரண்டாவது 5 - 14 வயதுடைய பிரிவு அதிகளவு கொலைகளைச் செய்கின் றனர். கடந்த 7 வருடங்களில் கொல் லப்பட்ட கருப்பு இனத்தவரின் எண் ணிக்கை வியட்நாம் போரில் கொல்லப்பட்ட மொத்த அமெரிக்கர் களின் எண்ணிக்கையை விட அதி கமாகும்.

ஜனநாயகம் என்பது அமெரிக்க கிளிங்டனின் வெற்றி என்பதும் வெள்ளையின பணக்கார சார்புடையது. இது ஆணாதிக்க சார்புடையது என்ப தை மேலும் ஆராய்வோம்:

1988ல் 7 பெண்களுக்கு 1 பெண்ணாணவள் ஏழையாக இருந்த அதேவேளை 6 பெண்ணுக்கு ஒரு பெண் உடல் பாதுகாப்பு இன்றி உள்ளாள். இதில் கருப்பு இனப் பெண்கள் 25 வீதம் வறுமையில் சிக்கி பிச்சைக்காரிகளாக இருந்தனர். 1989ல் கருப்பு அமெரிக்க பெண் ஆணின் வருமானத்தில் 62 வீதத்தையே பெற் றாள்.

1980 - 89 க்கும் இடையில் வருமானம் 9 வீதமதகக் குறைய ஓய்வூதியம் உடல்நலப் பாதுகாப்பு 13.8 வீதமாகக் குறைந்தது. இதேநேரம் ஒருவீதம் அதியுயர் வருமானமுடையோர் 74 வீதமாக அதிகரிக்க அடுத்த மட்டத்தில் இருந்த 20வீத தின வருமானம் 28.9 வீதமாக அதிகரித்தது. இது நாம் மேலே குறிப்பிட்டதைப் போல் மேலும் இன்று தீவிரமடைந் துள்ளது.

அமெரிக்காவில் நிரந்தர வேலை செய்யும் ஒரு கோடி பெண்கள் தம் வருமானத்தைக் கொண்டு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத மோசமான சம்பளத்தைப் பெறும் வகையில் தீவிர சுரண்டல் நடைபெறுகின்றது. 1987ல் அமெரிக்க கிராமப்புற வறுமை 44.8 வீதமாக இருந்தது. அதேநேரம் 15 வயதுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்பட்டோர் வறுமையில் 71 வீதம் பேர் பெண்களாவர். வீடுகள் அற்ற பெண்களில் 30 வீதமானோர் குழந்தை பிறப்பு வசதி அறவே இல்லாதுள்ளனர். 1000 - 17 குழந்தை இறப்புள்ள அமெரிக்காவில் வீடற்றோர் இறப்பு 1000 -25 ஆகவுள்ளது. 1990ல் கற்பழிப்பு 4 மடங்காக அதிகரித்துள்ளதுடன், 5க்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள். வருடத்தில் 30 தொடக்கம் 40 லட்சம் பெண்கள் ஆண்களால் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர் இதில் 10 லட்சம் பெண்கள் மருத்துவ மனையில் சிகிட்சை பெறுகின்றனர்.

வன்முறைக்கு உள்ளாகும் வெள்ளையினப் பெண்கள் 1000 க்கு 23.5 ஆக உள்ளபோது கருப்பு இனப்பெண் 35.3 ஆக உள்ளது 1990ல் 1.8 முதல் 2 கோடி பேர் வருடம் முழுவதும் வறுமையில் இருந்தனர். இதில் 70 முதல் 80 லட்சம் பேர் 18 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் 20 லட்சம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டோர் ஆவர். முற்றும் அரசின் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர் தொகை 3.2 கோடி பேர் 1980 -88 க்கு இடையில் வறுமைக்கோட்டு எண்ணிக்கை 43 வீதமாக அதிகரித்துள்ளது.

இன்று அமெரிக்காவில் புளக்கத்திலுள்ள ஆயுதத்தின் எண்ணிக்கை 40கோடியாகும். 3 லட்சம் பள்ளிச் சிறுவர்கள் நாளாந்தம் பாடசாலைக்கு ஆயுதத்தை கொண்டு செல்கின்றனர். ஒவ்வொரு இரண்டு நிமிடத்திற்கு ஒன்றாக பாடசாலையில் துப்பாக்கி வெடிக்கின்றது. இது 10 - 11 வயதுக்குள் ஓர் அமெரிக்கக் குழந்தை ஆயுதத்தை பெற்றுவிடுகின்றான்.

இதுதான் அமெரிக்க ஜனநாயகம்! இந்த ஜனநாயகத்தின் வெற்றி மக்களின் வெற்றியென விளங்குவதும், நம்புவதும் ஒருவித முட்டாள்த்தனமாகும். உலகில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற இன்று சர்வதேச பொலீஸ் ஆகச் செயற்படும் அமெரிக்க ஆயுத வெறியர்கள்தான் உலகின் ஜனநாயகத்தின் காவலர்கள். ஆம், ஜனநாயகம் என்ற பொயரால் சொந்தநாட்டில் நிமடத்துக்கு நிமிடம் சுட்டும், கொலை செய்தும் திரிந்தவர்களைக் கொண்ட அமெரிக்கப் படை, உலகில் உள்ள மக்கள் மீது சுட்டுப் பழக அதை ஜனநாயக சமாதானப்படை, அமைதிப் படை என மகுடம் சூட்டி வேட்டைக்கு அனுப்புகிறது, இதை சாமாதானப்படை, ஜனநாயகத்தை மீட்டவந்த புதல்வர்கள் எனக் கூறும் யாரும் மக்களின் உரிமைக்கு தீவிரமான எதிரிகள்.

கிளிங்டனின் வெற்றி யாருடையது? எனக் கேட்டுப்பாருங்கள் பணக்கார நாடுகளுக்கும், வெள்ளையினத்துக்கும், ஆணாதிக்கத்துக்குமேயாகும். உலகிலுள்ள ஏழைநாடுகளை கொள்ளையடிக்க அதைப்பாதுகாக்க இன நிற வெறியுடன் கூடிய ஆணாதிக்க வெற்றி, இதை வெற்றியென்போர் அதன் ஆதரவாளர்களே ஒழிய இவர்கள் மக்களின் எதிரிகளே. ஒரு வீத பெரும் பணக்கார ,20 வீதம் பணக்கார பிரிவும், எறியும் எலும்புகளை நம்பி வாலாட்டும் நாய்களாக ஏழைகள், அந்த எஜமானுக்கு விசுவாசமாக நம்பி வாக்களிப்பதை ஜனநாயகம் எனக் கூறின், முட்டாள்கள் மட்டுமே அப்படி நம்புவர். இது நிகழும் போது இந்த ஜனநாயம் தூள்தூளாகும். மக்கள் எப்போதும் முட்டாள்களாக இருப்பதில்லை இதை இந்த பணக்கார குண்டர்கள் புரிந்ததுமில்லை. மக்கள் வரலாற்றை மாற்றும் புயல் எழும்பும் போது எல்லா ஜனநாயக வெட்டித்தனங்களும் தூள்தூளாகும். அதை நோக்கி நாம் செயற்படுவோம். அதுவே எம்முன்னுள்ள சமுக அக்கறையுடன் கூடிய கடமையுமாகும்.◉

www.tamilarangam.net

# இஸ்ரேல் - பாலஸ்தின ஒப்பந்த வழியில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இலங்கை - ஈழ ஒப்பந்தத்திற்கான மாற்று வழியல்ல



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியிலும், இலங்கையிலும் சந்தித்து வரும் நெருக்கடிகள், வீழ்ச்சிகளின் தொடர்ச் சியின் மீது, ஏதாவது ஒன்றை தமிழ்த் தேசிய இனத்தின் மீது வலுக்கட் டாயமாக அமத்திவிட தீவிர முயற் சியில் பலர் ஈடுபடுகின்றனர்.

ஒரு புறம் சிங்கள இனவாத நோக்கில், சிங்கள இனவாத ஆதிக்க வரையறையிலும் செய்துவிட அரசும், அதைச் சார்ந்த சிங்கள, தமிழ் பிரிவுகளும் தீவிரமான முயற்சியில் ஈடுபடுகின்றனர். இன்னும் ஒரு புறம் முன்னாள் முற்போக்குகள் உன்னை யதுக்கு சற்றுக் குறைவாக தமிழ் மக்களின் தலைகளில் சுமத்தி விட தமது எல்லாவித வாத - பிரதிவாதத்தையும் முன்வைக்கின்றனர். இவர்கள் இஸ்ரேல் பாலஸ்தின ஒப்பந்தம், தென் ஆபிரிக்கா ஒப்பந்தம், அண்மையில் நடைபெற்ற பிலிப்பைன்ஸ் மின்டானோ ஒப்பந்தம் போன்றவற்றை அடுக்கடுக்காக தமது வாதங்களில் முன்தள்ளுகின்றனர்.

இது குறிப்பாக சரிநிகர், வீரகேசரி மூலம் செய்யப்படுவதுடன், தமிழ் பேசும் மக்களின் முன்னேறிய, மற்றும் சமுக அக்கறைக்குரிய பிரிவு மீது தீவிரமான ஒருதலைப் பட்சமான சமா தானம் பற்றி பெய்யான திணிப்புக்க ளைச் செய்வதன் மூலம், உண்மை யான சமாதானத்தை அடைவதையோ, ஒரு தேசிய, மற்றும் நாட்டு விடுதலைக்கு தடையாக தீவிரமாக இயங்குகின்றனர். இலங்கையை ஏகா திபத்தியத்திடம் அடகு வைக்க முனை கின்றனர்.

உதாரணமாக சரிநிகர் 105 ஆசிரியர் தலையங்கம் மின்டானோ ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி அதன் வழியில் இலங் கையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என வேறு அழுது வடிக்கின்றனர். 1976 ல் இதுபோன்ற ஒரு சர்வதேச ஒப்பந் தத்தை திரிபோலியில் கையெழுத்து இட்டதுடன் பின் அதை காற்றில் கை விட்டதையும் சரிநிகர் ஆசிரியர் பீடம் நாசுக்காக மறைத்துள்ளனர். மிந்தானா ஒப்பந்தத்தை எதிர்க்கும் சில குழுக்களை தீவிரவாதம் கொண்டது என முத்திரை குத்தி ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணயத்தை

www.tamilarangam.net

கைவிட்டவர்களை முதுகில்தட்டி பாராட்டுகின்றனர்.

இதன் தொடர்ச்சியில் சரிநிகர் 106 தலையங்கம் " மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் யார்!" எனக் கேட்டு ஒரு படுமோசமான ஆலோசனையை முன்வைத்தனர். அது " ------ பேச்சுவார்தைக்கான மத்தியஸ்தமாக பக்கசார்பற்ற தகுதியும், தகைமையும் கொண்ட இரு சாரினதும் நம்பிக் கையைப் பெறக்கூடிய சர்வதேச நிறுவனத்தை செயற்பட வைப்பதுதான் சிறந்ததாகும். இம் முயற்சியில் இந்தி யாவின் தலையீடு தேவையெனக் கருதினால் பல நாடுகளைக் கொண்ட கூட்டுக் குழுவை மத்தியஸ்தமாகக் கொண்ட ஓர் அமைப்பில் இந்தியாவும் அதில் ஒரு நாடாக சம பங்காளியாக இருந்து செயற்படலாம். இதன் மூலமே தனது பிராந்திய தேவைகளுக்கு மாறான தீர்வுகள் மேற்கொள்வதை தடுத்துக் கொள்ளவும் -----" என சரிநிகர் தனது அப்பட்டமான மக்கள் விரோதத் தன்மையை வெளிப் படுத்தினர்.

ஆதாவது இன்று உலகில் சர்வதேச கூட்டு அமைப்புக்கள் நடுநிலையான சமமான கருத்துத் தளத்தைக் கொண்டது என எதையும் காட்ட முடியுமா? ஏன சரிநிகரிடம் சவால் விடுகின்றோம்.

இன்று ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, மற்றும் உலக கொள்ளைகளுக்கு ஏற்ற ஓர் அமைப்பாக உள்ளது. சர்வதேச நிதி நிறுவனம், சுற்றுச்சூழல் நிறுவனங்கள் --- என எண்ணில் அடங்காத சர்வதேச, பிராந்திய, சொந்த நாட்டு, கிராம அலகுகளில் கூட சமமான பங்கு பற்றலைத் தவிர கொள்கை வகுப்பில் சம அந்தஸ்து இருப்பதில்லை. வாக்களிப்பதில் கூட சமமான உரிமை இருப்பதில்லை. அல்லது விலை பேசப்பட்டு விடும். பாலஸ்தினம் - இஸ்ரேல் ஒப்பந்தம் நோர்வேயில் தொடங்கி அமெரிக்காவில் முடிந்த போது

பல்வேறு நாடுகளுக்கு இடையில் இது விவாதிக்கப் பட்டபோதும் ஒப்பந் தம் அமெரிக்கா சார்பு மட்டுமன்றி இஸ்ரேல் சார்பு கொண்டது என்பதும் கவனிக்கத்தக்கது. குறிப்பாக ஏகாதிபத் திய ஐரோப்பா, அமெரிக்காவுக்கு இடையில் கூட சமமான கருத்துத்தள பங்களிப்பு இருக்கவில்லை. இது இன்று மோதலாக மாறியுள்ளது. இன்று பாலஸ்தினம் - இஸ்ரேல் ஒப்பந்தம் கிடப்புக்கு போய் உள்ளது. பாலஸ்தின போராட்டம் ஆயுதப் போராட்டத்தைச் சிதைத்தும், ஒற்றுமையை உடைத்தும், ஒரு துரோகக் குழுவை உருவாக்கிய தற்கு அப்பால் பாலஸ்தினம் - இஸ்ரேல் ஒப்பந்தம் எதை சாதித்துள் ளது என்பதை இன்று ஒப்பந்தத்திற்கு ஏற்பட்டுள்ள நிலையிலிருந்து புரிந்து கொள்ள முடியும். இதை புரிந்து கொள்ள நடைமுறை ஆதாரமே போதும்.

அண்மையில் ஒப்பந்தம் கைவிடப்பட்ட போது அதை எதிர்த்து போராடிய மக்கள் மீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது 80க்கும் மேற்பட்ட பாலஸ்தினர் கொல்லப்பட் டதை நாம் காண்பதுடன், அது தொடர்வதுடன் ஐக்கிய நாடுகள் சபையில் ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென்ற, தீர்மானத்தின் போது அமெரிக்கா வாக்களிக்காது ஒப்பந்தத்தை கைவிட்டது. ஒப்பந்தத் தை ஏற்படுத்திய மூன்றாவது முன்னணி நாடே இடையில் கைவிட்டது எனின் மூன்றாம் தரப்பு என்ன என்பதைப் புரிந்து கொள்ள இது ஒரு நடைமுறை உதாரணமாகும். இதுதான் நாளை மின்டாவோவுக்கு நடக்கும். ஏனெனில் ஒரு தேசிய இனத்தின் தீர்வு என்பது எப்போதும் சுயநிர்ணயம் என்ற ஒரே ஒரு வழியில் மட்டுமே


www.tamilarangam.net

சுயேட்சையானதாகவும், பக்க சார்பற்றதாகவும் இருக்கும்.

முன்னைனாள் யுக்கோசிலோவியா ஒப்பந்தம் கூட மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்களின் இழுபறிக்குள் உள்ளதுடன், அவர்களே தீர்மானிப் பவர்களாக உள்ளதுடன், தமது நலன் சார்ந்த பிரிவுகளை பலப்படுத்துவதிலும், தமக்கான சந்தையை கைப்பற்று வதிலும் ஒருமையாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் உள்ளது. இதற்கு இசைவாக ஒப்பந்தம், அந்த இனங்கள் பந்தாடப்படுகிறது. தென் ஆபிரிக்கா வில் நடந்தது ஒரு சிரிப்புக்குரிய ஆட்சிமாற்றமே! ஆதாவது தலையில் ஒரு கருப்பன் உட்காந்தபடி கருப்ப ருக்கு சில சீர்திருத்தம் செய்வதற்கு அப்பால், தென் ஆபிரிக்கா சமுக, பொருளாதார, அரசியல், கலாசார, வெள்ளை ஆதிக்கத்தை தகர்த்தது அல்ல இவ் ஒப்பந்தம். அதே வறுமை, அதே வெள்ளை ஆதிக்கம். ஆனால் ஒரு கருப்பன் ஆள்பவனாக உள்ளான். சொத்துக்கள் செல்வங்கள் முழுக்க முழுக்க வெள்ளை இனத்திடமே. ஆதாவது உலக மேல்நிலை வெள்ளை அரசுகள் தென் ஆபிரிக்க வெள்ளை பொருளாதார ஆதிக்கத்துடன் செய்து கொண்ட ஒரு தந்திரோபாயமான ஒப்பந்தம் இது. மாறாக இது தென் ஆபிரிக்க கருப்பின மக்களின் விடுதலை, அதன் ஆதிக்கத்தை ஏற்படுத்திய ஒப்பந்தமே அல்ல. இதை யாரும் நடைமுறையில் நிறுவமுடியும்.

இன்று மூன்றாம்தர மத்தியஸ்தம் என்பது உண்மையில் சுயாசையானதோ நேர்மையானதோ அல்ல. மாறாக தமது ஆதிக்க நலன் சார்ந்து, சொந்த நாட்டிலுள்ள அதிகார பீடத்தில் சர்வதேச எடுபிடிக்கு ஆதரவாக கையாளப்படும் ஒரு கொள்கையின் அடிப்படையில் தான் ஒப்பந்தம் அமையும். அது தேசியத்தை மேலும் இழக்க கையெழுத்து இடுவதாகும். அதன் போக்கில் சிங்கள மேலாதிக்க தேசியத்தை தக்க வைப்பதுமாகும். இன்று உலகில் அமெரிக்காவின் கையில் உள்ளதை அதன் சார்பான மூன்றாம் உலக நாடுகளும் உள்ளதை அதன் போக்கில் அல்லது மற்றைய ஐரோப்பா, ஜப்பான் சார்பில் முன்னெ டுப்புக்கு இடையில் சில முரண்பாடுகள் இருக்குமே ஒழிய, மற்றப்படி ஒப்பந்தம் என்பது இன்னுமொரு புறத்தில் மேலும் மேலும் சொந்த தமிழ் சிங்கள தேசத்தை [illegible] மூன் றாம் பிரிவுக்கு அடகு வைப்பதாகும்.

இருக்கக்கூடிய தமிழ், சிங்கள சுயாட்சை இழந்துபோக வைக்கும் வகையில் இன்று சரிநிகர் ஏகாதிபத் திய சார்பை மறைமுகமாகக் கோரும் ஒரு பச்சைத் துரோக அரசியற் பிரச்சாரம் செய்வதன் நோக்கம் புரிந்து செய்கின்றனரா? அல்லது தெரியாமல் செய்கின்றனரா? ஏன மீளவும் கேட்க வைத்துள்ளது. சரிநிகர் ஆசிரியர் பீடம் இதை சுயவிமர்சனமாக பார்ப்பார்களா? இது மட்டுமே மக்கள் சார்பான ஒரு நிலையாகும். ◉



## மக்கள் வாக்களிப்பதும், அதில் வெற்றி பெறுபவர்கள் ஜனநாயக வாதிகள் என்பதும் மோசடியே!




எம் மண்ணில் நாம் பல தேர்தல்களில் மக்கள் வாக்களிக் காமலேயே எடுபிடிகளைக் கொண்டே வாக்களித்து ஜனநாயகத்தின் காவலர் கள் பலர் உருவாகி மக்களை அடக்கி பிரதி நிதித்துதவம் செய்தனர் இது உலகெங்கும் பொதுவான உண்மையே. அண்மை யில் பங்களா தேசத்தில் 90 வீதமான மக்கள் தேர்தலை பகிஸ்கரித்த நிலையில் பங்களா தேசமக்கள் முழுப்பேருக்கும் அரசு அமைத்துள்ளனர் மக்கள் விரோதிகள்.

இது போன்று அண்மையில் அமெரிக்கப்படையின் உதவியுடன் ஹெயிட்டியில் ஆட்சிக்கு வந்த ஜனநாயக காவலனின் ஆசியுடன் இன்று ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதி பதித் தேர்தலை 72 வீதமானோர் பகிஸ் கரித்த நிலையில், ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு மக்கள் விரோதி ஆட்சிக்கு வந்துள்ளான் இந்த இரு நாட்டுத் தேர்தல்கள்லும் ஒரு சிறு வீதத்தை மட்டும் வாக்காகக் கொண்டு அந்த மக்களை ஏமாற்றி விலை பேசி ஆட்சிக்கு வரும் தேசவிரோதிகள் உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டேயாகும்.

எல்லா மகக்ளுக்கும் வாக்கு என்பதும், அதை ஜனநாயகம் என நம்புவதும் முட்டாள்த் தனம் என்பதை மேல் உள்ளவை ஒளிவு மறைவு இன்றி காட்டுகின்றது. உலகு எங்கும் ஆட்சியில் உள்ளவர்கள் உண்மையில் தேசவிரோத கைக்கூலிகள் தான். நடந்து முடிந்த இரு தேர்தலையும் உலக ஏகாதிபத்திய ஜனநாயகக் காவலர்கள் ஜனநாயகத்தின் வெற்றி யென பறை சாற்றுவது எதையென்று நாம் சொல்லித்தான் தெரிய வேண்டுமா.⦿

---

## இந்தியாவில் திருமணம் செய்த சோனியாவின் ஆடம்பரம்



ஜனநாயகக்காவலன் இந்திராவின் மருமகளும், பரிசுத்த ராஜுவின் மனைவியுமான சோனியாகாந்தியின் ஆடம்பரக் கூத்தைக் கேட்டாலே உலகம் மூக்கில் விரலை வைக்கும் எந்த உழைப்பும் அற்ற மக்களின் பணத்தை கொள்ளை அடிக்கும் இக்கூட்டத்தின் பிரதிநிதியான சோனியா காந்தியிடம் உள்ள பட்டுச்சேலையின் எண்ணிக்கை 1990 களிலேயே 6 000 ஆகும் பிலிப்பைன்சின் முன்னாள்

www.tamilarangam.net

மாஸ்கோசின் மனைவி 3000 சோடி செருப்பு புகழ் தோற்றுப் போகும் வகையில் சோனியாகாந்தியின் ஆடம்பரம் கூறவே தேவையில்லை. ஒரு நாளைக்கு ஒரு சீலைப்படி கட்டின் 16.5 வருடங்கள் இதைக் கட்ட முடியும். இரண்டுப்படி காட்டின் 8 வருடங்கள் கட்ட முடியும். இந்தியப் பெண்கள் மாற்றுச் சீலை இன்றி, பாதியைத் தோய்த்து உடுத்த படி காயவிட்டு, வாழ்க்கை பூராகவும் அதையே கட்டியழும் போது இந்த ஆட்டக்காரியோ அந்தப் பெண்களின் பணத்தையே சூறையாடி ஆட்டம் போடுகின்றாள்.

ஒரு பட்டுச்சேலை 5000 இந்திய ரூபா எனின் 3 கோடி ரூபாயாகும். இதே சீலை 10, 000 இந்திய ரூபாயெனின் 6 கோடி ரூபாயாகும். இது எப்படி வந்தது என எந்த ஜனநாயக வாதியும் கேட்டதில்லை. ஏனெனில் ஜனநாயகம் என்பது 6000 சேலைகள் மட்டும் வைத்திருக்கும் உரிமை மட்டுமல்ல. மக்களின் பணமான 6 கோடியையும் கொள்ளையடிப்பதும் ஆகும். இது உங்களுக்கு புரிந்தால் சரி.⦿

---

**‘நமது சொந்த விருப்பத்தைப் பொறுத்த வரை நாம் ஒருநாள் கூட போரிட விரும்பவில்லை. ஆனால் சூழ்நிலைகள் நம்மை போரிடும்படி நிர்ப்பந்தித்தால் நம்மால் இறுதிவரை போரிட முடியும்.’**

**-மா.சே.துங்-**

# 30 வருட கலாச்சாரப்புரட்சி நினைவு தினத்தன்று சீனாவில்



30வது வருடகலாச்சாரப்புரட்சி நினைவு நாளை கொண்டாட முடியாத வகையில் அதை சீனா அரசு தடை செய்ததுடன், பலத்த பொலீஸ் பாதுகாப்பை சீனாவின் முக்கிய தலைநகரங்களில் ஏற்படுத்தினர். இருந்த போதும் பல லட்சம் மக்கள் காலை முதற்கொண்டு புரட்சி நினைவு இடங்களில் நீண்ட வரிசையில் நின்று சீனத் தலைவர் மாவோக்கும், காலாச் சார புரட்சி நினைவு இடங்களிலும் தமது நினைவை மீட்டு ஆழ்ந்த அக்கறையை வெளிப்படுத்தினர்.

ஊலகச்செய்தி அமைப்புக்களும், சீனத்து முதலாளித்துவத் தலைமை களும் காலாச்சார புரட்சிக்கு எதிராக பிரச்சாரங்களை முடக்கிவிட்டிருந்த போதும், சீன மக்கள் தமது புரட்சிகர நாளை கொண்டாடியது மட்டுமல்லாமல் அதன் பாரம்பரியத்தையும் உணர்வு பூர்வமாக மீட்டதுடன், அதை மக்கள் முன் மீளவும் எடுத்துச் சென்றனர். சீனத்து முதலாளித்துவ தலைமை யானது மீளவும் கலாச்சார புரட்சி சக்தியைக்கண்டு மிரண்டுபோயுள்ளது. சீனாவில் மட்டுமல்ல உலகில் மீளவும் மீளவும் புரட்சி எழும்பும் என்பதற்கு இது ஒரு நல்ல சான்றாகும்.⦿



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எம்மை நோக்கி வரும் சிந்தனைகளும், கருத்துக்களும், உண்மையில் சுதந்திரமான உண்மைகளா? இல்லையே



உலகில் உள்ள 150 செய்தி நிறுவனங்கள் 4 கோடி சொற்களில் ஒவ்வொரு நாளும் செய்திகளை விநியோகிக்கின்றன. இவர்களில் 4 பன்னாட்டு நிறுவனங்கள் மட்டும் 97 சதவிகித செய்திகளை அதாவது 3.8 கோடி சொற்களை உருவாக்குகின்றனர். இந்ந பன்னாட்டு நிறுவனங்கள் AP, CPI, ராய்டர், AFP என்பனவாகும்.

உலகில் உள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து AP ஐக்கு மட்டும் 8,500 சந்தாக்காரர்கள் உள்ளனர். இதேநேரம் AP ஐயின் செய்தி மட்டும் 100 கோடி மக்களைச் சென்றடைகின்றன. மூன்றாம் உலக நாட்டுச் செய்தி நிறுவனங்கள் 4 லட்சம் சொற்களையே அதாவது 1 சத விகிதத்தை மட்டுமே உருவாக்கு கின்றன. இப்போது சுதந்திரமான நிருபர்கள் என யாரும் கிடையாது. முற்றாக ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனத்தில் பணிபுரியும் ஏஜென்டு களாகவே இன்று உள்ளனர். இவர்கள் தான் மனித உரிமை பற்றியும், பயங்கரவாதத்தை பற்றியும், ஜனநா யகம் பற்றியும் பீற்றித் திரிபவர்கள். கம்யூனிசத்தைப் பற்றி இல்லாத பொல்லாததை எல்லாம் சொல்லி உலக மக்கள் முன் ஜனநாயக காவலர்களாக பவனி வருகின்றனர்.

இதை விட உலகில் 8,240 தினசரி இதழ்களும், 30,000 ஒலி பரப்பு நிலையங்களும், 2,50,000 திரைப்பட கொட்டகைகளும், 33,000 தொலைக் காட்சி நிலையங்களும், 50 கோடி தொலைக்காட்சி பெட்டிகளும், 7 லட்சம் நூல்களும் (8 கோடி பிரதிகள்), மனிதனை நோக்கி நகர்த்தப் பட்டுள்ளது. இதை பொதுவாக 150 செய்தி நிறுவனங்களைச் சார்ந்து அதாவது 4 பெரிய பன்னாட்டு செய்தி நிறுவனத்தைச் சார்ந்து கருத்துக்களை எடுத்துச் செல்கின்றன. மனிதன் பற்றியும், அவன் வாழ்வு பற்றியும் இட்டுக்கட்டிய கதைகளை உண்மை யாக மாற்றிவிடும் மகிமை மேல் உள்ள புள்ளி விபரமே காட்டிவிடும்.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா, ஐரோப்பாவில் அச்சிடப்பட்டவை இரண்டில் மூன்று பங்காக உள்ளது. ஏகாதிபத்திய சிரழிவு கலாசாரத்தை பரப்புவதில் முன்னிற்கும் ஏகாதிபத்தியம் வாரம் ஒன்றிற்கு 5 கோடி மக்களை டிஸ்னி இசைக்குள் ஆட வைக்கின்றனர் 24 கோடி மக்களை வாரம் ஒன்றுக்கு டிஸ்னி சிரழிவு திரைப்படங்களை பார்க்க வைக்கப் படுகின்றனர்.

இரண்டாம் நாடுகளைச் சேர்ந்த நாடுகளில் அமெரிக்க திரைப்படம் அரைவாசி நேரத்தை கைப்பற்றி மக்களை சீரழிக்கின்றது. NBC, ABC, CBC, போன்ற அமெரிக்க தொலைக் காட்சி செய்திகள் 100 நாடுகளில் ஒளிபரப்பப்பட்டு மக்கள் திசை திருப்பப்படுகின்றனர்.

www.tamilarangam.net

தரவு வங்கியில் 90 வீதம் இன்று அமெரிக்காவின் கைகளில் உள்ளது. தரவுகளை எப்படி வேண்டுமானாலும் திரித்து, இட்டுக்கட்டியும் வழங்கும் வல்லமை இந்நிறுவனங்களுக்கு உண்டு. சுதந்திர செய்தியாளன் எனப் பீற்றும் எல்லா முதலாளித்துவ வாதியின் பின் உள்ளவை பொய்களும், ஏகாதிபத்திய சார்பு செய்திகளுமே இதை நாம் வேரறுக்க வேண்டும்.⦿

# ஜனநாயக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆயுத அழிவுக் கலாசாரம



அப்பாக்களும், தாத்தாக்களும் ஊரையும் உலகத்தையும் ஆயுத முனையில் மிரட்டி அடிபணிய வைத்து கொள்ளையடிக்க பிள்ளைகளும், பேரன்களும் தம் சகாக்களை மிரட்டியும், கொன்றும் கொள்ளையடிக் கின்றனர். அண்மையில் அமெரிக்காவில் நடந்த சம்பவங்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

2ம் வகுப்பில் கல்வி கற்கும் 8 வயது மாணவனான பிறஸ்ரடன் Joseph Pennel என்ற ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றான். தன்னுடன் கல்வி கற்றுவரும் சக மாணவனுடன் ஏற்பட்ட பிரச்சினையைத் தொடர்ந்து தனது புத்தகப் பையில் இருந்த (Semi outmatic ) தன்னியங்கி பிஸ்ரலை எடுத்து வகுப்பையே மிரட்டத் தொடங்கினான். வகுப்பாசிரியர் கட்டுப்படுத்த எடுத்த முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அடுத்த வகுப்பில் இருந்த அவனின் தமையனை அழைத்து வந்ததன் மூலமே அவனை கட்டுப்டுத்த முடிந்தது.

இதைத் தொடர்ந்து அந்த மாணவனை அப் பாடசாலையிலிருந்து விலக்கிய துடன் பொலிசார் கைது செய்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால் பில்ல டெல்பியா என்ற மாவட்டத்தில் சிறந்ததும், அமைதியானதும் என இப் பாடசாலை நுழைவாயிலில் Metel deitector என்ற பாதுகாப்பு உபகரணம் பொருத்தப்பட்டும் இருந்தது. சிறந்த பாடசாலையிலேயே விமான நிலையத் துள் நுழைவதைப் போல் பாதுகாப்பு உபகரணம் பொருத்தப்பட்டு இருந்தது என்றால், அமெரிக்கா முழுவதும் ஒரு விமான நிலைய பாதுகாப்புப் போன்றே பாடசாலைகள் இயங்குவதைக் காட்டுகின்றது.

இதைவிட வேறு பாடசாலைகளை ஆராயும் போது பில்ல டெய்பியா மாவட்டத்தில் மட்டும் சென்ற வருடம் 1084 ஆயுதங்களை பாடசாலையில் வைத்து கைப்பற்றப் பட்டுள்ளது. இதில் 35 பிஸ்ரல், 30 செமி பிஸ்ரல் 1

www.tamilarangam.net

கரபினா என்பன அடங்கும். ஆயுதங்களுடன் நடமாடும் மாணவர் களை உடன் பாடசாலையை விட்டு வெளியேற்றும் நடைமுறை மட்டும்தான் ஜனநாயக அமெரிக்காவில் ஒரு வழியாக உள்ளது. ஏகாதிபத்திய கலாசாரமாக உலகை கொள்ளை அடிப்பது முதல், அதை நியாயப் படுத்தும் கலாசாரம் ஈறாக அமெரிக் காவே உள்ளிருந்து வேட்டு வைக்கிறது. இம் மாணவர்களைப் புறக்கணிப்பதன் மூலம் சமுகவிரோத மக்களை உருவாக்குகின்றது.

இதேபோன்று ஆயுசுலு டயனெ மாவட்டத்தில் சென்ற வருடம் 325 மாணவர்கள் ஆயுதம் வைத்திருந்ததால் பாடசாலையை விட்டு நீக்கப்பட் டுள்ளனர். கடந்த 6 மாதங்களில் PACIFICO MARY LAND மாவட்டத்தில் உயர்தர மாணவர்களிடம் இருந்து 24 உம், மத்திய வகுப்பில் இருந்து 41உம் ஆரம்ப வகுப்புகளில் இருந்து 47மாக ஆயுதங்கள் கைப்பற் றப்பட்டுள்ளன. இப்படியான அமெரிக்க மாணவர் சமுகம் தத்தா, அப்பா வழிகளில் ஆயதபாணியாகி உள்ளது. அது தனது நண்பன் மீதே நீட்டியபடி உள்ள இவ் ஆயத கலாசாரம், அதன மீதான ஜனநாயகக் காவலன் அமெரிக்காவின், தண்டனைகள் எதிர் மறையானது.

சமுகம் தன்னை மாற்றிக் கொள்வதன் மூலம், பரஸ்பரம் மற்றைய நாடுகளை மதிப்பதன் மூலம், ஏற்றத் தாழ்வற்ற சமூகத்தை உருவாக்குவதன் மூலம் ஒரு சமுக மாற்றம் மட்டுமே இதை இல்லாது ஒழிக்க முடியும் மாறாக ஆயுத சினிமா கலாசாரத்தை அமெரிக்க கலாசாரமாக மாற்றுவதோ, செக்ஸ் மதுபான கலாசாரமாக அமெரிக்காவை மாற்றுவதன் மூலமோ இதை சாதிக்க முடியாது. அமெரிக்கா என்றால் ஒரே சொர்க்கம் என்றோ, ஜனநாயகத்தின் பட்டுக் கம்பளம் என்றோ, வேண்டுமானால் மூன்றாம் உலக கிணற்றுத் தவளைகள் மட்டும் நம்பிக்கொண்டு இருக்கட்டும்.

சிறுவர்கள் ஆயுதமயப்படுவதும் அது எந்தவகையில் அமைந்தாலும் இது ஆயதகலாசாரமாக சீரழிந்துள்ளதை காட்டுவதுடன், அச் சமுகம் அறியாமையில் மூழ்கி செல்வதையும் காட்டுகின்றது. சமுகம் பற்றிய உயர்ந்த எண்ணங்கள் இந்த ஆயுத கலாசாரத்தின் முன் பாசிசமாக, வன்முறையாக படுகொலையாகவும் மாறி, மக்கள் ... துப்பாக்கி முனையில் கட்டுப்படுத்தும் அமைப் பாக மாறி விடுகின்றது. இதற்குத் தேவை மக்களின் விழிப்புணர்ச்சியே ஆகும்.⦿

## மனித உரிமையை மீறுபவர்வகளே, ஜனநாயகமென கூக்குரல் இடுவதன் அர்த்தம் என்ன?



யூன் மாதம் வெளியான சர்வதேச மனித உரிமைகள் சங்கம் (Amnesty



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

international) அறிக்கையில் ஜெர்மன், சீனா, அமெரிக்கா, பிரான்ஸ், ருசியா, பிரிட்டனை நோக்கி தெளிவான குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இன்று மனித உரிமை மீறப்பட இவர்களே காரணம் என்றும், இவர்கள் இராணுவ குற்றவாளிகளாக உள்ள அதே நேரம், இவர்களுக்கு கல்வி அளிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது. கடந்த 1995ம் ஆண்டில் சித்திரவதை களுக்கு உள்ளாகி 4500 பேர் கொல்லப்பட்டு உள்ளனர். 1,40,000 பேர்வரை காணாமற் போய் உள்ளனரென குற்றம் சாட்டிய மன்னிப்பு சபை இவைகள் 2900 முன்னணி தலை நகரங்களில் நடந்துள்ளதாகவும் குறிப் பிட்டுன்னது.

மனித உரிமை பற்றியும், பயங்கரவாதம் பற்றியும் மீள மீள கூக்குரல் இடும் ஆளும் வர்க்கங்களும், மேற்க்கு நாடுகளுமே மனித உரிமை மீறல்களில் முன்னணியில் நிற்கின்றன. இதன் மூலமே உலகை கொள்ளையிட முடிவதுடன் தமது மனித உரிமை மீறல்களை மற்றையவர்களின் தலைகளில் சூடி மக்களை மந்தை களாக மேய்கின்றனர் தமது தகவல் சாதனங்கள் மூலம்.⦿

> " அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் தமது விடுதலைக்கான நம்பிக்கையை ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் "விவேக"த்தின் மீது வைக்கக் கூடாது. தமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி போராட்டத்தில் அழுந்தி நிற்பதன் மூலம் தான் அவர்கள் வெற்றி பெற முடியும்".
>
> -மா.சே.துங்-

# கொள்ளையடிக்கும் ஆணாதிக்க சமுக கட்டமைவில் பெண்களின் பிள்ளைப்பேறு என்பது மரணமாகும்



உலகு எங்கும் பிள்ளைகள் பிறக்கும் போது ஒவ்வொரு நாளும் 1600 தாய்மார்கள் இறந்து போகின்றனர் என தனது அறிக்கையில் (யூனிசெல்) குறிப்பிட்டுள்ளது.

இது விதியோ, தவிர்க்க முடியாததோ அல்ல. மாறாக ஆணாதிக்க சமுகம் தனது கொள்ளையை காப்பாற்ற பெண் விடுதலையை வழங்காததுடன், பெண்களுக்கான மருத்துவ, கல்வி தொடர்பான விடயங்களில் முற்றாகவே ஒதுக்கு கின்றனர். கனடாவில் 7300 பெண்கள் பிரசவத்தின் போது ஒருவர் இறக்க இது ஆபிரிக்காவில் 13 பெண்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும் போது இறந்து விடுகின்றனர். அந்தளவுக்கு இது விதி எனச் சொல்லும் இம் மக்களை விட இது ஒரு சமுக பொருளாதார, அமைப்பு சார்ந்த பிரச்சனையாக உள்ளதை கனடா,


www.tamilarangam.net

ஆபிரிக்க நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

இன்று உலகில் 10லட்சம், பிரசவத்தின் போது தாய் இறப்பதால் குழந்தை தாய், தந்தையை இழந்து போய் உள்ளனர். பிரசவத்தின் போது இரத்தப் பெருக்கு ஏற்பட்டு 1,40,000பெண்கள் வருடாவருடம் இறந்து போகின்றனர். 40,000 பெண்கள் குழந்தை பிறக்கும் போது இறக்கின்றனர். கருச்சிதைவின் போது 75,000 பெண்கள் வருடாவருடம் இறக்கின்றனர்.

இன்று உலம் தனது சமுக பொருளாதார கட்டமைப்பை மாற்றி அமைப்பதன் மூலம் பெண்களின் பிள்ளைப் பேற்றை ஒரு மனித உழைப்பாக மதித்து, பெண்களை பாதுகாப்பதுடன், ஆணுடன் பெண்ணை சமமாக மதிக்கும் நிலைக்குக் இட்டுச் செல்லும்.⦿

## தாலிபான் முன்னேற்றமும் அமெரிக்காவின் சூறையாடலும்




ஆப்கானிஸ்தானில் ருசிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடிய குழுக்களுக்கு பாக்கிஸ்தான், அமெரிக்கா பாரிய உதவிகளைச் செய்து தமது ஆக்கிரமிப்பைச் செய்தனர். இதன் தொடர்ச்சியில் பல குழுக்கள் ருசிய இராணுவம் வெளியேறிய பின் தமக்குள் மோதத் தொடங்கின. இந்தமோதலானது முடிவற்று நீண்ட நிலையில், அமெரிக்கா விரும்பிய அமைதியான சூறையாடலுக்கு தடையாக இருந்தது.

இதன் தொடர்ச்சியில் 2 வருடங்களுக்கு முன் அமெலிக்கா பாக்கிஸ்தான் கூட்டுச்சதியுடன் தாலிபான் என்ற ஒரு புதிய குழு உருவானது. ஆது வேகமாக முன்னேற நவீன ஆயுதங்களைக் கொட்டித் தள்ளினர். இதன்மூலம் தீவிர மதவாதத்தைக் கக்கியபடி பல பிரதேசங்களைக் கைப்பற்றினர். கைப்பற்றிய பிரதேசத்தில் 7ம் நூற்றாண்டு.. இஸ்லாமிய சட்டத்தைப் பிரகடனம் செய்தனர். பெண்களை பாடசாலையை விட்டுத்துரத்தினர். ஆண்களைத் துப்பாக்கி முனையில் தொழுகைக்கு அழைத்துச் சென்றனர். சகல தொலைக்காட்சிகளும் அடித்து நொருக்கப்பட்டது. அதாவது 1200 வருடங்களுக்கு முந்திய நிலையைப் பிரகடனம் செய்தபடி, தங்கள் சுக போகத்துக்கும், அமெரிக்க பாக்கிஸ் தான் சூறையாடல்களுக்கும் வழிதிறக்க முற்பட்டனர். இந்தக் காட்டுமிராண் டித்தனம் பற்றிபலர் அம்பலப்படுத்திய போதும், ஜனநாயகக்காவலன் அமெரிக்கா மௌனம் சாதிப்பது ஏன்?

இன்று ஆப்கானிஸ்தானிலுள்ள 6000 கோடி கன அளவு கொண்ட இயற்கை வாயு (எரிவாயு)வை எப்படியும் கொள்ளையடித்து விடுவதற்கேயாகும். இதைக் கொள்ளையடிக்க அங்கு அமைதி அவசியம். முன்பு ருசியா 1988 களில் 270 கோடி கனவளவு

இயற்கை எரிவாயுவை வருடாவருடம் கொண்டுசென்றனர். ஆனால் அந்த நாடு தனது தேசிய வருமானத்தில் 3 வீதம் மட்டுமே இதன் மூலம்அன்று பெற்றது. அந்தளவுக்குக் குறைந்தவிலையில் சூறையாடியது. 1995ல் உற்பத்தியான எரிவாயு 30 கோடி கனவளவே. அமெலிக்கா இதைக் கவனத்தில் கொண்டு, மிகப்பெரிய முதலீட்டைச் செய்யத் தயாராகவுள்ளது. ஆனால் அமைதி தேவை.

ஆப்கானிஸ்தானில் இன்று தலா வருமானம் 300 அமெரிக்க டொலர். அதையே சூறையாடிச் செல்லும் அமெரிக்கா கனவுகளை நிறைவு செய்யவே தாலிபான் அமைப்பு உருவானது. இதன் மக்கள்விரோத போக்கைப் பற்றி எந்த முதலாளிக்கும், உலக அரசுக்கும் கவலையில்லை. ஆப்கான் மக்கள் அமெரிக்க நலன்களுக்குகாக தமது கல்வி, உணவு என எல்லாவற்றையும் இழந்து, இஸ்லாமிய மதக்காட்டுமிராண்டிகளின் கால்களை நக்கவேண்டுமாம். இதுதான் அமெரிக்க ஜனநாயகமாம். இதை எதிர்ப்பது ஜனநாயக விரோதமாம். இது என்ன உலகமப்பா?⦿



# நாசிகளுக்கும் பொலீசுக்கும் எதிராக இயங்கிய என் .ரீ. எம் (N:T:M) என்ற பாடற்குழுவுக்கு பிரஞ்சு நீதிமன்றத்தில் மூன்றுமாதச் சிறையும், ஆறுமாதத் தடையும்

உலகத்தில் ஜனநாயகத்தின் சொர்க்கம் எனவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகப் பீற்றும் பிரஞ்சு ஏகாதிபத்தியம், பிரஞ்சில் இயங்கிய ஒரு பாடல்குழுவை தடைசெய்தும் சிறைக்குள் தள்ளியும் உள்ளது.

இதன் பின்னணி ஆராயின் இன்று 25 வீதத்திற்கும் அதிகமான அளவில் 25 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள்



தடை செய்யப்பட்ட N.T.M பாடகர்
படம்: நன்றி Humanite

www.tamilarangam.net

வேலையின்றி உள்ளனர். இதில் கருப்பு, மற்றும் அரபு இளைஞர்கள் அதிகமாகும். இந்த இளைஞர்கள் அரசுக்கு எதிராக, மற்றும் வன்முறைகளிலும், சிறுசிறு அளவில் கலவைகளிலும் ஈடுபடுகின்றனர். அதாவது இந்த இளைஞர்கள் வாழும் பிரதேசத்தில் பொலீஸ் தனது கட்டுப்பாட்டை இரவுகளில் இழந்துவிடு கின்றனர். அந்தளவுக்கு பொலீசுக்கு எதிராக மற்றும் பலவழிகளில் எதிர்த்து இரவுகளில் தாக்குகின்றான்.

நிற, இன வெறிகள் மூலம் புறக்கணிக்கப்பட்ட இந்த இளைஞர்கள் மீது, பொற்றோரின் மூன்றாம் உலக நிலப்பிரத்துவ ... சில பிற்போக்கு கலாச்சாரத்தைக் கடைப்பிடிக்கக் கோரியதால் அவ் இளைஞர்கள் பொற்றோர், இந்த சமூகமென இரண்டிலுமிருந்து அந்நியப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சமூகம் மீது பொலீஸ்வேட்டை நாய்களாக வேட்டையாடும் போக்கு என்பது, பொலீசுக்கு எதிரான ஒரு தீவிர மனபபானமையையும பொலீஸ் ஒரு நிறவெறி நாசி சின்னமாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இப்படி எழும் வன்முறையில் இருந்து என்.ரீ.எம் என்ற பாடற்குழு உருவானது. அவர்கள் சோகங்கள், பிரச்சனைகள், நடை முறைகளை பாடலாகக் கொண்டு வந்தனர் இதை அரசு வன்முறையைத் தூண்டுவதாகக் கூறி, அவர்கள் ஜனநாயகத்தின் சின்னமான பொலிசை நிராகரிக்கும் படி கூறுவது, பிரான்சின் உன்னத ஜனநாயகத்தை ஒழித்துக்க ட்டும், ஜனநாயக விரோதமென அறிவித்து, தடையும். சிறையும் வழங்கி உள்ளது.

இந்த இளைஞர்கள் ஒரு சரியான மாற்று அரசியலை முன்வைத்தது இல்லை. மாறாக நடக்கும் வன் முறையை நியாயப்படுத்தி, தனிமனிதப் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தினர். பிரஞ்சு சமுகத்தில் மேலும் அன்னியப் படுத்தும் நிறவெறிக்குச் சாதகமாகவும் அமைகிறது. வன்முறைக்குக் காரண மான அரசியலை விமர்சித்து மாற்றுக் கருத்தைக் கொடுத்து, புதிய அரசியலை பிரச்சாரம் செய்யவில்லை. அரசே காரணமாக



www.tamilarangam.net

இந்த நெருக்கடிக்கு, பாடல் குழுவை தடைசெய்வது என்பது ஜனநாயக விரோத பொலிஸ் வன்முறையாகும். இந்த பொலிஸ் வன்முறை என்பது மேலும் எதிர் வன்முறையை அதிகரிக்க வைக்கும்.

இத்தடை, சிறையை எதிர்த்து பிரான்சின் பொருமளவு மக்கள் குரல் கொடுத்ததுடன் வீதியில் இறங்கியும் போராடியுள்ளனர். ஆனால் இந்த அரசின் அச்சாணியே அடி சறுக்கும் போது, அதை விமர்சிக்கும் போது எல்லா ஜகநாயக வேஷத்தையும் கைவிட்டு விடுவார்கள் இந்த மேற்கு நாட்டு கனவான்கள் என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இத்தடையை வழங்கிய நீதிமன்றம் இன்று நாசிக்கட்சி ஆட்சியிலுள்ள ஒரு பிரதேசம் என்பதுடன், நாசிக்கட்சி இதை பாராட்டியும் உள்ளனர். அரசு இது பொலிசுக்கு எதிரானது எனக் கூறி நீதிமன்றத் தீர்ப்பில் தாம் தலையிடுவது இல்லையென அறிவித்தது. இதே அரசு பாரீஸ் முதல்வர் (மேஜர்) மீதான ஊழல் குற்றச்சாட்டை விமர்சிக்க மறுத்தும், பின் ஆதாரங்கள் வெளிவந்த பின் நீதிமன்ற வழக்கை இழுத்த க்கவும், வசதியாக நீதிமன்றத்தில் இதை விசாரிக்க இருந்த நீதிபதியை லீவில் இந்தியாவுக்கு அனுப்பியதும் அம்பலமாகியுள்ளது.

இன்று நாசிக்கட்சியின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. வேலையில்லாத மக்களில் 28 வீதம் பேர் 1996 ஜனாதிபதித் தேர்தலில் நாசிக்கட்சிக்கு வாக்களித்தனர். இன்று நாசிக்கட்சி முதல்சுற்று வாக்களிப்பில் முதலாவது அல்லது இரண்டாவது பெரும்பான் மையைப் பெற்று முன்னணிக்கு வருகிறது. இன்று 3 பிரதேச ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. எதிர் காலத்தில் பிரான்சில் ஆட்சிக்கு இவர்கள் வந்துவிடுவார்களா என்ற அளவுக்கு அச்சம் எல்லாத் தரப்புகளிலும் எழுந்துள்ளது. இதை எதிர்த்துப் போராட அரசியல் இல்லாத நிலையில், இதைச் செல்லிப் புலம்புவதுடன் நிற்கின்றனர். நாசிக்கட்சியின் வெளிநாட்டவர் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது. இதை ஆராயின்

| | 1990 | 91 | 92 | 93 | 94 | 95 |
|---|---|---|---|---|---|---|
| வன்முறை. | 71 | 91 | 54+ | 54 | 54+ | 23 |
| காயம் | 38 | 19 | -37 | 37 | -37 | 9 |
| இறப்பு | 1 | - | - | - | 2 | 7 |
| பயமுறுத் | - | 318 | +164 | 165 | 171 | 445 |
| பதில் இல்லாத | - | 87 | +87 | 164 | 170 | 92 |

நாசிய வன்முறை தொலைக்காட்சியில் கூட காட்டப்படுவது இல்லை. மாறாக மூடிமறைத்தபடி நாசிக்கட்சி வளரும் வகையில் அரசும் கட்சிகளும் இயங்குகின்றன. மீண்டும் ஒரு கிட்லரும் அவர் கும்பலும் பிரான்சில் உருவா கிறது.

இது ஓர் அபாயகரமான நிலையாகும். இது மூன்றாம் உலகயுத்த விளிம்பு நிலைக்குள் இட்டுச் செல்கின்றது. அதன் போக்கில் தான் என்.ரீ.எம் குழு தடை, சிறை என்பன ஒரு சான்றாகும். அத்துடன் தமது ஆட்சிப் பிரதேசத்தில் புத்தகக் கண்காட்சி , வாசிகசாலையில் சில புத்தகத்திற்குத் தடை விதித்தும் விதிக்க முனைந்தது என்பதும் ஒரு நாசி ஆட்சிபற்றி பறைசாற்றியுள்ளது. எல்லாம் இந்த ஜனநாயக எல்லைக்குள் தான் நடக்கிறது என்பதும் இந்த ஜனநாயகம் பாசிசம் வரைதான் ஒழிய ஒடுக்கப்பட்ட மக்களினது அல்ல என்பது நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை◉

www.tamilarangam.net

# பாரிஸ் படுகொலை மனித குலத்துக்கும், அதன் விரோதத்திற்கும் விடப்பட்ட பயமுறுத்தலாகும்

அண்மையில் பாரிஸ்சில் இரண்டு புலி உறுப்பினர்கள் இனம் தெரியாத நபரால் - (நபர்களால்) சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வு, தனிநபர் பயங்கரவாத தொடர்ச்சியில், தமிழ் இனத்தின்மீது ஏறி இருக்கக் கையாளப்படும் இப்படுகொலைகள் கண்டிக்கப்பட வேண்டியது.

இப் படுகொலை ஐரோப்பாவில் மூன்றாவது படுகொலையும் பிரான்சில் இரண்டாவது படுகொலையுமாகும். இந்தப் படுகொலையின் மூலம் சொல்லப்படும் செய்தி ஒரு தனி மனிதனின் அற்ப ஜனநாயக உரிமையைத் தன்னும் விட்டுவைக்கத் தயாரற்ற மாற்றுக் கருத்துகளுக்கு விடப்படும் மிரட்டலாகும்.

எம் தேசிய விடுதலைப் போராட்டம் தன் போக்கில் ஒரு கொலைப் பண்பாட்டை, கொலை கலாசாரத்தை கொண்ட ஒன்றாக சீரழிந்த நிகழ்வு தமிழ் பேசும் மக்களின் அற்ப விடுதலைக்குக் கூட சவால் விட்டுள்ளது. இக் கொலை தொடர்பான ஊகங்கள் பல ஊகங்களாக மக்களுக்குள் பரவிய வண்ணம் உள்ளது. புலிகள் இதை திட்டவட்டமாக சில ஊகங்களைக் கொண்டு அரசின் மீது சுமத்தியுள்ள அதே நேரம், இதற்கு வெளியில் வேறு பல ஊகங்களும் பரவியே உள்ளது.

இக்கொலை தொடர்பான பல தரப்பு ஊகங்களையும் அதன் விசாரனைப் போக்கில் நாம் விவாதிப்பதை விடுத்து, இக் கொலையை ஒட்டி சில மனிதப் பிரதிவிளைவுகளை விமர்சனத்துக்கு உள்ளாக்குகின்றோம்.


தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் புலிகளின் வன்முறைக்கு உள்ளாகி, பலத்த ஜனநாயக மீறலைக் கொண்டுள்ள இந்நிலையில், இந்த புலி உறுப்பினரின் படுகொலை புலிகளால் பாதிக்கப்பட்ட சில பிரிவுகளிடம் ஒரு திருத்தி உணர்வை, கண்டிக்காத போக்கை விரவியே நிற்கிறது. ஓர் அரசியல் மாற்றின் மூலம் அல்லாத தனிநபர் படுகொலை மூலம் நடத்தப்படும் இது போன்ற கொலை



www.tamilarangam.net

நிகழ்வுகள் கடுமையான விமர்சனத்துக்கு உரியது மட்டுமன்றி கண்டனத்துக்கும் உரியதே. புலிகளால் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட எந்தப் பிரிவும் இக்கொலைகளை கண்டிக்க முன்வர வேண்டும். இதைவிடுத்து மௌனமாகவோ, அல்லது ஒரு திருத்தி உணர்வை கொண்டிருப்பின் இந்தப் போக்கானது மேலும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில், ஜனநாயகத்தை மீட்கும் அரசியல் வழியில் ஒரு பாரிய தடைக்கல்லாக அமையும்.

தனிநபர்களை ஒழித்துக் கட்டும் எந்தத் தரப்பு அரசியலும் அதன் போக்கில் சொந்த மக்கள் மீது சவாரி செய்ய விரும்பும் ஒரு வன்முறையாகப் பரிணாமிக்கின்றது. ஒருவன் ஏதே ஒரு பிரிவால் பாதிக்கப்படும் போது அதை எதிர் கொள்ள அரசியல் ரீதியில் மக்களைச் சார்ந்து நின்று, அதன் அரசியல் ஒளியில் இதுபோன்ற படுகொலைகளை விமர்சனத்துக்கு உள்ளாக்குவதும், கண்டிப்பதும் அவசியமாகும். இல்லாதவரை அக்கொலையை மறைமுகமாக ஊக்குவிப்பதன் மூலம் மக்கள் மீது மொத்த அடக்குமுறையை ஏற்படுத்த மறைமுகமாக அங்கீகரிப்பதுமாகும்.⦿



# உலக மக்களை புறக்கணித்து பிரான்சின் அணுபரிசோதனையின் கதிர் இயக்கக் கசிவு!



உலக மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கு மத்தியில் உலகை ஆளும் கனவுகளுடன், உயர் தொழில் நுட்பப தேவைக்காக நடத்தப்பட்ட அணுகுண்டு பரிசோதனைகளில் கதிரியக்க கசிவு ஏற்பட்டுள்ளதை பிரன்ஸ் அரசு முதன் முதலாக ஏற்றுள்ளது.


131 வகையிலான இரசாயனக் கழிவு ஏற்பட்டதையும் அதை திட்டமிட்டு மறைத்ததையும், ஜப்பானிய பத்திரிகை ஒன்று முதன் முதலில் அம்பலப்படுத்தியது. இதை அடுத்து பிரன்சு ஏகாதிபத்தியம் இதை ஒத்துக் கொண்டதுடன், 8 நாட்களில் அரைவாசியாக குறைவதாகவும், 80 நாட்களில் இல்லாமற் போய்விடும் எனவும் விளக்கம் அளித்து, தமது மக்கள் விரோத, மாசு அசுத்த மீறல்களை சரிக்கட்டிவிட முயற்சிக்கின்றனர்.

இக் கசிவின் மூலம் நீர் அசுத்தம் அடைந்ததுடன் இக் கதிர் வீச்சு தொடர்ச்சியாக பல கடலின உயிர் இனங்களையும், தாவரங்களையும், சுற்றுச் சூழலையும், மக்களையும் பாதிக்கும். ஆனால் ஏகாதிபத்திய வாதிகள் அணுகுண்டை பரிசோதித்து முடித்த பின் அணு ஒழிப்புப் பற்றி தங்கள் உலக ஆதிக்க நோக்கை தக்க வைக்கும் வகையில் கூப்பாடு போடத் தொடங்கி விட்டனர்.⦿

www.tamilarangam.net

# வரலாறு காணாத அகதிகள் வெளியேற்றமும் அதன் பின்னணியில் ஏகாதிபத்திய சதிகளும்

ருவாண்ட, புருண்டியில் இருந்து 20 லட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள் சைரிஸ் நாடுகளுக்குள் அகதிகளாகத் தப்பி ஓடினர். இந்த அகதிகளைச் சுற்றி வளைத்து ருவாண்ட, புருண்டி, சைரிஸ் இராணுவங்கள் கெரிலாக் குழுக்கள் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.



மனித உயிர் அங்கு குருவிசுடுவதைப்போல சுட்டும் வெட்டியும் கொன்று ஒழிக்கப் பட்டனர் தண்ணீரோ உணவோ இன்றி வானமோ வெளியாகக் கொண்ட வெட்ட வெளிகளில் மக்களோ தவித்தனர்

அகதிகளுக்கு உதவ எனச் சென்ற அமைப்புக்கள் மீதும் தாகுதல் நடாத்தப் பட்டன. இதன் தொடர்ச்சியில் அகதிகள் அமைப்புகள் சர்வதேச இராணுவத்தைத் தலையிடக் கோரினர். இத் தாக்குதல் மற்றும் அகதிகளின் அவலங்களை உலகெங்கும் இனம் காட்டி ஏகாதிபத்திய இராணுவத் தலையீட்டுக்கு நியாயம் கூறினர் அதாவது ஓர் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு இல்லாத மக்கள் ஆதரவைப் பெற ஒரு நாடகமே நடத்தப்பட்டது.

www.tamilarangam.net

இரா்ணுவத் தலையீட்டை எப்படி நடத்துவது என்றதில் ஏகாதிபத்தியத்திற்கு இடையில் தீவிர முரண்பாடு உருவானது. குறிப்பாக இந்த அகதி வெளியேற்றம் நடக்க முன்பே, அமெரிக்கா அறிவித்தது. அதாவது:- ஆபிரிக்காவில் தலையிட, நியாயம் சொல்ல சமஉரிமையுண்டு என்று. இதைப் பின் பிரான்ஸ் கண்டித்தது.

இதன் தொடர்ச்சியில் தான் அகதி வெளியேற்றம் திட்டமிட்ட ஆயுத நடவடிக்கை மூலம் திட்டமிட்ட அகதிப்புறம்பாடு தொடங்கியது. இந்நிலையில் இந்த அகதிகளுக்குள் ஆயுத விநியோகம் நடந்தது அம்பலமாகியுள்ளது. பிரான்ஸ், பிரிட்டன் விநியோகித்ததைக் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அதற்கான இரகசிய ஆவணங்கள் கூட இன்று வெளிவந்துள்ளது.

இந்நிலையில் மக்கள் தாக்கப்பட்டது, அகதி அமைப்புத் தாக்கப்பட்டது பின் இராணுவ நடவடிக்கை கோரப்பட்டதன் மர்மத்தைப் புரிந்துகொள்ள முடியும். இவ் அகதிகள் புறப்படவும் பின் மீளவும் வந்த இடத்திற்கே செல்லவும், வெளியில் எந்தத் தலையீடும் தெரியாத மறைமுக வழிகாட்டல் மூலம் ஏகாதிபத்திய சதிகளில் தமக்கு இடையில் மக்கள் அங்குமிங்கும் அலைகின்றனர்.
அகதிகளோ தண்ணீர், உணவு இன்றி காய்ந்த வயிற்றுடன் இங்குமங்குமாக நாட்கணக்காக நடக்கின்றனர். அகதிகளுக்கு உதவப் புறப்பட்ட அகதி அமைப்புக்கள் ஒப்பாரி வைப்பதுடன் உணவுகள் வந்தபாடின்றி கைவிரிக்கின்றனர். அதை விநியோகிக்க வந்த இராணுவ நடவடிக்கையும் வந்தபாடில்லை. ஆனால் மற்றுமுகமாக ஓர் யுத்தம் அம் மக்களுக்குள்ளும், சுற்றயும் ஏகாதிபத்தியங்கள் முடக்கிவிட்டுள்ளன. நாம் இந்த ஆபிரிக்கா நாடுகளை எடுத்து ஆராய்வோமாயின்

| | ருவாண்டா 92 93 94 95 | புறுண்டி 92 93 94 95 | சைரிஸ் 92 93 94 95 |
|---|---|---|---|
| சனத்தொகை | 60 லட்சம் | 64 லட்சம் | 44லட்சம் |
| இராணுவ எண்ணிக் | 40 ஆயிரம் | 14 ஆயிரம் | 49 ஆயிரம் |
| விமானப்பிரிவு | 2 | 5 | 22 |
| வருட வருமானம் (கோடி டொலரில்) | 160, 150, 120, 110 | 122, 110, 90, 86 | 900, 760, 600, 530 |
| ஒரு நபரின் சராசரி வருமானம்- டொலர் | 210, 200, 200, 180 | 215, 180, 150, 140 | 260, 185, 135, 120 |
| வருடக் கடன் கொடுப்பனவு கோடி டொலரில் | 35, 35, 71, -- | 31, 23, 31, -- | 28, 17, 22, -- |
| வெளிநாட்டுக்கடன் கோடி டொலரில் | 92, 88, 94, 100 | 115, 108, 119, -- | 978, 930, 980, -- |
| பணவீக்கம் வீதத்தில் | 9.5, 12.4, 64, 22 | 4.7, 9.7, 14.8, 14.9 | 4.21, 19.87, 23.773, 5.42 |
| பணப்பெறுமதி ஒரு டொலருக்கு | 133.3, 44.2,-,445.17 | 208, 240, 252, 250 | 0.215, 2.51, 11.94, 17.024 |
| விவசாயத் தொழிலில் ஈடுபடும் மக்கள் | 82 விகிதம் | 56 வீதம் | 57 வீதம் |

www.tamilarangam.net

இன்று இம் மூன்று நாட்டு தலாவருட வருமானம் 180, 140, 120 டொலர் என்ற நிலையில் உள்ளது. அத்துடன் தேசிய மொத்த வருமானத்தைவிட வெளிநாட்டுக் கடன் கூடுதலாக உள்ளது. தேசியவருமானம், தனிநபர் சராசரி வருமானம் வீழ்ச்சியடைய கடன் அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன் பணவீக்கம் வேகமாக மேல்நோக்கிச் செல்கின்றது. பெருமளவு மக்கள் விவசாயத்தில் வாழ்க்கையைத் தள்ள, இந்த வறுமையை தேவையான வகையில் ஏகாதிபத்தியம் பயன்படுத்து கின்றது. இந்த மூன்று நாடுகளும் உலகில் மிக வறுமையான நாடுகளாகும்.

இந்த அகதி வெளியேற்றத்தை ஏற்படுத்தி இந்த மக்களின் துயரத்தை விளம்பரம் செய்து தமது ஆதிக்க நலன்களை மேலும் நிறுவும் நோக்கில், மக்கள் பந்தாடப்பட்டுள்ளனர். வருட தேசிய வருமானம் 100 கோடி டொலரை சூறையாட முனையும் இந்த பணக்கார நாட்டு ஜனநாயகம்தான் என்ன?⦿

## ஜனநாயகத்தை வென்றெடுக்க, ஆயுதமேந்திய பெருவிய மக்களுக்கு எதிராக சர்வதேச கூட்டு ஏகாதிபத்திய பயங்கரவாதம்


மார்கழி மாதம் 19ம் திகதி பெருவிய புரட்சிகர கம்யூனிஸ்டுக்கள் பெருவில் இருந்த ஜப்பானிய தூதரகத்தைக் கைப்பற்றி, அவர்களைப் பணயம் வைத்ததைத் தொடர்ந்து உலகெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உலகத் தொலைக்காட்சிகள், செய்தி அமைப்புக்கள் பயங்கரவாத பூச்சாண்டி காட்ட எல்லா மதப்பீடங்களும் உடன்விடவேண்டும் என வேண்டுகோள் விடுக்க பெரு வீதியில் மதச் சின்னங்களுடன் ஊாவலங்கள் கூட நடத்தினர். உலகில் செல்வச் சுரங்கங்களில் ஒன்றான பெருவில் 70 சதவீதமான மக்கள் சேரிப்புற வறுமையில் வாடுகின்றனர். அதை எதிர்த்து, அந்த மக்களின் விடிவுக்குமாகப் போராடிய பல ஆயிரம் மக்களைக் கொன்றும், சில நூறு பேரை எந்த நீதி விசாரனையும் இன்றி, இரகசியமாக இடங்களில் அடைத்து வைத்தும் உள்ளனர் பாசிஸ்ட்டுக்கள்

நடக்கும் போலித் தேர்தல் மூலம் அமெரிக்கா, ஜப்பான் ஆசியுடன் ஆட்சிக்கு வரும் பாசிஸ்ட்டுக்கள், மக்களின் அடிப்படை உரிமையை மதிப்பது இல்லை சிறை, சித்திரவதை, படுகொலை என்பதை சட்டம் இன்றி அதை ஜனநாயக நடைமுறையாகச் செய்வதே அங்கு நடைமுறையாகும். இந்த அரசு ஏகாதிபத்திய பயங்கரவாதத்திற்கு அதை எதிர்த்துப் போராட எழுந்த மக்கள் போராட்டம், தவிர்க்க முடியாது எதிர்வன்முறையைக் கையிலெடுத்தது. இந்த தொடர் யுத்தத்தம் 1970 முதல் தீவிரமடைந்தது 1970 முதல் 1994 வரையிலான போராட்டத்தில் மொத்தமாக 27,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மக்கள் போராட்டத்திற்கத் தலைமை தாங்கும் (M.R.J.A) எம். ஆர். ஜே. ஏ என்னும் ருபாக், அமாரு மற்றும்

www.tamilarangam.net

ஒளிரும் பாதையான M.I.R என்று அமைப்பும் மக்களுக்குள் ஆழமாகி உள்ளது. ஒளிரும் பாதை 10,000 ஆயுதம் ஏந்திய உறுப்பினர்களையும், 60,000 அமைப்பு அங்கத்தவரையும் கொண்டு வளர்ந்து வரும் ஒரு புரட்சிகர அமைப்பாகும். ஏம்.ஆர்.ரீ.ஏ



எம்.ஆர்.ரீ.ஏ தலைவர் காம்பொஸ்

என்ற அமைப்பு நகர்ப்புறம் சார்ந்த சில ஆயிரம் பெயரைக் கொண்ட ஒரு மக்கள் அமைப்பாகும் இதன் தலைவர் காம்பொஸ் (Campos) சேகுவராவின் மச்சான் ஆவர். 1990 முதல சிறையில இருககும இவா 1974 முதல 84 வரையிலும் ஒளிரும் பாதை அமைப்பில் இருந்தவர். ஒளிரும் பாதை அமைப்பின் தலைவரான அபிமல் (Ahimael) 1991 முதல் சிறையில் இருக்கிறார். காம்பொஸ் 1984ல் எம்.ஆர்.ரீ.ஏ இன் தலைவராவர். 1980 களில் உருவான இவ்வமைப்பு ஒளிரும் பாதையான எம்.ஐ.ஆர் உடன் கருத்து ரீதியில் முரண்பாட்டைக் கொண்டுள்ளது.

இதன் முரணபாடடை நாம இக கட்டுரையில ஆராய்வதைத் தவிர்க்கின்றோம். இருந்தபோதும் எம்.ஆர்.ரீ.ஏ என்ற அமைப்பு ஒளிரும் பாதையினை விட வரையறுக்கப்பட்ட தேசிய புரட்சியை உடன் போருகின்றனர். மாறாக எம்.ஐ.ஆர் என்ற ஒளிரும் பாதை என்ற அமைப்பு நீண்டகால மக்கள் யுத்தத்தையும் காலனி எதிர்ப்பு மற்றும் தீவிர அமெரிகக எதிர்ப்பை அடிபபடையாகக் கொணடு இயங்குகின்றது

எம்ஆர்.ஐ.ஏ என்ற அமைப்பு ருபாக் அமாரு (1780) ஸ்பானியாவுக்கு எதிராக 1780 களில் போராடிய ஒரு தியாகியின் பொயரை தன்னுடன் கொண்டுள்ளதுடன், இவ்வமைப்பு ஒரு தலைமையின் கீழ் கூட்டுமுன்னணியை அயல்நாட்டுப் போராளிகளுடன் கொண்டுள்ளது. அந்தவகையில் பெரு, ..., சிலி, கொலம்பிய, ஈக்குவாடர் என்ற நாட்டுடன் விரவிய ஒரு கொரிலாக் குழுவாக ஒரு தலைமையின் கீழ் இயங்குகின்றது.

பெருவின் இன்றைய ஜனாதிபதியான அன்னியனான ஜப்பானைச் சேர்ந்த அர்பாட்டோ பியூஜிமோரி 1934ல் இப் பெருவில் கால் ஊன்றினான். பெருவின் செல்வாக்கு மிக்க அதிகாரப் பிரிவான ஜப்பானியாககளின தலைவரும, பெருவின் தலைவராகவும் இந்தப் பொதுத் தேர்தல் மூலம் ஆட்சியில் ஏறியது மட்டுமன்றி ஒரு குடும்ப ஆட்சியாகவே விரவியுள்ளது.

எம்.ஆர்.ரீ.ஏ அந்நிய நாட்டுக்கு எதிரான போரில் 1991ல் ஜப்பானுக்கு எதிராகவும், 1990களில் அமெரிக்காவுக்கு எதிராகவும் என பலமுறை தாக்குதல்களை நடத்தியுளளனர். 2 கோடியே 40 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட பெருவில், 72 லட்சம் மக்கள்

www.tamilarangam.net

பெருவின் தலைநகருக்குள் குழுமியுள்ளனர். அந்தளவுக்கு மக்கள் வறுமைக்குள் சிக்கியுள்ளனர். 46 வீதமான இந்நியப் பழங்குடி மக்களைக் கொண்டுள்ள பெருவில் இன்று ஸ்பானியோவே உத்தியோக பூர்வமான மொழியாக உள்ளது. அமெரிக்காவைக் கண்டுபிடித்தவன் கொலம்பஸ் என்ற போர்வையில் நடந்த ஆட்சியின் விளைவு சொந்தத் தாய் மொழியையும், ஆட்சியையும் இழந்ததே. இங்கு தாய்மொழியான queehua பேசுவோர் 16.5 வீதங்கள் மட்டுமே ஆகும்.

இன்று பெரு அமெரிக்காவினதும், ஜப்பானினதும் கோரப்பிடிக்குள் சிக்கிய ஒரு நவ காலனியாகும். இந்தநாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடன் 1995ல் 1,36,069 கோடி இலங்கை ரூபாய்களாகும். இந்த நாட்டுத் தேசிய வருவாயில் ஒரு நபர் பெறும் சராசரி வருமானம் ஒரு லட்சம் ரூபாயாகும். ஆனால் மத்திய தரம் பெற்று வாழ்வது 30,750 ரூபாய்தான் இதைவிட அதன் கீழ்ப்பிரிவு மிகவும் மோசமான வறுமையில் சிக்கியுள்ளனர். ஆனால் பெரு ஒரு வளமிகு நாடு. உலக செல்வ நாடுகளின் செல்வச்சுரங்கமாக பெரு இன்றுள்ளது. உலக அளவில் உற்பத்தியை எடுப்பின் மீன் உற்பத்தி 2 வது இடத்தையும், வெள்ளி உற்பத்தி 3 வது இடத்தையும், ஈய உற்பத்தியில் 4 வது இடத்தையும், வெள்ளீய உற்பத்தியில் 5 வது இடத்தையும், செப்பு உற்பத்தியில் 8 வது இடத்திலும், தங்க உற்பத்தியில் 13 வது இடத்திலும், காப்பி உற்பத்தியில் 16 வது இடத்திலும், ஆட்டு இறைச்சி உற்பத்தியில் 25 வது இடத்திலும் உள்ள ஒரு வளம்மிக்க செல்வ நாடு.

ஆனால் மக்கள் வறுமைக்குள்ளும், பட்டினிக்குள்ளும் சிக்கியுள்ளனர். படு மோசமான பின்தங்கிய உற்பத்தி முறைகளை பேணியபடி ஏகாதிபத்தியத்தின் ஒரு சூறையாடும் தளமாக உள்ளது. இந்த மக்களின் தேசிய உற்பத்தியை, உழைப்பில் ஈடுபடுவோரின் விபரத்தை ஆராயின்:-

| தொழில் | வேலை செய்வோரின் பங்கு -வீதத்தில் | தேசிய வருமானத்தில் இதன் பங்கு - வீதத்தில் |
|---|---|---|
| விவசாயம் | 30 வீதம் | 12 |
| சுரங்கம் | 8 | 15 |
| தொழிற்சாலை | 14 | 16 |
| சேவைத்துறை | 48 | 57 |

விவசாயத்தை பெருமளவில் உற்பத்தியாகக் கொண்டிராத பெரு மக்கள் வறுமைக்குள் வாடுகின்றனர். அந்தளவுக்கு சூறையாடும் பொருளாதாரம் உள்ளது.

இந்நிலையில் அம்மக்கள் போராடும் நிலைக்குள் சென்றனர். அம்மக்களின் விடுதலைக்காக தலமை தாங்கிப்போரிடும் M.R.I.A என்ற அமைப்பின் தலைவர் உட்பட 500 பேர் எந்த நீதி விசாரனையும் இன்றி சிறையில் உள்ளனர். அவர்களை விடுவிக்கக் கோரி 22 போராளிகள் 500 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்தனர். இதில் ஜனாதிபதியின் தாயார், சகோதரர், பல மந்திரிகள், உலக ராஜதந்திரிகள், இராணுவத்தலைவர், பொலீஸ் தலைவர், கொரில்லாக்குழுவை ஒடுக்கும் பிரிவுத்தலைவர்கள் எனப்பலரும் அவர்களின் ஆலவட்டங்களும் கைதாகினர்.

www.tamilarangam.net

உடனடியாகவே அனைத்து பெண்களையும் (ஜனாதிபதியின் தாயார் உட்பட) விடுவித்த அவர்கள் நத்தாருக்கு முதல் நாள் 225 பேர் வரை விடுவித்து மொத்தமாக 7வது விடுவிப்பை நத்தாருக்கு முன் செய்தனர். மிகுதியாக 140 பேரையம் பணயக்கைதிகளாக தொடர்ந்தும் வைத்திருந்தனர்.


இராணுவம் தூதரகத்தைச் சுற்றி

இதற்கு முன்னரே அரசு நீர், மின்சார, தொலைபேசி வெட்டை நடத்தியதன் மூலம், உலகளவில் தனது பாசிசத்தை இனம் காட்டியது. விடுவிக்கப்பட்ட பெரு அரசின் சகாக்களுக்குக் கூட இந்த இரக்கமற்ற பாசிசத்தை சகிக்க முடியாது, விடுவித்த குறுகிய நேரத்தில் இதைக்கண்டித்தனர். இது இலங்கையில் சந்திரிக்கா மக்களுக்கு உணவு, மருந்து அனுப்ப மறுத்து அவை புலிகளுக்கு போய்சேர்ந்து விடும் எனக் காரணம் காட்டி நியாயப்படுத்துவது போல் தூதரகத்தில் இருந்த தமது சகாக்களுக்கும் ஆலோசகர்களுக்கும் வழங்க மறுத்து தனது பாசிச சதிராட்டத:தை இனம்காட்டியது.

போராளிகள் தமது மிகச்சிறந்த ராஜதந்திரம் மூலம், அரசை அம்பலப்படுத்தி, தமது போராட்டத்தின் நியாயத்தை எல்லாப் பொய் அவதூறுகளையும் மீறி, குறைந்தளவு அவர்களின் செய்தியூடகங்களையே சொல்லும்படி செய்தனர். அதற்கு முன்னரே இந்தத் தாக்குதலை படம் பிடித்து அனுப்பிவைத்தனர். வன்முறை விருப்பம் கொண்ட கொலைக்கும்பல் தாம் அல்ல என்பதையும், ஏகாதிபத்திய பொய் பித்தலதட்டத்தையும் அம்பலப்படுத்தியும், தம்மீது வன்முறையானது திணிக்கப்பட்டதையும், தாம் போராடும் நியாயத்தையும் உலகிற்கு பறைசாற்றியுள்ளனர்.

இந்நிலையில் இப் பிரச்சினையை கையாண்ட ஜப்பான் - அமெரிக்காவுக்கும் இடையில் முரண்பாடு முற்றியுள்ளது. ஏகாதிபத்திய போட்டி எப்படி மோதலாக மாறுகின்றது என்பதையும் திறமாக அம்பலப்படுத்தினர். நத்தாருக்குப் பின் பேச்சுவார்த்தைக்கு முதன் முதலாக அரசு சென்றது. இதற்கு முன்பே ஜப்பானில் வாழும் பெருவியர் மீது தாக்குதலை நடத்தின. உருகுவே அரசு பேச்சுவார்த்தை நடத்தி கைதிகளை விடக் கோரியது. பேரு அரசு இழுத்தடிக்கவே தனது சிறையில் இருந்த இரு எம்.ஆர்.ஐ.ஏ கைதிகளை விடுவித்தது. இதையடுத்து பெரு உருகுவே தூதுவரை திருப்பி அழைத்தது. ஏகாதிபத்திய முரண்பாடுகள், போட்டிகளை இனம்காட்டி போராளிகள் தமது சிறந்த மனிதாபிமானத்தை இனம்காட்டினர்.

நாம் இக் காட்டுரையை எழுதிய புது வருடம் வரை 74 பேரை பணயமாக வைத்து இருந்தபடி எந்த முன்னேற்றமும் ஏற்படாது தொடர்ந்து கொண்டிருந்தது.

www.tamilarangam.net

இப் பணயம் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு ஆப்புவைத்துள்ளது. உலகை ஆளும் கொள்ளைக் காரர்களை பீதிக்கு உள்ளாக்கியுள்ளது. உழைக்கும் வர்க்கம் தமது விடுதலையின் ஒரு பகுதியாக இதை இனம்கண்டு கொள்ளவு இயல்பானதே. அவர்கள் தமது சகாக்களை விடுவித்து வெற்றிபெற உழைக்கும் மக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.◉



# போர்க்குணம் கொண்ட பிரஞ்சுத் தொழிலாளியும் பிரஞ்சு மக்களின் மொத்த சமூக அமைப்பும்

சென்ற இதழின் இத் தொடர்ச்சியை நாம் மேலும் விரிவாக ஆராய்வது மேலும் மேலும் பிரஞ்சு சமுதாயத்தை புரிந்து கொள்வதன் மூலம் சர்வதேச சமுகத்தையும் புரிந்துகொள்ள உதவும். சர்வதேச ரீதியாக இவ்விடயத்தை உங்கள் முன் இக்கட்டுரையின் மூலமும் வெளிக்கொண்டு வருகின்றோம். சர்வதேச ரீதியாக உற்பத்தியை வருடம் (PIB) ஒன்றுக்கு நாம் முன்னணி ஒழுங்கில் ஆய்வு செய்வோமாயின்;

| நாடுகள் | 1950ல் கோடி டாலரில்- 1990 பெறுமதிப்படி | நாடுகள் | 1994ல் கோடி டாலரில் 1990 பெறுமதிப்படி | அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 1,45,700 | அமெரிக்கா | 5,90,300 | 405 வீதம் |
| சோவி.யூனியன் | 51,000 | சீனா-1992ல் | 3,61,500 | 1079 வீதம் |
| இங்கிலாந்து | 34,000 | ஜப்பான் | 2,44,100 | 1564 வீதம் |
| சீனா | 33,000 | ஜெர்மனி | 1,68,000 | 788 வீதம் |
| பிரான்ஸ் | 21,800 | இந்தியா-1992 | 1,18,800 | 555 வீதம் |
| இந்தியா | 21,400 | பிரான்ஸ் | 1,04,200 | 477 வீதம் |
| ஜெர்மனி | 21,300 | இங்கிலாந்து | 96,100 | 282 வீதம் |
| இத்தாலி | 16,100 | இத்தாலி | 95,300 | 598 வீதம் |
| ஜப்பான் | 15,600 | ருசியா-1992ல் | 80,100 | 157 வீதம் |
| கனடா | 9,600 | பிரேசில் | 78,100 | - |

முதல் பத்து நாடுகளின் வளர்ச்சி விகிதம் 1950களில் இருந்ததை விட 1994ல் பாரிய மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் மக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இவ்வளர்ச்சி விகிதம் அளவிடப்படவில்லை. மொத்த தேசிய வருமானத்தைக் கொண்டு கணிப்பிடப்பட்டது. 1950களில் முன்னணியில் இருந்த சோவியத் பொருளாதாரம் 1994ல் படு பாதாளத்துக்குச் சென்றுள்ளது. கமியூனிசத்தை 1950களின் பின் கைவிட்ட அந்நாடு படிப்படியான முதலாளித்துவ

www.tamilarangam.net

மீட்சியின் தொடர்ச்சியில் 1994ல் 9வது இடத்துக்குச் சென்றதுடன் 157வீத வளர்ச்சியை மட்டுமே 45 ஆண்டுகளின் பின் சாதிக்க முடிந்தது. அதேநேரம் 1950 களில் புரட்சியை நடத்திய சீனா 5வருடத்தில் இருந்து 2வது இடத்துக்கு வந்துள்ளது. இதன் வளர்ச்சி 1079வீதமாக இருந்தது. சீனா 1980களில் கைவிட்ட கமியூனிசத்தைத் தொடர்ந்து முதலாளித்துவ மீட்சி அந்நாட்டுப் பொருளாதாரத்தை எதிர்காலத்தில் பின்தள்ளப் போவதுடன் உலகில் மிகக் குறைந்த மலிவு உழைப்புச் சந்தையாகவும் இன்று மாறியுள்ளது.

2ம் உலக யுத்தத்தில் பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் யத்த இழப்புக்களை பெற்று தம்மைப் பலப்படுத்திய நேரம் பாரிய மிக மோசமான யுத்த இழப்பைச் சந்தித்த சோவியத் யூனியன் யுத்த இழப்பின்றி தன்னை முன்னணிக்குக் கொண்டுவந்தது மட்டுமன்றி புதிதாக உருவான கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், சீனாவுக்கும் கூட பாரிய உதவிகளை நல்கவேண்டி இருந்தது. இந்த நிலைகளில் கூட தன்னை மேல்நிலைக்கு உயர்த்தியதுடன் மற்றைய முன்னைய வல்லரசுகளின் பொருள் உற்பத்தியைக் கூட மிஞ்சினர். இன்று அந்நாடு கமியூனிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டது என்பது அதன் பொருளாதாரத்தை படுமோசமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அதேநேரம் இரண்டாம் உலக யுத்தத்தை தொடங்கிய ஜெர்மன், ஜப்பான் போன்ற நாடுகள் 1950களில் இருந்த நிலையை விட 3ம் 4ம் இடங்களுக்கு வந்ததுடன், ஜப்பான் அதிகூடிய வளர்ச்சி வீதத்தை 1564 வீதத்தை அடைந்தனர்.

இன்று முன்னணியில் நிற்கும் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனிய உற்பத்திப் பொருக்கமானது உலகச் சந்தையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. 1940களில் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி, ஜப்பானின் சந்தையைக் கைப்பற்றிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றுக்கு இடையிலிருந்த உலக ஒழுங்கு இன்று ஜப்பான் ஜெர்மனியுடன் பங்கிடவேண்டிய நிலைக்குச் சென்றுள்ளது. அதேநேரம் சோவியத், சீனா உட்பட கிழக்கு ஐரோப்பிய நாட்டுச்சந்தை புதிதாக உருவான போதும் அங்கும் இவை பல நெருக்கடிக்கு முகம் கொடுப்பதுடன், தமது பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் இன்றுள்ளனர். இது மூன்றாவது உலகயுத்தம் ஒன்றின் மூலம் மட்டுமே தீர்க்க முடியுமென்ற போக்கில் தம்மைத் தாம் மறைமுகமாக யுத்த்திற்கு தயார் செய்கின்றனர். இந் நாடுகளில் ஏற்படும் சமுக நெடுக்கடிகள் இந்நாடுகளில் (G-7 நாடுகள்) 2கோடியே 30 இலட்சம் பேர் வேலைதேடும் அலுவலகத்தில் வேலைகேட்டு நிற்கின்றனர். இப் புள்ளிவிபரம் கூட உண்மையில் இரட்டிப்பானது என்பதுடன், இது வேலை இல்லாமையை குறைத்துக் காட்டும் நடைமுறைகளக்கு ஊடாகவே வெளிவந்தவை.

உலகிலுள்ள G-7 என்ற பணக்கார நாடுகளில் கட்டுப்படுத்தப்படும் மொத்த செல்வம் (PNB) என்னவென ஆராய்வோமாயின்;

| நாடுகள் | வீதம் |
|---|---|
| அமெரிக்கா | 26.3 |
| ஜப்பான் | 15.4 |
| ஜெர்மனி | 8.1 |
| பிரான்ஸ் | 5.6 |
| இத்தாலி | 5.1 |
| இங்கிலாந்து | 4.5 |
| கனடா | 2.6 |
| வளர்முக நாடுகள் | 16.3 |
| வளர்ச்சி குன்றிய நாடு | 16.1 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| வளர்முக நாடுகள் | மொத்த விகிதம் 16.3 |
|---|---|
| சீனா | 2.5 |
| ஸ்பானியா | 2.4 |
| பிரேசில் | 1.9 |
| ருசியா | 1.8 |
| கொலண் | 1.4 |
| தென்.கொரியா | 1.4 |
| மெக்சிக்கோ | 1.3 |
| ஒஸ்திரியா | 1.3 |
| இந்தியா | 1.2 |
| சுவிஸ் | 1.1 |



G-7 என்ற 7 பணக்கார நாடுகளும் உலக செல்வத்தில் 67.6 வீதத்தை கட்டுப்படுத்தும் மொத்த செல்வம் 60,00,000 கோடி பிராங்குகள் ஆகும். இங்கு மெத்த வேலையின்மை 230 இலட்சம் பேர் ஆவர். உண்மையில் செல்வம் சரியாகப் பங்கிடப்படின் சீனா, இந்தியா சராசரி 20 வீதமளவு செல்வம் பகிரப்படுவதன் மூலம் மட்டுமே உலக செல்வம் சமமாகப் பகிரப்டும். ஆனால் இன்று உலகம் மறுதலையாக போலியான ஜனநாகம் கூறிதனிநபர், பொருளாதார சூறையாடல்தான் ஜனநாயகம் என ஏற்படுத்தி, பின் ஒருசில பணக்கார நாடுகள் உலகசெல்வத்தை கொள்ளையடித்துச் செல்கின்றன.

இதற்காக ஜனநாயகம், ஜனநாயகம் என அதிகம் கதைப்பதுடன் தமக்கு இசைவாக சர்வதேசிய அரசியல் போக்கை ஏற்படுத்தியும், எல்லா நாட்டு அரசு அமைப்புக்களையும் ஏற்படுத்தி, அது சிதையாத வண்ணம் பாதுகாக்க எல்லாவிதமான முண்டுகொடுப்புகளையும் செய்து நிற்கின்றன. மக்களின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்த 99வீதமான செய்தி ஊடகங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன், அதன் மூலம் ஜனநாயம் பற்றி ஒரு பொய்மை கொண்ட மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தியும் வருகின்றனர். இதற்கொன ஐக்கிய நாடுகள் சபையை தமது கையக்குள் போட்டு வைத்திருப்பதுடன், நமது செந்த நலன்களுகளே பயன்படுத்தியும் வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையும் யார் அதிக பணம் கொடுக்கின்றார்களோ அதற்கு இசைவாக உலக ஒழுங்கை ஜனநாயகத்தின் பெயரால் ஒழுங்குசெய்யும் முயற்சி தீவிரமடைகின்றது. அதை மறுக்கும் போது நெருக்கடி உருவாகிறது. இன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு தேவையான பணத்தைக் கொடுக்கும் நாடுகளைப் பட்டியலிட்டால;...

| நாடுகள் | வீதம் |
|---|---|
| அமெரிக்கா | 25வீதம் |
| ஜப்பான் | 13.9 ,, |
| ஜெர்மனி | 8.9 ,, |
| ருசியா | 7.1 ,, |
| பிரான்ஸ் | 6.3 ,, |
| இங்கிலாந்து | 5.3 ,, |
| இத்தாலி | 4.7 ,, |
| ஏனையவை | 28.7 – |

ஐக்கிய நாடுகள் சபைக்கு பணம் கொடுக்கச் சம்மதித்து கொடுக்கப்படவுள்ள தொகையும் நாடுகளும் இவை.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தேமு

| நாடுகள் | டொலர் |
|---|---|
| அமெரிக்கா | 12.310 |
| ருசியா | 4,050 |
| உக்கிரன் | 2,280 |
| பெல்ருசியா | 590 |
| ஜெர்மனி | 280 |
| ஈரான் | 210 |
| ஸ்பானிஸ் | 190 |
| சீனா | 170 |
| பிரான்ஸ் | 150 |

ஐக்கிய நாட்டு சபைக்கு கொடுக்காது உள்ள பணம்



உலகில் பணக்காரன் ஏழைகள், தொழிலாளியை எப்படி ஆளுகின்றானோ, அதேபோல பணக்கார நாடுகளின் பொம்மையாக ஐக்கிய நாடுகள் இன்றுள்ளது. இன்று 2, 3 [illegible] பெரும் தொகை பணம் கொடுக்கும் ஜப்பான், ஜெர்மனி தனக்கான உரிமைகோரி தொடர்ச்சியாக குரல் கொடுக்கிறது.

தொடரும்..

## மனிதனை முடமாக்கும் போக்கில்

இன்று பிரான்சிலுள்ள ஒருவன் தன் வாழ்நாளில் 9 வருடங்களை தொலைக்காட்சி பார்ப்பதில் செலவழிக்கின்றான் அதே நேரம் அவன் உழைக்கும் காலம் 8 வருடங்கள் மட்டுமே ஆகும்.

ஒரு அமெரிக்கச் சிறுவன் (2முதல் 11 வயது வரை) ஒருவன் ஒரு கிழமைக்கு தொலைக்காட்சி பார்கும் நேரம் 32 மணித்தியாலங்களாகும். ஒரு சராசரி அமெரிக்கன் ஒரு நாளைக்கு 4.5 மணித்தியாளம் தொலைக்காட்சி பார்க்கின்றான். அதே நேரம் ஒரு அமரிக்கன் 18 வயதுக்கிடையில் 26,000 கொலைகளைப் பார்க்கின்றான். இப்போது புரியும் ஏன் அரசு தனது சுரண்டலைப் பாதுகாக்க வன்முறையில் ஈடுபடுகின்றது என்றும், எப்படி நியாயப்படுத்துகின்றது என்றும் அதேபோல் மக்கள் ஏன் மந்தைகளாகவுள்ளனர். என்பது, மக்கள் மீள மீள மூளைச்சலவை செய்யப்படுவதையும் புரிந்துகொள்ள முடியும்.

# மக்களை மந்தைகள் என்போரின் வாக்கு மூலங்கள்



## அண்மையில் சனநாயன சனாதிபதி சந்திரிகா பேசியவை:-

"1997ம் ஆண்டு முடிவதற்குள் வடக்கு - கிழக்கு யுத்தம் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவரப்படும்."
இப்படி J.R முதல் சந்திரிகா வரை எத்தனை முறைதான் கதைவிட்டனர்.

"முன்னாள் சனாதிபதி J.R கொண்டுவந்த பூரண அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறை விரைவில் நீக்கப்படும்."
இதுபோல் காலக்கெடு விதித்து பின் கைவிட்டதை எல்லாம் எப்படித்தான் மறக்க முடியும்.

"இந்த அரசியல் அமைப்பு சட்டத்தில் சனாதிபதிக்கு பல விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நான் பயன்படுத்துவதில்லை."
அப்படியாயின் எப்படித்தான் ஆள்கின்றாரோ? இந்த அரசியல் வாதிகளே இப்படித்தான இரட்டை நாகுப பேர்வழிகள்.

"நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக நாட்டு மக்கள் பல தியாகங்களை செய்யவேண்டி உள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்ய ஒரு நாளைக்கு ஒரு மனிதன் 12 மணிநேர வேலை செய்ய தயாராக இருந்தால் நான் 24 மணிநேரமும் வேலை செய்யத் தயாராகவுள்ளேன்."
நல்லது அம்மையாரே எந்த நாட்டை அபிவிருத்தி செய்ய? அமெரிக்காவையா? அல்லது இலங்கையையா? வேலையின்றி உள்ள 20 வீதம் பேருக்கு மிகுதியபகவுள்ள 4 மணிநேர வேலையைக் கொடு, அதைவிட்டுவிட்டு கதையளக்காதே. உலகவங்கியில் பன்னாட்டுக் கம்பனிகளும், கூடிய நேரத்தில் குறைந்த சம்பளத்தில் கொள்ளையடிக்க, இருக்கும் 8 மணி நேர வேலையை 12 மணியாக மாற்றுவது அமெரிக்காவின் கனவு. அதுவே சந்திரிக்கா அம்மையாரின் கனவும். அடுத்த (1997) வருட விடுமுறை நாட்களில் 6 குறைத்ததும் இந்த நோக்கில் தானே அம்மையாரே?

www.tamilarangam.net



"அடுத்த வருடம் முதல் உபமானி யங்கள் சிலவற்றை குறைக்கவேண்டிய நிலை ஏற்படும்."


உலகவங்கியும், காட் ஒப்பந்த நிபந்தனை அல்லவா இது. ஆட்சி இரங்கையில் அல்ல அமெரிக்காவில் இருப்பது தானே தெளிவானது.

"உலக சந்தையில் மாவின் விலை அதிகரித்துள்ளது. உண்மையில் ஒரு இறாத்தல் பாணை 11 ரூபாவுக்கே விற்பனை செய்யவேண்டும். ஆனால் நாம் அதனை 6 ரூபாவுக்கே விற்பனை செய்கிறோம். இதனால் வருடம் 7,000 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இந்தப் பணத்தினால் 4 லட்சம் பேருக்கு பொருளாதார தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். இதனை மக்களே தீர்மானிக்க வேண்டும்"


மக்களைக் கேட்டா காட் ஒப்பந்தத்தில் கையெழுத்து வைத்தீர்கள்? மக்களைக் கேட்டா யுத்தம் நடத்துகிறீர்கள்? அது சரி பாணின் உண்மைவிலை 11 ரூபா அதை 6 ரூபாவுக்கு விற்பதால் 5ரூபா மானியம் 7,000 கோடி நட்டம் ஏற்றடுத்தியது எனின், ... செலவு செய்யும் மாவின் வருட பெருமானம் 15,400 கோடி ரூபாய் அது சரி உங்கள் வருட பயட் எவ்வளவு? உணவுக்கு ஒதுக்கும் தொகை எவ்வளவு? ஏன் உலக சந்தையென அழுவான் காட் மற்றும் உலக வங்கிக்கு எல்லாம் ஆடாது சுய பொருளாதாரத்தைக் ; கட்டக் கோருவது தேச பக்தி இல்லையோ? அது பயங்கரவாதமோ?

"நான் கடந்த நாட்களில் கொரியாவுக்கு போயிருந்தேன் அங்கு 4 மணித்தியாளங்கள் மட்டுமே உறங்க முடிந்தது. இதனால் தடிமல் காச்சல் ஏற்பட்டது."

அம்மையாருக்கு அனுதாபம் பெறவைக்கும் ஆடம்பர ஒப்பாரியை விட ஒரு நிமிடம் கூட உறங்க முடியாமல் குளிரிலும், நுளம்புக் கடியிலும், வீதியோர சாக்கடை நாற்றத்தில் சகிக்க முடியாது வாழும் பல லட்சக்கணக்கான சொந்த மக்கள் பற்றி ஆடம்பர அம்மையாருக்கு தொரியாது. அவர்களது தலையிடி தலையிடியே அல்ல. அதைப்பற்றி அம்மையாருக்கு தெரியாதது ஆச்சாரியமில்லை அல்லவா?



www.tamilarangam.net



# சனநாயக சந்திரிகாவின் மிரட்டும் சனநாயகமும், சனநாயகம் பேசும் பேசும் பத்திரிகைகளும்


"சில பத்திரிகை நிறுவனங்களை மூடவேண்டிய நிலை ஏற்படலாம்" என சந்திரிகா சனநாயகத்தை பேணும் வகையில் எச்சரித்துள்ளார்.


வெகுசனத்தொடர்பு அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா "வெகுவிரைவில் செய்தித்தணிக்கையை நீக்குவோம். ஆனால் போர் முனையில் நடை-பெறும நிகழவுகளின எதிரொலியாக நாட்டின் ஏனைய பகுதிகளில் எதிர்வி ளைவுகள் தோன்றாதிருப்பதை உறுதி செய்வதில் பத்திரிகை ஆசிரியர்களும் பிரசுர கர்த்தாக்களும் இருக்கும் தார்மீக பொறுப்பை நீக்குவதாக இது அர்த்தப்படுத்தக் கூடாது." எனவும் எச்சரித்துள்ளார்.

யுத்தப்பிரதேச தோல்விகள், படுகொலைகள் மக்கள் விரோத நடவடிக்கைகளை பிரசுரிக்க கூடதது என சனநாயக சந்திரிகா அரசு எச்சரிக்கிறது. இலங்கை பத்திரிகை ஆசிரியர் அமைப்பு சநதிரிகாவுககு பதில் கூறி இனவாதத்தைப் பாதுகாப்பதைப் பார்ப்போம்.

"பாதுகாப்புப் படைகளின் நலன்களுக்கு விரோதமான வகையில் எதிரிக்குச் சேவைசெய்யக்கூடிய வகையிலான செய்திகளை பிர-சுரிப்பதன் மூலமாக போர் முயற்சிகளை மலினப்படுத்துவதற்கும் அனுமதிக்கும் அளவுக்கு எமது நாட்டுமக்கள் விவேகமற்றவர்களல்லர்."

சண்டையின் படுகொலைகள், மக்கள்விரோத நடவடிக்கைகள். இன அழிப்புக்கள் எல்லாம் அம்பலப்படுத்துவது இந்தச் சங்கத்தின் பார்வையில் பாதுகாப்புப் படைகளின் நலனுக்கு விரோதமானது. பெரும தேசிய இனவாதத்திற்கு பாதகமானது. தமிழ்த் தேசிய விடுதலைக்கு சாதகமானது. பத்திரிகை சனநாயகம் என்னவெனப் புரிகிறது. இதை சனந-ாயகம், சமாதானம் பேசும் பல்கலைக் கழக பேராசிரியர்கள், பத்திரிகைக் கனவான்கள் புரிந்துகொண்டால் நல்லது. இல்லையென்றால் அவர்களும் இதன் வாரிசுகளே!





# சமாதானத்தையும் சனநாயகத்தையும் மீட்கப் புறப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் புலம்பல்

சரிநிகர் 98ல் யாழ் பல்கலைக்கழக கடந்தகால விரிவுரையாளர் ராயன் ஹூஇல் சரிநிகா, விரகேசரி ஆகிய இரு பத்திரிகைகள் தொடர்பாகவும் அவர் இவ்வாறு எழுதுகின்றார்

"இந்தப் பத்திரிகைகளின் நிலைப்பாட்டை நான் பல வருடங்களாக அவதானித்து வருகின்றேன். அவர்கள் எதைப் பிரசுரிப்பார்கள் எதைப் பிரசுரிக்கமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களது ஆசிரியர்பீட அலுவலக அறைக்கட்டுக்குள் என்ன நடந்துவருகிறது என்பது தொடர்பாகவும் எனக்குக் கொஞ்சம் தெரியும்."


என ராவய பத்திரிகை வெளியிட்ட Counter Point என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ளார். ராவயவில் உள்ள ஆசிரியர் மனோரஞ்சன், மற்றும் Counter Point ல் உள்ள பல்கலைக்கழக ஆசிரியர் ஆதிக்கம் மொத்தத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியத்தை எதிர்த்து எழுதும் தமிழ்த் தேசிய இனவாதிகள். இதில் வேடிக்கை என்னவென்றால் சரிநிகரை மட்டுமன்றி வீரகேசரியையும் இணைத்ததே.

வீரகேசரி லாபநோக்கம் கருதி இயங்கும் ஒரு பத்திரிகை. எல்லாவித சீரழிவுக்கும் அதில் களம் விரிப்பார்கள். இருந்தபோதும் எம் போராட்டத்தில் தமிழ்த் தேசியம் மீதான இனவாதத் தாக்குதலை இனவாத ஏற்பை ஆட்சி எல்லைக்குள் நின்று எதிர்ப்பவர்கள். இந்த எதிர்ப்பு புலிசார்பு என்று கருதும் கூல், மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மற்றும ராவய மனோரஞசன் போன்றோர் உண்மையில் சனநாயகம், சமாதானம் என்ற பெயரால் பெரும் தேசிய இனவாதத்தையும். ஏகாதிபத்திய இலங்கை நலன்களையும் காப்பாற்ற தமிழ்த் தேசியத்தை அடகுவைக்கக் கோரும் மாஃபியும் மோசடியுடன் கூடிய கயவர்களே.



**அனைத்துவித திரிபுவாதங்களுக்கும் எதிராக 'சமர்'. இது ஒரு மக்கள் பத்திரிகை**

'Samar' Issue No 20 France
அரசியற் தத்துவார்த்த விமர்சன ஏடு



# சிறையிலிருந்து எழுதும் கடிதம்

அம்மா
நண்பர்கள் என்னைத்தேடி வந்து
கதவிலே தட்டும் போதெல்லாம்
தாயே, நீ வெம்பிக் கண்ணீர் மல்குவதை
எண்ணி நான் வேதனைப்படுகிறேன்

ஆனால் வாழ்க்கையின் சிறப்பு என்
சிறையிலே பிறக்கிறதென்று
நான் நம்புகிறேன் அம்மா.

என்னை இறுதியில் சந்திக்க வருவது
ஒரு குருட்டு வௌவாலாய்
இருக்காதென்றும் நம்புகின்றேன்
அது பகலாய்த்தான் இருக்கும்
அது பகலாய்த்தான் இருக்கும்

-சமீ ஹ் அல் காசீம்-
நன்றி:- பலதீனக் கவிதைகள்.

'Samar'
87,Rue de colombes
92600 Asnieres sur seine
FRANCE

Jan 1997

உழைக்கும் மக்கள் இசைக்கும் ஒலி நாடாக்கள், மற்றும் எல்லாவித முற்போக்கு நூல்களுக்கும் சமர் ஐ நாடுங்கள்!!



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்